T
6590

உ

முருகக்கடவுள் துணை.

யூகிமாமுனிவராற்செய்யப்பட்ட

# வைத்தியசிந்தாமணி.

இ°°து.

திருமயிலை.

அல்லமாப்பிரபுமடம்குழந்தையானந்தசுவாமிகளது

சிஷியவர்க்கத்துள் ஒருவராகிய

பிட்சைப்பாக்கம்-கணிதாதிய சகலசாஸ்திரபண்டிதர்

மார்க்கலிங்கநாயனார்

அவர்களால்

பலபிரதிகளைக்கொண்டு ஒருவாறு பரிசோதிக்கப்பட்டு

..........

புரசைபாக்கம்.

ஏழுமலைப்பிள்ளையவர்களது

விவேகவிளக்கஅச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1890

உ

முருகக்கடவுடுணை.

யூகிமாமுனிவராற்செய்யப்பட்ட

# வைத்தியசிந்தாமணி.

(*)

காப்பு.

விருத்தம்.

ஆனைமுகன்றன்பாத முருகன்பாதம்
அத்தியுரித்திடைதரித்த வையர்பாதம்
வானையுமையாள்பாத மாலின்பாதம்
வயிரவன்றன்பாதமஹா லக்ஷ்மிபாதம்
கானனையநாதர்கள் ரிஷிகள்பாதம்
கமலத்தில்வீற்றிருந்த வாணிபாதம்
கோனனையகுருமுனிதன் பாதம்போற்றிக்
கூறுவேனாயுருவே தத்தைத்தானே.

நூல்.

தானானநால்வேதத் தொப்பாய்நின்ற
தாக்கானவாயுருவே தத்தோடைந்தாம்
தேனானசிருஷ்டிகுலத் துற்பவித்த
தேவனாந்தன்வந்திரி சொன்னநீதி
வானானவாகமத்தை மேதினிக்குள்
மருவியேயுரைத்திடவே வண்மையாக
வேனானவயித்தியசிந்தா மணியிலுள்ள
விபரமெல்லாம்வெளியாகச்சொல்லுவேனே. (க)

சொல்லிடவேதேவிக்குச் சதாசிவன்றான்
சொல்லவேதேவியு நந்திக்குச்சொல்ல
நல்லிடவேநந்திதன் வந்திரிக்குச்சொல்ல
நயமுடன்றன்வந்திரி யசுவினிக்குச்சொல்ல
அல்லிடவேயசுவனியாந் தேவர்தாமும்
அகஸ்தியருக்குரைத்திடவே யம்முனீந்திரன்
புல்லிடவேபுலஸ்தியருக்குபதேசிக்கப்
புலஸ்தியருந்தேரையற்குப் புகன்றிட்டாரே. (உ)

புகன்றிட்டார்தேரையனுமுநிவனுறனும்-பூதலத்தில் யூகியாமெனக்குச்சொல்ல, உகன்றிட்டயூகியென்றமுநியாம்நானே - உலகத்தோர்பிழைத்திடவென்றுரைக்கலானேன், வகன்றிட்டவடமொழியைபிரித்துப்பார்த்து-மகத்தானபெரியோரைவணங்கிக்கேட்டுத் துகன்றிட்டசூத்திரத்தின்சூக்ஷம்பார்த்துத் துறைபெல்லாஞ்சோதித்துச்சொல்லுவேனே. (௩)

## தத்துவவிதி.

சொல்லியதோர்விபரமெல்லாந்தூய்மைகேளாய்-சூக்ஷமதாம்பஞ்சபூதத்தின்கூறும்,தெல்லியதோர்தசநாடிசத்ததாது- திரீநாடித்தசவாயுசு பேதங்கள்,தல்லியதோர்சன்னியொடுருன்மஞ்சூலைதாக்கானவாதமொடுபித்தஞ்சிலேஷ்மம், மெல்லியதோர்மேகம்நீரிழிவுகுஷ்டம் - மிக்கானபாண்டொடுகரமாலைகேளே. (௪)

கேளுமகோதரங்கிராணிபவுத்ரமூலம்-நெடியானவஜீரணங்கள் விக்குழிவிக்கல், வேளுமேபலபலவியாதிநாமம்-விளங்குகின்றசாத்தியமுமசாத்தியந்தான், பாளுமேபண்டிதரின்குணமும்ரோகி-பக்குவமும்ரசவர்க்கமுவிவர்க்கம், காளுமேகடைசரக்கின்குணமுந்தானும்- கஷாயமொடுசூரணங்கள்கர்க்கந்தானே. (௫)

கர்க்கமொடுவடகங்கள்ரசாயனங்கள் - கடினமாம்லேகியங்கள்கிருதந்தானும், வர்க்கமொடுதைலங்களெண்ணெய்நெய்தான்- மாத்திரையும் பற்பங்கள் செந்தூரந்தான், புற்பமாம்புடத்தைலந்திராவகங்கள்- புகையோடுபொட்டணமும்பூச்சுநஸ்யம், அற்பமாமஞ்சனங்கள்கெண்டூஷங்கள்-ஆகமாம்விரோசனத்தினடவுமாமே (௬)

அடவானவாயுருவேதந்தன்னைத்தான்ஐயருமேயம்மைதனக்கருளிச்செய்ய, நடவானவம்மையுநந்திக்குச்சொல்ல-நந்தியுமேசிஷர்களுக்கருளிச்செய்யத்தடவானதன்வந்திரியசுவினியாமெனக்கு-சமாசமாமகத்யமுநிதேரையற்குச்சொல்லநிடவானரிஷிதேவர்சொன்னநூலின்-நேர்ப்பெல்லாம்விபரமதாய்நிகழ்த்தினேனே. (௭)

## பஞ்சபூதம்

நிகழ்ந்தசீர்ப்பிரிதிவு மப்புதானும்- நேரான்தேயுவொடு வாய்வுமாகும், அகழ்ந்தவாகாயத்தோடைந்துபூதம் - அரிதான்பிரிதிவுமண்ணுமாகும், தகழ்ந்தவப்புசலமாகும்நெருப்புந்தேய்வு- தாக்கானவாயுபதுகாற்றுமாகும், இகழ்ந்தவாகாயமதுசத்தமாகும் - ஏற்றபிரிதிவுபொன்னிறமதாமே. (அ)

## பஞ்சபூதத்தின்வர்ன்னம்

ஆமேதானப்புநிறம் படிகமாகும்- அக்கினியினிறந்தானே சிவப்புதாகும், காமேதான் வாய்வுநிறங்கறுப்பதாகும் - கார்மேகப்புகை

நிறமாமாகாயந்தான் தேமேதான்வர்ன்னமுமிப்படியேயாகும், சேர்ந்து நின்றதெய்வத்தின்றலமே கேளாய், போமேதான்பிரிதிவுக்குத்தேவனை பிர்ம்மா-பெரியசுவாதிஷ்டானமிருப்பர்தாமே. (௯)

பஞ்சபூதத்திற்குத் தெய்வத்தலம்.

இருப்பானவீடதுமூலாதாரமாகும்- இதழாறுபிரிதிவின்பீஜம்நவ்வாம், மருப்பானமயிர்நரம்பு தசைதோலெலும்பு-மாசற்றவப்புவிற்கு விஷ்ணுதெய்வம், செருப்பானமணிபூர வீடுமாகும் சிறுபிறைரூபம்போற்பத்திதழ்தான்சுற்றி, அருப்பானவப்பினுக்குப்பீசம்மவ்வாம்- அதின்கூறைத்தான்கேளுமதிரஞ்சியே. (௰)

சீயானநீரோடுமூளைமச்சைத்-தேய்வுக்குருத்திரன்றான் றெய்வமாகும், மூயானமுக்கோணமகத்தாம் வீடுமுயற்சியாயீராறுமிதழ்நான்சுற்றில், தேயானசிவ்வதுவுந்தெய்வுபீசம்-சிகையாமவிதழுக்குட் சேர்ந்துநிற்கும், ஆயானவாகாரந்துஞசல்போகம் அவருடையகூறதுதான பயமுஞ்சோம்பே. (௰௧)

சோம்பானவாயுவுக்குமஹேசன்றெய்வம்- சோடசமாமிதழோடேவிசுத்திவீடு, ஆம்பானவாயுவுக்குவவ்வுபீசம்- அவருடையதன்கூறுடத்தனிற்றல், வாம்பானவாடலோடிருத்தலோடல்- வசையானவறுகோணங்குடியிருப்புத், தேம்பானவாகாயமாகனைக்குள்ளே- சிகையாமவிரண்டிதழோடிருக்கும்பாரே (௰௨)

இருக்கின்றவாக்கினைபின்கூறுகேளாய்- ஏற்றகாமக்குரோதலோபமோகமமருக்கின்றமதமுமாற்சரியக்கோபம்- வானுக்குச்சதாசிவமேதெய்வமாகும், பிருக்கின்றவாகாசபீசம்யவ்வாம்- போனவைம்பூதப்பிரிவுமாகும், தெருக்கின்றதசநாடிச்செயலையெல்லாம்- செப்புகிறேன்றெளிவாகச்சிறந்துகேளே. (௰௩)

தசநாடிகளின்குணம்.

சிறந்தஇடைபிங்கலையுஞ்சுழிமுனையினோடு- சிறப்பானகாந்தாரியத்திச்சிங்குவையாம், பிறந்தஅலம்புருடனொடுகுகுதன்றானும்-போனசங்குனியும்வயிரவன்றான், திறந்தவிவைபத்துந்தான்றசநாடியாகும்- திரிமூன்றுநாளையினிலொடுங்கும்பாரு, மறந்தஇடைபிங்கலையுஞ்சுழியினையொடுமூன்றும்-வாதத்திலொடுக்கமெனவகுக்கலாமே (௰௪)

வகுக்கவிதின்குணங்கள்மந்தமொடுகுருத்தி- மலக்கட்டுவாதத்தின்கூறுமாகும், அகுக்கவேகாந்தாரியத்திசிங்குவையாம்-அலம்புருடனிதுநானும்பித்தத்தின்கூறு, இருக்கவேயிதின்குணங்களுஷ்ணந்தாகமுடயர்மோகமுழலைவாய்வும்மேனிக்கும், நருக்கவேநாடிபடபடத்துடிக்கும்-நாசமாம்பயமோடுகோபமாமே. (௰௫)

ஆமேதான்குகுதன்சங்குநியும்வயிரவனும்-அரிதானசிலேட்டுமத்திலடங்கும்பாரு,மாமேதானிதின் கூறுவாயழற்றான்பரியும்- மலர்விழியுங்குழிந்திருக்குமுகமும்வேர்க்கும், தேமேனென்சடைக்குந் திசைகலங்கியிருக்கும் சிறுகாலுந்தண்ணீர்தா னுழற்றிவிக்கும், பாமேதான்பத்தினிடப்பண்புமாகும் பரிகாரஞ்செயுமவர்க்குப்பரிசிதாமே. (௰௬)

பரிசானவிடையிறெடு பிங்கலையுமொக்கப்-பயின்றதோர்குதத்தினடிமூலம்பற்றிச்-சுறிசானபாகங்கண்மாறிமாறிச்-சுழிமுனையின்றன்னேடுநெட்டிட்டேறும், திரிசானதிருவணைக்கால்போலேமாறிச்- சிரசளவுதான்முட்டித்திரும்பமீண்டு, விரிசானமூக்குநடுப்புருவ நெற்றி-மீண்டுமேதிரும்பியந்தமூலம்புக்கும். (௰௭)

புக்குகின்றகாந்தாரிநாபிபற்றிப்-பொருநாம்போ ரேழினுக்கும்ரூபமாகிச், சிக்குகின்றதெசதாயமேலேயோடிச்-சிரசளவுநீங்கியேகண்டம்புக்கி, நக்குகின்றநாவடியிற்சிறந்திருக்கும்- நலமானவத்திசிங்குவையிரம்டும், விக்குகின்றமூலத்தினமேலேபற்றி-மேலேதியிரண்டுசெவிதனைத்தொட்டாமே. (௰௮)

தொட்டேறிநாம்பெல்லாங்கதந்துவீசித்- துறையானநயனமிரண்டினிலேநிற்கும், மட்டேறியலம்புருடன்வயிரவன்றான்-மாசற்றவடிமூலந்தன்னைப்பற்றிக், கட்டேறியிரண்டுகன்னந்தனிலேநிற்கும் - கனிவானசங்குநியுங்குகுதன்றானும். நட்டேறிநாபித்தானத்திற்றேன்றி-நலமானகுதமளவுநடிப்பர்பாரே. (௰௯)

பார்க்கவேசடந்தான்செனிக்கும்வாறு-பகர்சுக்லச்சுரோணிதத்தினேடேகூடி, மூர்க்கபவளப்பையின்முத்துதிர்ந்தாற்போல- முனையறுகுநுனிபனிப்போற்சுரோணிதத்திற்சேர்ந்து, தார்க்கச்சுரோணிதந்திரண்டுதன்ரூபமாகித் - தமர்வாசற்றனைமூடும்வாயுதானும், வேர்க்கவேவெலியைப்போல்வளைந்துகாக்கும்-விந்துவுடன்பிராணவாயுவிளக்குமாமே. (௨௰)

விளக்குகின்றவபானவாயு வெளியினிற்கும்-விந்துவுடன்பிராணவாயுவுடல்கலக்குங்களக்குகின்றவுதானனதுகருவளக்குங்கருவுக்குள்வியாதியுமூன்றுங்கலக்கும், இளக்குகின்றவைந்தாநாள்குழப்போலாகும்- ஈரைந்தாநாள்தனிலேதிரளும்பாரு, முளக்குமூவைந்தாநாள் முட்டைபோலாம்-மூநற்றிங்கள்கம்பமாய்முனைபோலாமே. (௨௧)

ஆமோண்டாந்திங்கடலைமுதருதோன்றும்- அடுத்தமூன்றாந்திங்களாவிரல்கைகளாம், நாமேநாலாந்திங்கள்பதமூக்குண்டாகும்- நலத்த

வைந்தாந்திங்கள்செவிநாவுகண்ணும், வாமேயாறுந்திங்கணாகங்களாகும் மருவியவேழாந்திங்கண்மயிரெலும்புநரம்பாம், தாமேதான்சடமோடுசுலமலங்கள்-தயங்கியவோர்தாதுவொடுமூச்சுண்டாமே. (உ௨)

மூச்சுண்டாமெட்டினிற்றாயுண்டசார- முன்னையானகதிர்போலவருவிபாய்ந்து, தோச்சுண்டகபாலத்தின்வழியேசென்று-சுத்தசலம்பிள்ளைக்குத்துடர்ச்சியாகும், பேச்சுண்டாமொன்பதிலேயறிவுதோன்றிப்பிறப்பித்தோன்றனைநினைத்துதவமேசெய்து, கூச்சுண்டாங்கும்பிட்டேயருள்வாயென்றுங்-கொடியபத்தாந்திங்கட்கும்பார்வையாமே. (உ௩)

பார்வையாமபானன்கீழ்நோக்கிவைக்கும்- பாலகனும்பார்தனிலேபயின்றபின்பு, ஆர்வையாய்முன்னறிவுமசதியாகி-அழுதுகொண்டுவாத்மத்திற்கருவிபாசம், மார்வையாமாயாசத்திகிரியாசத்தி மயக்கத்திலறிவழிந்துநல்வினைதீயாம், கோர்வையாய்விதியும்வந்துற்பவித்தாகக்கொடிபடர்ந்தசுனைபோலச்சென்மமாச்சே. (உ௪)

சென்மமாஞ்சரீரந்தொண்ணூற்றாறங்குலமாம்- செய்கின்றவவரவர்கள்கையாலேதான், தன்னமாமாசமிரத்தமாங்கிசமுமேதை - தசைமச்சையோடுசுக்லந்தாதேழாகி, உன்னமாமுருவென்னுஞ்சரீரமாகி-உயர்சட்டைசஞ்சேர்ந்துரோகமாகி, வன்னமாம்வாதபித்தசேட்பமாகி-வருகின்றசடத்தினிடவண்மைகேளே. (உ௫)

வண்மையாம்வாதமதுமுப்பதாண்டு- மட்டுமேவளருகின்றகாலமாகும், பெண்மையாம்பித்தமதுமுப்பத்துமூன்று-பேணியேவளருகின்றகாலமாகும், திண்மையாஞ்சேட்பமதுமுப்பத்தேழு-செயலோடுவளருகின்றகாலமாகும், உண்மையாய்ச்சடமதனுக்கொருநூறாண்டு- உகாந்த.மாங்கருவிகளினுறுதிகேளே. (உ௬)

உறுதியாம்பூதாதியோரைந்தாகும் - உயர்கின்றபொறியைந்துபுலனைந்தாகும், கருதியாங்கன்மவிந்திரியமைந்தும்- கடிதானஞானவிந்திரியமைந்தும், திறுதியாந்திதாயகரணம்நான்கும்-திறமானவறிவொன்றுதசநாடிபத்தும், மறுதியாம்வாயுவதுபத்துமாகும் மகத்தானவிஷயமஞ்சுகோசமஞ்சே. (உ௭)

அஞ்சவேயாதாரமாறுமாகும் அரியமண்டலமூன்றுமலமூன்றுகும், தொஞ்சவேதோஷமுமூன்றீஷணைதான்மூன்று-தோதகமாங்குணமூன்றுவினையிரண்டாம், தஞ்சவேராகமெட்டுவவத்தையைந்து- தயங்கிய

தோர்கருவிகாடான்றெண்ணூற்றூறு, ஒஞ்சவேயொவ்வொன்றாய்விரித்துச்சொல்வேன்-உறுதியாமபூதாதியுரைக்கக்கேளே. (௨௮)

உரைக்கவேபிரிதிவுமப்புதேய்வும் உரிமையாம்வாய்வோடாகாசமாகும், புரைக்கவேபூதங்தானஞ்சதாச்சு- பொறியைந்தின்விபரமதைப்புகலக்கேளாய், திரைக்கவேசுரோத்திரமுந்தொக்குசட்சு-சிங்குவையாக்ராணமிவையாகவைந்தும், துரைக்கவேசுரோத்திரந்தான்செவியுமாகும்-தொக்காவதுடம்பென்றேசொல்லலாமே. (௨௯)

சொல்லவேசட்சுதான்கண்ணுமாகும் - தூய்தானசிங்குவைநாக்காக்ராணமூக்காம், புல்லவேபுலனைந்தும்புகலக்கேளு-புகழானசத்தமொடுபரிசம்ரூபம், நல்லவேரசகெந்தமாகவைந்தாம்-நலமானசத்தமதுகேள்வியாகும், செல்லவேசெவியினிடக்கூறதாகும்- செய்பரிசஞ்சுகதுக்கமறிதல்காணே. (௩௰)

காணவேதேகத்தின்கூறதாகும் கண்ரூபமாவதுதான்காண்பதாகும், நாணவேகண்ணினிடக்கூறதாகும்- ரசமாவதறுசுவையையறிதலாகும், பூணவேநாக்கினிடக்கூறதாகும்- புகல்கெந்தந்தூர்க்கந்தநற்கந்தமறிதல், தோணவேமூக்கினிடக்கூறதாகும்-சுகமானபொறியைந்தின்கூறுந்தானே. (௩௧)

தானானகன்மவிந்திரியமைந்தின் - சார்பதனைச்சாற்றிடவேவாக்குபாதம், பானானபாவியபாயுருமுபஸ்தம் பகரைந்தின்பிரிவதுதான்வாக்குவாயாம், கானானபாதமதுகாலேயாகும் கனமானபாணியதுகையுமாகுமூனானபாயுருதானபானமாகும்-உபஸ்தமதுலிங்கமெனவுரைக்கலாமே

ஆமென்றகன்மவிந்திரியமைந்தின்-அடைவெல்லாஞ்சொன்னதன்பினப்பாற்கேளாய், நாமென்றகன்மேந்திரியவிஷயமைந்தை - நவின்றிடவேவசனமொடுகமனமாகுந், தாமென்றதானமொடு விசர்க்கமானந்தம்-தாக்காகவிதைந்துசாற்றினேனான், பாமென்றவிதனுடையவிபரமெல்லாம்-பரிவாகவொவ்வொன்றாயுரைக்கின்றேனே. (௩௨)

உரைக்கதுவேவாக்கதுதான்வசனிப்பாகும் உறுதியாம்பாதமதுநடத்திவைக்கும், பரைக்கவேபாணிகையால்வழங்கிவிக்கும்- பாயுருதான்மலந்தனையேபிறித்துவைக்கும், துரைக்கவேயுபஸ்தமதுசுக்லமூத்திரம் - தரிசாகவிடுவிக்குஞ்சுப்ரமாகும், நரைக்கவேகன்மேந்திரியவிஷயமைந்தின்-நலமதனைநவின்றிடவேநண்பாமென்னே. (௩௪)

என்னவேகாரணமதுநாலதாகும்- ஏற்றமனப்புத்தியாங்காரஞ்சித்தம், நன்னவேநாவினிடவிரிவைக்கேளாய்நலத்தமனமாவதொன்றைத்தா

ணினைக்கும்,பொன்னவேபுத்திதானதனைவிசாரிக்கும்-போரானவாங்கார
ங்கொண்டெழுப்பிவைக்கும், தென்னவேசித்தமதைச்செய்துமுடிப்பி
க்கும்சிறந்தவந்தக்கரணந்தானான்குமாச்சே (௧௫)

ஆச்சுதறிவொன்றின்விசாரணையைக்கேளாய்- அனைத்தையுமேபா
ர்த்திருந்தங்ககண்டந்தானாய்க், கோச்சுதேகுருவாய்த்தத் துவங்களாகி
க்கொடியதீவினையாய்நல்வினையுமாகிப், போச்சுதேபெண்ணாய்ப்பிரபஞ்
சமாகிப்-புகலரியநிர்க்குணமின்மலமுமாகித், தீர்ச்சுதேசிவமாகிச்சீவமா
கிச்செழுஞ்சுடரின்கதிரொளியாய்ச்சிறந்தவாறே (௧௬)

வாறானதத்துவமோர்முப்பத்துந்தான்- மன்னியதோராத்மதத்து
வமேயாகும், நாறானநாடிபத்தின்விபரங்கேளாய்-நயந்தவிடைபிங்கலையு
ஞ்சுழிமுனைகாந்தாரி,ஆறானவத்திசிங்குவையுமலம்புருடன்- அருங்குகு
தன்சங்கினியும் வைரவனீராந்து, மூறானவிதன்பிரிவை முன்னேசொ
ன்னேன் மூர்க்கமாம்வாயுபத்தின்முறைமைபாரே. (௧௭)

முறமையாம்பிராணனோடபானன்வியானன் மூர்க்கமாமுதானனொ
டுசமானனாகன், திறமையாங்கூர்மனொடுகிரிகரனானன்-தேவதத்தனொ
டுதனஞ்சயனுமாகும், பிறமையாமிதினபிரிவுபிராணவாய்வு- பெருமூல
தாரத்தின்கட்டோன்றித்தான், உறமையாமசவையெனுமந்திரத்தாலோ
ங்காரமுதலெழுத்தையுன்னித்தானே, (௧௮)

உன்னியேமேலெழுந்துபனிரண்டங்குலந்தான்- உயர்ந்தவெட்ட
ங்குலந்தான்மீளவாங்கி, நன்னிநாலங்குலந்தான்பாழிற்பாயும்- நலமான
குணமெல்லாம்பிராணவாய்வு, பன்னவேநீல்வர்ன்னந் தேவதைதான்சந்
திரன்-பலபலவாம்பொசிப்பெல்லாஞ்சிரணமதாக்கும், முன்னநாழிகைக்
குமுந்நூற்றறுபதுசுவாசம்-முயர்ந்தநாளொன்றுக்குமூச்சைக்கேளே( )

நாளொன்றுக்கிருபத்தோராயிரத்தறுநூறு- நலமானசுவாசந்தானெ
ழுந்திருக்கும், கோளொன்றிப்பதினாலாயிரத்துநானூறு- குவித்துமூலா
தாரத்துள்ளொடுங்கும், பாளொன்றியேழாயிரத்திருநூறுசுவாசம்- பா
ழிலாபாய்ந்திடுமென்றறிகப்பின்னை,வளொன்றியிதனையேயுட்சாதித்தா
லெப்போதும்பாலராயிருக்கலாமே. (௨௦)

இருக்கவேஅபானத்தினியக்கங்கேளாய்-வற்றசுவாதிஷ்டானத்து
ற்பத்தியாகும், மருக்கவேகீழ்நோக்கிமலசலத்தைத்தள்ளும்-வாகாகநிற
ந்தானும்பச்சையாகும், அருக்கவேயாசனத்தைச்சுருக்கிவைக்கும்-அன்
னசாரத்தையெல்லாஞ்சேரவைக்கும், திருக்கவேதேவதை[illegible]
ன்-திறமானவியானனிடச்சிறப்பைக்கேளே. (௨௧)

சிறப்பானவியானைதுதோனிமேலநின்று - திகழெழும்பத்திராயிரநாடியிலுஞ்சென்று,தறுப்பானசாவசாந்தனிமேலநின்றுதானீட்டல்முடக்கல்பண்ணிப் பரிசங்களறியும், அறப்பானவன்னசாரந்தன்னைத்தான்- அங்கங்கே நிறைப்பித்தாக்கைகையாகூறிக்கும், பறப்பானதனுபாவவர்ன்னமாகும்வீசினிற்றெய்வந்தானேமனமே. (௪௨)

எமனுமுதானனிடவேற்றங்கேளாய்-எழிலானவுதாவக்கினியெழூட்டிப், பூமனுமன்னசாரந்தனைத்தான்- பொருந்தவேசமீபித்து நிறுத்திவைக்கும், காமனுவெடுப்பித்துங்கலக்கிவைத்து கலக்கியேவருந்திவைக்கும்வளப்பமாகும், வீமனுமின்னிடவர்ணமாகும், விளங்கியதோசக்கினிதான்றெய்வமாமே. (௪௩)

ஆமென்றசமானனிடவாண்மைகேளாய்- அடிகாபிபாதாங்கஞ்சமன்கொண்டே, வாமென்றவாய்வுகளைமிஞ்சொட்டாமல்-மடக்கியேசமன்செய்து மருவப்பண்ணும், தாமென்றவறுசுவைவைத்தண்ணீரன்னம் சமன்செய்துசரீரமெல்லாஞ்சாரப்பண்ணும்- வாமென்றவர்ணமது புட்பராகம்-மகத்தானதெய்வமாதித்தனுமே. (௪௪)

தெய்வமாநாகனிட சிறப்பைக்கேளாய்செயலான சகலகலையாக்கிவைத்து, பைவமாய்ப்பாடிவைக்குங்கண்ணை விழிப்பிக்கும்- பாங்காகச்சிமிளிக்கும்ரோமமசைவிக்கும், பெய்வமாம்பொன்னிடவர்ன்னமாகும்- பெரிதானதெய்வந்தானனந்தனுகும் கொய்வமாங்கூர்மனிடக்குணத்தைக்கேளாய்-கொடியமனந்தனினின்றுநிமைக்கொட்டாமே (௪௫)

நிமைக்கொட்டுங்கொட்டாவிதானுங்கொள்ளும் நோகவாய்மூடும்பெலனுண்டாக்கும், கணமக்கொட்டுங்கண்விழிக்குமூடப்பண்ணும்காஞ்சியெல்லாங்காண்பிக்கும்விழிநீரோடும், விமைக்கொட்டும்வர்ன்னமதுவெளுப்பதாகும்-மேலானதெய்வந்தான்விஷ்ணுவாகும், கமைக்கொட்டுங்கிருதராதியின்குணந்தான்உகசிநாவுநாசிதனிற்கசிவுண்டாமே (௪௬)

கசிவுண்டாங்கடும்பசியின் கன்மஞ்செல்லும்- கண்ணியேபிருத்தலொடுபோதலாகும், துசிவுண்டாய்தும்மலோடிருமலுண்டாம் சுயமான வர்ன்னமதுகறுப்பதாகும், தெசிவுண்டாந்தெய்வமதுசிவன்றானாகும்திரோதையிற் கூறுந்திறமுமாகும், குசிவுண்டாந்தேவதத்தன்குணத்தைக்கேளாய்-குடிலமாய்ச்சோம்புமுறித்திடுதலாமே. (௪௭)

முறித்திடுதன்மொழிக்கும்போ முயற்சியாகி - முகுளிதமாய்க்கண்ணினைவே யோடியுலாவித்துக், கரித்திடுதல்சண்டைகொளற்று

க்கல்பேசல்சண்டாளக்கோபத்தையுண்டுபண்ணல், குறித்திடுதல்குருதவ குய்யத்தானத்தன்றிக்கூர்ந்ததெய்வந்தேவேந்திரன்பதிகவர்ன்னம், தறித்திடுதற்றனஞ்சயனைச்சாற்றக்கேளாய்- சாங்கமாய்மூக்கிலின்றாசடிக்குந்தானே. (சஎ)

தடித்துமேஉடம்பெல்லாம்வீங்கப்பண்ணும்-தந்திரமாயக்கன்னத்திற்சமுத்ரம்போலத், திடித்துமேசுந்தரமாய்க்கோஷமாகித்திரண்டுமேதுஞ்சியகாலந்தனிற்றான், வடித்துமேவாயுவெல்லாம்போனபின்பு-வனமானதலைவெடிக்குமூன்றுநாளில், அடித்துமேதலைவெடித்தாலப்பாற்போகும் அதின்வர்ன்னநீலவர்ன்னமறிந்துகொள்ளே. (சகூ)

அறிந்ததோர்தெய்வமதுதன்வந்திரியாகும்- ஆகவிந்தவீரைந்துமாதியாம்வாயு. வெறிந்ததோர்விஷயமைந்தின்விபரங்கேளாய்மீறியதேசமாவசையம்பருவசையமாகும், தறிந்ததோர் சலவசையமலவசையத்தோடு-தாக்கானசுக்கிலமாம்வசையாமைந்தும், எறிந்ததோசமாவசையன்னம்தண்ணீர் இருக்குமிடமென்றுதானியம்பிடவே. (ருப)

இயம்பிடவேபருவசையமாவதுதான்விளம்பில்- இயன்றவன்னத்தண்ணீர்தானேகமாசாய்ந்து, புயம்பிடவேபிறியுமிடமமாவசையம்புகலில்-புசித்ததெல்லாமலமாகிப்போக்குவைக்குமிடமாம், தயம்பிடவேசலவசையஞ்சாப்பிட்டநீர்தான்- தாங்கியேயிருக்குமிடஞ்சலப்பையாகும், சுயம்பிடவே சுக்கிலமாமசயஞ்சொல்லில் - சுகமானசுக்கிலப்பையென்றுசொல்லே. (ருக)

சொல்லானவிஷயமைந்தின்றொகுப்புச்சொன்னேன் - சூட்சகோசங்கொஞ்சமைந்தின்களுக்குகேளாய், அல்லானவன்னமயங் கோசமயத்தோடும்-அரிதானபிராணமயகோசமாகும், மல்லான்மனோமயமாம்விஞ்யானமயமாம், மகத்தானவானந்தமயமுமைந்து, மெல்லானவிதின்விரிவுவிளம்பக்கேளாய்-மெய்வாய்கண்மூக்கோடுசெவியுமாமே. (ருஉ)

ஆமென்றவைம்பொறியின்பிரிதின்கூறல்- அன்னமயகோசத்திலப்புவந்தணைந்தால், ஊமென்றவுண்டாம்பிராணமயகோசம்- உத்தியிதிற்றேயுவந்தால்புத்தியுண்டாம், மாமென்றமனோமயமாங்கோசமாகும்- வாயுவிதில்வந்தடைந்தால்விகாரமுண்டாம், நாமென்றஞானமயகோசமெனப்போம்-நலத்தவாதம்வந்தால்சுகமுண்டாமே. (ருங)

வந்தாலானந்தமயகோசமெனப்போய்மகத்தானகோசமைந்திலெத்தவுடலதுதான், குந்தானகோசமைந்தின்குணத்தைச்சொன்னேன்

குறிப்பானவாதாரமாறுங்கேளாய், மூந்தானமூலாதாரஞ்சுவாதிஷ்டான ம்-முதிர்ந்தமணிபூரகமுமனாகதமும்விசுத்தி, அந்தாலாக்கினையுமாதாரமா கும் அடுக்கானவாதாரத்தாண்மைகேளே. (ருச)

கேளேமூலாதாரங்குதங்குய்யத்துக்கும்-கெடியாகநடுவிருக்கும்பா னத்தின்மேல், வேளைவீணுதண்டின்கீழிருக்கும்- மிக்கநடுவேயோரங்கு லப்பிரமாணம், மூளேமுக்கோணநாவிதழ்க்கமலமாகி- முனிந்தநாவிதழ் தனிலுலக்ஷரத்தையுடைத்தாய், வாளேமுக்கோணநடுமந்திரம்ரீங்காரம் வல்லபையாஞ்சத்திவலப்பக்கமாமே. (ருரு)

பக்கமாமந்திரமும்ஸ்ரீங்காரமாகும் பகாரணதெய்வம்விக்கினேசுரன் ருன், வக்கமாமூலத்தில்வங்கென்றுநிறுத்தி- வாசியைநீமறவாமன்மாட் டியூதி ஒக்கமாமூலத்தின்கீழடியிற்றானும்- ஓங்காரக்கம்மதிலடியிற்கட் டி, இக்கமாமிருவரையுந்தெரிசித்தக்கால்- இகபாமும்வெளியாகியேநலா மே. (ருசு)

ஏறவேவெளிச்சென்றுமூலத்திதான் இதற்குமேலிரண்டாமங்குலத் தின்மேலே, கூறவேநால்வட்டமாறிதழ்த்தான் குறித்தசுவாதிஷ்டான மின்னொளித்தான், ஆறவேயாறுமட்சரமுடைத்தாய்-அதற்குள்ளே பி ரிதிவுதான்குடியிருப்பாம்-வேற்வேவேதந்தானிருக்கோடெல்லாம்-விள ங்கியதோரக்ஷரமுநகாரமாமே. (ருஎ)

நகாரமாமெழுத்ததுவும்பிரமனாகும் லவ்வானபீசமதுபிரிதிவுக்கா கும். உகாரமாமந்திரத்தையுன்னிக்கொண்டு-உயர்வாய்வைக்கும்பக்கில றிஷுவோன்றும், சிகாரமாமுப்புரிநூற்சிரசுநாலு- சிறந்தசரஸ்வதியுமங் கேதெவிவாய்க்காணும், பகாரமாய்த்தெரிசித்துப்பழக்கம்பண்ணப்-பா ருலகமயக்கமெல்லாம்பண்பதாமே- (ருஅ)

பன்மையாமாறுமங்குலத்தின்மேலே பதிந்தபிறைபோலமணிபூர கந்தான், தொன்மையாஞ்சுற்றிலும்பத்திதழதாகி - சுயம்பானவக்ஷர மும்பத்துந்தானாய், அன்மையாமப்புனுக்கிடமதாகி- அதற்குள்ளேதெ ய்வந்தான்விஷ்ணுவாகித், தன்மையாம்பக்கத்திற்சத்திலட்சுமியாம் தய ங்காதவக்ஷரந்தான்மகாரமாமே. (ருகூ)

மகாரமாமக்ஷரந்தான்விஷ்ணுவாகும்-மகத்தானமவ்வதுவுமப்புபீச ம், விகாரமாம்வேதமதுவெசுறுவாகும்-மெய்நிறைந்தவத்வமணி பஞ் சாயுதம், மிகாரமாம்லட்சுமிதான்பாகமாகி - சேர்மையாய்வாசியைத்தான் மங்கென்னநிறுத்தி, உகாரமாயூதினுலகவாழ்க்கை-ஒருநொடியில்வெ ளியாகுமூணிப்பாயே. (சுய)

ஊணியிதன்மேலிருநாலங்குலந்தான்- உத்தமமாமஞ்ஞகத்தின்வீடுமாகும், தோணியேதிரிகோணம்பனிரண்டாமிதழ்தான்- தத்தினுமே பனிரண்டக்ஷரமுடைத்தாய், சேணியேமீதயுவுக்கங்கிருப்புமாகிச்சிகாரமாமெழுத்தாகிச்சிறப்புமாகிப், பூணியேபூதமீசம்ரவ்வுமாகிப்- புகழான ருத்திரனும்புரிந்தார்பாரே. (௬௧)

புரிந்திருந்தார்சிகாரத்தில்ருத்ரன்ருத்திரியும்-புகழாகவாசிவைத்துச்சிங்கென்றாறு, கரிந்திருந்தகாயமுமோவாலையாகும்- கனிசாமவேதத்தின்கருத்துந்தோன்றும், பரிந்திருக்கவிதழ்க்குமேற் பனிரண்டங்குலந்தான்-பார்வையாய்மேலேவிளக்கிவீடு, அரிந்திருந்தவறுகோணஞ்சரடசமாமிதழ்தான்-அதிலேதானீரெட்டக்ஷரமுமாமே. (௬௨)

ஆமெனவேவகாரந்தானறுகோணநடுவே- அமர்ந்திருந்தார்மகேசுரன்மகேஸ்பரியுமாக, வேமெனவேயகர்வனவேதகதோடொக்க - மிக்கானவாயுவதுமிதழுக்குள்ளே, போமெனவேமீசந்தான்யவ்வுமாகும்- புகழாகக்கும்பகஞ்செய்துதியூதிவாமெனவேவங்கெனவுமிறுத்திப்பார்க்கவயசெல்லாமொருநாளாய்மனதிற்காணே. (௬௩)

காணவிதன்மேலீரெட்டங்குலந்தான்- கண்டமாருதம்புருவமௌனயாகி, ஊணவேயிரண்டிதழாயோங்கிநிற்கும்- உற்றுநின்றவட்சரமுமிரண்டுமாகும், ஆணவேநடுவுக்குள்யகாரநிற்கும்-ஆக்கினையின்வீடாகுமாகாசமிருப்பு, பூணவேபூதமீசம்யவ்வுமாகும்-புகழானமாணிக்கப்பிரமையவ்வே. (௬௪)

யவ்வுக்குட்சதாசிவமுஞ்சத்திநிற்கும்-யங்கென்றுகும்பித்தாலதேகசித்தியாகும், மவ்வுபாமானந்தமருவிநின்று - மகிழ்ச்சியாங்கருவிகளினிடமதாகி, அவ்வுடமைம்புலன்றனையுமறியப்பண்ணி அறிவோடுநினைவுதனின்மயக்கத்தாட்டி, உவ்வுமுள்ளபடி நடத்திக்காண்பனகேட்பனவாய்உகந்துகுருவெழுந்தருளியார்த்திப்பாரே. (௬௫)

பார்க்கவேயாதாரமாறுமாச்சு- பரிந்திட்டதத்துவங்கண்முப்பத்தாறும், சேர்க்கவேசுவதத்வமாகுங்கண்டீர்- சிறந்திருந்தமண்டலங்கண்மூன்றுங்கேளாய், ஆர்க்கவேயக்கினிமண்டலத்தினோடு- ஆதித்தமண்டலமுஞ்சந்திரமண்டலந்தான், தோர்க்கவேயிதன் சூக்ஷிதொல்லக்கேளாய்-சுருதியாமூலமென்றதுடர்ச்சிதானே. (௬௬)

துடர்ச்சியாஞ்சுவாதிஷ்டானத்தின்கீழே- சுகமாகநடுமையமணிமண்டலந்தான், முடர்ச்சியாய்முச்சுடராய்மூலமட்டும்பரவி-முனைந்தசுவாதிஷ்டானமட்டுநிற்கும், மடர்ச்சியாமணிபூரமஞ்ஞகத்தினடுவே- வினையமேவோற்சூரியமண்டலந்தானிற்கும், படர்ச்சியாமணிபூரமஞ்ஞகத்திற்படர்ந்தேறுஞ்சூரியமண்டலந்தான்பாரே. (௬௭)

பாவொன்றுறசும்மாதான்பார்க்கப்போமோ-பாங்கோடும்வாசியைநீ மாட்டிப்பாரு, வேவொன்றால்விசுத்திமேலாக்கினையின்கீழ- விளங்கியெ ழுஞ்சந்திரமண்டலந்தான்பாரு, தூவொன்றுற்றுவாதசாந்தத்தின்மட்டு ம்-சுடரொளியாயப்பிரகாசமாகிநிற்கும், மூவொன்றுன்மண்டலங்கண்மூ ன்றுமாச்சு-மூர்க்கமாமலமூன்றின்முடிவுகேளே. (௬அ)

முடியானவாணவமாமாயைகாம்யம்- முயற்சியாயிதின்பிரிவான்முடி யுமாறு, திடியானசெம்பினிற்றுன்களிம்புபோலும் - சிறுநெல்லினுமி போலுமாத்துமாவை, முடிவானமேலெழவொட்டாமற்காத்து- மூடிவி த்துத்தன்னுடெனறேகாத்திருக்கும், மடிவானமாய்கையதாணவத்தைக் கொண்டோ-வருகிறதுதெரியாமன்மடிக்குந்தானே (௬௯)

மடிக்கின்றகாமியங்கண்டத்துக்கெல்லாம்-மகிழ்ந்திடுதன்மாயையுமு ற்றுவிந்துநிற்றல், அடிக்கின்ற மலமூன்றின்செயலுமாச்சுதோஷமூன் றுவனவாஞ்சாளுவுகேளாய், நடிக்கின்றவாதபித்தசேட்பமூன்று- நலமா னவிதின்பிரிவுநாட்டக்கேளாய், வடிக்கின்றவாதமதுவாயுநிலைகலங்கி ம த்தியமாமக்கினியுமார்க்கமாமே. (எய)

மார்க்கமாம்பித்தந்தானக்கினியினிலையை- மசக்கிவைத்துமாய்கை யுடன்வருத்திவைக்கும், தூக்கந்தான்கேட்பமதுசலமிகுதியாக்கித் - து வாரங்கடோறுமிடைவிடாமனிற்கும், மூர்க்கந்தான்றோஷமிதுமூன்று மாச்சு-மூண்டேதோரீஷணைகள்மூன்றைக்கேளு, நோர்க்கந்தானர்த்தவீ ஷணையினோடு-லோகவீஷணைகாமவீஷணைமூன்றாச்சே. (எக)

ஆச்சென்றமூன்றையுந்தானறியக்கேளாய் - அதிகமாஅர்த்தவீஷ ணைகுணந்தான், வேச்சென்றவர்த்தமதின்மேலாசைப்படுதல்- விளங்கி யதோர்லோகவீஷணையதனைக்கேளாய், காச்சென்றகாணியுடனுறவுந் தேடிக்காரியங்களதின்மேலாசையாகும், ஆச்சென்சென்றகாமவீஷணை க்காமியத்தைத்தேடி-பாசையதுபடுதலீஷணைமூன்றுமே. (எஉ)

மூன்றானபின்புதான்குணந்தான்மூன்று மொழியவேசாத்துகத்சா த்வீகம், வேன்றானவிதின்பிரிவுவிளம்பக்கேளாய்-வெகுளிபலபேசாதி ருத்தல்வேண்டுவதுகொடுத்தல், தான்றானதன்னைச்சார்ந்தாரைக்காத்த ல்-தகைமையுடனுயிர்களைத்தம்முயிர்போலெண்ணல், பான்றானபகைவ ரைவென்றிடுதனீங்கல்-பலகலைகளறிதல்பயில்பண்புண்டாமே. எ௩)

உண்டுலகினுக்கங்கோருறுதியென்னவாழ்தல் - உண்மையாய்நலந் தெரிதல்புகழேபூண்டல், தண்டுதாடாண்மையொடுமேன்பாடாண-சாற் றியதோர்குணமெல்லாம்ராசதத்துக்காகும், மிண்டுதாமதகுணமுமோ தோவென்னில் - மிகுதியாய்வஞ்சனையேசெய்தலாகும், வண்டுவழிபா டொழிதல்வாதுபோராடல் - வணக்கமில்லாவெகுளியெவிளம்பலாமே.

விளம்பவேசெய்தநன்றிமறுத்தல்விந்தை-மிகப்பேசல்நிந்தைநான்மு
ணாமிடுக்குப்பேசல்முளம்பலேமுன்னுரைத்தல்பழியைக்கூறல்- மூகத்
துடனேபேசல்பகையுடனேவாழ்தல், புளம்பலேபொய்கொலைகள்கள
வுகாமம் பொல்லாங்கியாவையுமேபுகன்றுபேசல், களம்பலேகாமத்தின்
குரோதமிக்கக்-கடிந்தாமதகுணத்தின்காட்சியாமே. (௭௫)

காட்சியாஞ்சாத்திகந்தானேதோவென்னில்-கமழ்கடிவுசாந்தமும்
வாய்மைதயையொடுக்கம்தாட்சியாந்தண்ணளிவுக்குந்திடநற்சிலந்தயவா
னகுணமன்புபெருமைபுகழ்பூண்டல், மாட்சியாமறையினிறைமண்பய
க்கல்பூண்டல்-வறிஞோரைவாழ்வித்தனல்லோர்க்கீதல், நாட்சியாயிறை
வனடியிணைப்பணித்தல் - நல்லோர்க்குப்பொருளீதலறந்தேடல்தானே.

அறந்தேடல்உறவின்முறைகற்றத்தாரை அதிதிபரதேசியருக்கன்
னமீதல், திறந்தேடல்தெய்வமறையோரைக்காணல்-தேவதைகட்குப
சாரச்சிந்தைசெய்தல், புறந்தேடல்புண்ணியங்கள்தேடலின்பப் பூசாரு
க்காகுதிகள்பலிகொடுத்தல், தறந்தேடல்சாத்திகத்தின்குணமீதென்று-
சாற்றினேன்குணமூன்றின்றன்மைதானே. (௭௭)

தன்மையாய்வினையதனைச்சாற்றக்கேளாய்- சார்ந்தோர்நல்வினைதீ
வினையிரண்டாம், பன்மையாம்வினையிரண்டின்பயனேதென்னில்- பாவி
யநல்வினையதுதான்புண்யமாகும், தின்மையாந்தீவினைதான்பாவமாகும்
சேர்ந்தவினையிரண்டாலேநரகசுவர்க்கம், புண்ணியஞ்செய்தவர்க்குநல்ல
சுவர்க்கமாகும்-பொல்லாதபாவிகட்குநரகமாமே. (௭௮)

ஆமேதானிராகமெட்டையறையக்கேளாய்அதிகமாக்குரோதமொ
டுலோபமோகம், வாமேதான்மதமாற்சரியமிடும்பைவேகம் - வகையாக
விதன்குணத்தைவழுத்தக்கேளாய், காமேதான் காமமெனலாசையாகு
ம்-கடிதானகுரோதமெனப்பிணக்கதாகும், போமேதான் லோபமெனல்
பிடிப்பாடாகும்-பேர்பெரியமோகமெனல்பிரியமாமே. (௭௯)

பிரியமாமதமதுதான்கெருவமாகும்- பெரிதானமாற்சரியமிடும்பா
ங்காரம், உரியமாமிடும்பையுதாசனைகளாகும்-உறவேகமாவதுகடூரமாகு
ம், நரியமாமிராகத்தினன்மைசொன்னேன்- நாசமாமவத்தைவயைந்திற
ட்டங்கேளாய், அரியமாஞ்சிற்றவத்தையாமிதனின்போக்கு- ஆக்கிரசா
க்கிரமுஞ்சொற்பனமுமாமே. (௮௰)

சொற்பனஞ்சுழுத்திதுரியந்துரியாதீதம்- சொல்லுநிலைநாலவத்
தையைந்தாகச்சொல்வர், நிற்பனமாஞ்சாக்கிரந்தானெற்றிகோ-நிறை

ந்திருக்குங்கருவியிடநியமாகக், கற்பனமாஞ்சொற்பனமுங்கண்டத்தானங்-கடந்திருக்குங்கருவியுடன்காயத்தோடே, இற்பனமாங்கழுத்திதானிதயத்துள்ளே-இயங்கிநிற்குங்கருவியுடனியபபிடாயே. (அக)

இயம்பிடவேதுரியமாமிக்கமலந்தன்னில்ஏற்றமாங்கருவியு டனிணங்கிநிற்கும், முயங்குதுரியதீதமூலாதார- மூர்க்கமாங்கருவியுடனமர்ந்திருக்கும், கயப்பிடவேகருவிகடான்றொண்ணூற்றாறும்-காரியமாய்த்தேகத்தைக்காத்துநிற்கும், வியங்கியிந்தமுப்பதுதத்துவமாந்தானே-வேதமாம்வித்தியாதத்துவமாமென்னே. (அஉ)

தத்துவமாங்கருவிகடான்றொண்ணூற்றாறும் - சடத்திலெங்குமூடாடித்தகமையாகும், உத்துவமாயுடறதனிலுண்மைகேளாய்-உதிரவங்கமென்னும்புவியிலுற்பவிதது, அத்துவமாமப்போதுள்ளிதழாய்மலர்ந்து-அந்திமுகத்துக்கருவிட்டாகவுருத்தரித்து, சத்துவமாமவ்வுருவாயவ்வயதில்கண்-தாக்கானஅவ்வென்னுமட்சரந்தானுமே. (அங)

அவ்வென்னுமடசரத்திறுடிதோன்றும்-அந்நாடிதனினின்று தத்வந்தான்தோன்றும், எவவென்னும்மெலும்புதசையின்புடையுநரம்பும்-ஈரெட்டுபழுவோடிரண்டுகொங்கையுமா, முவ்வென்னுமுட்டுக்காலெட்டெட்டுவளையா - மூட்டியமைத்தங்ஙனேயோருருவமாக்கி, சுவ்வென்னுமிடையோடுபிங்கலையுஞ்சேர்த்துச்-சுழிமுனையென்றொரு துளையும்வழியதாமே. (அசு)

வழியதுவாய்வாசல்வள மெனக்கொண்டங்கே- வளமாகவுடனுண்டவன்மையெல்லாம், கழியதுவாய்க்காள்வாய்க்கிடிகாந்தலாகிக்- ககனம்போலெரிந்துமேமடியப்பாய்ந்து, சுழிய துவாய்த்தூராதகுழியதாகத்-துர்ப்பாவைநிணமுமாய்ப்பற்றியீரலுமாய்ப், பொழியதுவாய்க்காளிதநாறிபித்துமாகிப்-பொருமலுமாய்ச்செறுமலுமாய்க்கிருமியாகும்மே (அரு)

இருமியாய்வகைதோறும்வாயுவைத்தானிறுத்திக்- கிரணமுந்நூற்றறுபதுமோங்குடனிரங்கலாகி, அருமியார்தவிருத்தியமர்ந்த குடலதுதான்அமர்ந்தமுப்பத்திரண்டுமுழங்குடலுமாகும், ஒருமியாயொப்பமுடனைஞ்பதுவாய்மடித்து, உற்றசுக்லசலந்தான்மூன்றுமாகி, வறுமியாய்வச்சிர்த்தோல்மேலேபோர்த்து-வழிபலவாய்மொழிமொழியாய் சந்துமாச்சே. (அசு)

சந்துமூன்றரைகோடி யுரோமத்துவாரம் - தாக்கான நாலெட்டு வுறுப்புமாகி, இருவிருவதுவிரலுமையநான் குமுகிரு - எட்டுச்சாணீளமுமா யேகமாகி, நந்துநாற்சாண் பெருமை மெய்வாய்கண்

மூக்கு-நலத்தசெவியுடல்பிரிநிவின்கூறுகிப்,பந்துமொண்டுகொலுமாயிரண்டுகையாய்ப்-பதினாறுகவருடையவீனாதண்டே, (௮௭)

தண்டோடேயாறுதெருவேழுகடலாகும்- தாக்கானவெட்டுத்தூண்முப்பதுவாஞ்சந்து,எண்டோடேயெழுபதுபேரெலும்புதானும்-ஏறமாமொழிமுச்சாணெலும்புமாகும், முண்டோடேயெலும்புமுச்சாண்சதையுமாகும்-முக்கியமாமெண்பலமீரலுமாமென்ப, நண்டோடேநாறுழியுதிரமாகும்-நற்பத்துவாசலையுமுடைத்ததாமே (௮௮)

உடைத்திரட்சியுதிரமாங்கிச்மேதையத்தி-உயர்ந்தசுக்கிலமச்சைசத்ததாது, படைத்தபலமுப்பத்திரண்டுமாகும்-பண்பானபழுவெலும்புபதினொன்க, முடைத்தமுதுகுத்தண்டுபன்னிரண்டுகோர்வை- முதற்சூழ்ந்ததாளசைவதைந்துமாகும்,நடைத்தநரம்பெலும்பொன்றியேழரையுங்கூட்டி-நலம்படவேசதைமேவிநாடிற்றன்றே. (௮௯)

நாட்டியேபிடரியினிற்கோர்த்தநாடி - நரம்புபின்னலோரேழாயிரமாமென்க, ஆட்டியேபஞ்சவுடலந்தான்றுவக்கில்-ஆருயிர்தானூற்பத்தாறதாகும், தூட்டியேதொழுத்தையிரண்டாயிரத்துக்- துடர்ந்துவிண்வளருமெய்யாயிரமாமென்க,பாட்டியேகோணங்கள்பதினாறாகும்-பகர்சேட்டுமத்தின்னக்குண்டலத்தினனலே. (௯௰)

அனலெழும்பிவாயுபத்துநாபினிற்சுருக்கி-அல்லனுறும் வாசலொன்பதிற்கதவொன்றிட்டு, இனலெழும்பியீசர்வாசல்த்திறந்து-இடையிறுபிங்கலைநாதனையேநோக்கி, நிணலெழுப்பியன்பனெனுநெய்சொரிந்து-நோாகவமிர்தமென்னுந்திரியையிட்டு,வனலெழுப்பிமணிவிளக்கைநிறையவேற்றி-வாசியைமீவாவழைத்துவைத்துக்கொள்ளே. (௯௧

கொள்ளவேயைம்புலனைநாசமாக்கிக்-கோசமாமட்சாத்தையளவறிந்து, அள்ளவேயன்பத்தோரட்சாத்தின்-ஆதாரமிராதாஞ்சோதித்தேறி, உள்ளவேமண்டலத்தின் வலமாய்வந்து - உதிரமண்டலமொக்கப்பால்சொரிந்து, கள்ளவேகாமம்வெகுளிமயக்கறுத்து- கடும்புரவிகுசைதாங்கிக்கருதிப்பாரே. (௯௨)

தாங்கியேயிருமூன்றுதெருவுஞ்சுற்றித்-தயங்காதவசு வங்கடெருவும்மொண்டு, ஏங்கியேயேழாயிரத்திருநூறுவாய்வு-இரவுபகலளவாக விகமப்பில்லாமல், ஓங்கியேவோங்காரமெனுமூலநாடி உறுதியொன்றெழுபத்திராயிரமாநாடி, நாங்கியேநரம்போடுநாடியிலைக்கெல்லா-நலத்தயுபடுநாடியொன்றுண்டாகும்மே. (௯௩)

ஒன்றென்னுமிதிலாதித்தன்போனடி - ஒருபத்தும்பரித்துத்தான் பறந்தவாறும், நன்றென்னுங்காலோடுகை நடுத்தாமரையில் - நாடிநாழைந்துயிராகிமெய்யிலோடிப், பிண்டுநசம்பாலெலும்பைப்பிணைப்பிசைவித்து- பெருநாடிபுகுமத்தையறிந்தடங்கிநிற்கும், அண்டென்வேநாடிபத்துஞ்செறித்தடங்கிநிற்கும்- அதிமூலமுந்திமுதலாகியுறுமாமே. ௬௪)

உறுமுடிக்குக்கீழ்மேலும்பதிந்துநிற்கும் - உகமையாந்தலையினிலேயீசான்றான், செறிவினைசெய்வினைப்பயன்முன்னும்மறிந்து திகழிந்திரமான்றலைபோலிமைப்பானுள்ளே, தறுவினைசத்தப்பரிசரூபாசகந்தம்-தானம்வகைதொறுமுத்திகொடுத்துநல்கி, துறுவினைசெய்தகமையறுத்துள்ளேநோக்கித்-தொண்ணூற்றாறுங்கருவிதத்வமாமே. (௬௫)

ஆமெனுநாடிநரம்பெழுபத்தீராயிரமாம்-அதிவீறும்நாடிவிஷ்ணுநாடியாகும், ஏமருத்ராநாடியிடையோடுபிங்கலையும்- எழினுமுதுகெலும்புபதினாறுபழுவுவாகும், மூமெனுமுப்பத்தொருவார்க்குழியுமாகி முதிர்ந்துநின்றவையுழக்காமுதிரமாகும், நாமெனுநாழிவாதமுந்நாழிபித்தம் நானாழிசேட்டுமமுநலத்ததாமே. (௬௬)

நலத்தமூன்றரைகோடிரோமத்வாரம்- நல்விநுமத்தெண்கோடிமலத்துவாரம், மூலத்தமுப்பதெண்கோடிசலத்துவார முயன்றிரத்தமைம்பலமாங்கிசநூறுபலமாம், கொலத்தகெந்தமெண்பலமாம் ரோமநூற்றெட்டு-கோடியாம்மேதையிருநூறுபலமாகும், பெலத்ததோல்தாந்நூறுபலமாகும்-பேரானநிணந்தானுமாமே. (௬௭)

ஆமென்றகுடன்மூந்நூற்றேழுபலமாகும்- அதிகமாம்வழுக்கையதுநாற்பலமதாகும், தேமென்றசீயுரித்தான்கண்கள்ரெண்டும்- சிறக்கவேநாலுகழஞ்சாகுங்கண்டாய், நாமென்றநாக்குநாற்கழஞ்சதாகும்-நற்கந்தமூக்குந் தானதுமுக்கழஞ்சு. காமென்றகன்னஞ்சேர்நாற்கழஞ்சதாகும்-டிந்தெலும்பெலாநூற்றோர்பத்தெண்பலமென்னே. (௬௮)

என்னவேயிறைச்சிபலநூற்றறுபத்தைந்தாம்- ஏற்றமுப்பலந்தானுமூளையாகும், பன்னுதாயனைமெட்டமைங்கழஞ்சதாகும்-பார்க்கவேசலப்பையுமோர்முழந்தானீளம், கன்னவேகருவிகடானதுதொண்ணூற்றாறும்-கணக்காகவுடற்குறிப்புகாயாந்தானாகும், தன்னவேதத்துவங்கடானெல்லாஞ்சொன்னேன்- சார்ந்தநாடியின்றன்மைசாற்றினேனே.

தத்துவவிதி-முற்றிற்று.

# நாடிநிதானம்.

சாற்றுகிறேனாடியிடப்பூர்வமெல்லாம் - தாக்கானநாக்குமலமூத்ரமாகும், காற்றுகிறேன்கண்ணோடுபேச்சதானும்-காரியமாயெட்டுவகைப்பரிட்சைதன்னில், ஆற்றுகிறேனவற்றிலுள்ளகுணங்களெல்லாம்-அசாத்தியசாத்யமறிந்தவரையும்பார்த்து நாற்றுகிறேனாடியிடநன்மையெல்லாம், நற்குணமுந்துர்க்குணமுநயந்துபாரே. (௰)

நயந்துநீநாடிதான்பார்க்கும்வாறு நலமானபுருவமுச்சிகண்டநெஞ்சு,கயந்துகையிற்காலடியின்முழங்கைதன்னிற்கணுக்காலின்முழங்கால்கைகுழியிலாகும், தயந்துதானங்கடாபரிக்குநாடி- சகலநாமபெழுபத்தீராயிரமுஞ்சார்ந்து, தியங்துநிற்குமிவ்விடங்கணாடிபார்க்கில்- திரோகத்தின்பரிட்சையெல்லாமியம்பிடாயே. (௰௧)

நாடிபார்க்கும்விதம்.

இயங்கிடவேஅங்குஷ்டவிரலுக்குப்பால்-ஏற்றமாய்நெற்கிம்பிடைவிட்டிப்பால்பார்க்கில், முயம்பிடவேமூவிரலாணடிதொட்டு-மும்மூர்த்திநாடியினின்முழக்கம்பாரு, பியம்பிடவேபிரம்மதுவாதநாடி- போனபித்தந்தான்விஷ்ணுநாடி, தியம்பிடவேசேட்பமதுருத்ரநாடி-செயலெல்லாஞ்செப்பிநீதெளிந்திடாயே. (௰௨)

நாடிபார்க்குங்காலம்.

தெளிந்திட்டகாலைநாழிகைதான்பத்தும்- திறமையாய்வாதத்தின்சுறப்பதாகும், பிழிந்திட்டவுருமத்திற்பத்துநாழி-பித்தத்தினாடியின்பிரதாபந்தானும், தெளிந்திட்டவந்திதனிற்பத்துநாழி- சிலேட்டுமத்தினசெயலாகுங்கருற்போது, வழுந்திட்டபாதத்தினாடியாகும்- வலிந்தநசிபத்தின்மேற்பித்தமாமே (௰௩)

ஆமென்றவைகறையிற்சேட்பமாகும் அம்மூன்றுநாடிகளுமடங்கியெழுங்காலம், நாமென்றவாதத்துக்கிருப்பிடமேகேளாய் - நாபிக்குகீழென்றுநவிலலாகும,பேமன்றபித்தத்துக்கிருப்பிடமேகேளாய்போனகண்டத்தின்கீழதாகும், தேமென்றசேட்பமதுசிறந்திருக்குந்தானம்-செயலானவுச்சிக்குக்கீழதாமே. (௰௪)

கீழானபெருவிரற்கிழ்நர்ச்சிறியாம்விரலிற்- கிளர்ந்தெழுப்பம்வாதத்தினாடிதானும், மாழானமத்தியமத்திவிரல்தான்பித்தம - மகத்தானவணமிவிரலசேட்பமாகும, வாழானமன்னனுக்குவலதுகையினாடிமங்கையருக்கிடதுபக்கம்வகுக்கலாகும, காழானகைக்காலினாடிபார்க்க-கருவிகடான்கணக்கறிந்துகருதிப்பாரே. (௰௫)

கருதியேநாடிகடான்காணுநேரம் - கதிருதயஞ்சிந்தினைவைகாசிக்குத்தான், அருதியேயானிபோடாடியைப்பசியும - அமிர்தமாங்கார்த்தி

கைக்குமத்தியானம்,மருதியேமார்கழியுந்தையுமாசி-மாலைநோந்தனிலே பார்க்கலாகும், யிருதியேபுரட்டாசியாவணிபங்குனியும்-, போரானகங்குலர்த்தராத்திரிதானுமே. (௱௬)

நாடிதோன்றுதகாலம்.

அத்தமாநாடிதெரியாதபேர்கள்- அப்பியங்கஞ்செய்தோர்களன்னந் தண்ணீர், குற்றமாமிகுதியுமேயுண்டபேர்கள்- குதிரைகரிவெய்யில்விடாய்சிற்றின்பத்தோர், மத்திபமாமதுகஞ்சாவபினிமாம்சம்-மச்சங்கண் மிகவுமுண்டோர்வாயுகும்பித், நித்தமாய்நிறுத்திறோரிவர்கட்கெல்லாம் நிசைகலங்கிநாடியதுதெளிந்திடாதே. (௱எ)

வாதநாடி.

தெளிந்திட்டவாதநாடிக்குணந்தான் - சிறுபிள்ளைதூங்குதொட்டிலாட்டம்போலும், வளிந்திட்டவளைந்துவளைந்தேநடக்கும்- மண்டுகந்தத்துதல்போலோனும்போலும், தளிந்திட்டசர்ப்பம்போலட்டைபோலும்-தவழ்த்துமேவவியினிற்குருவிபோலும், அளிந்திட்டவாமையின் றனடையைப்போலும்-ஆதியாம்வாதமதுநடக்குந்தானே. (௱அ)

பித்தநாடி.

நடக்கின்றபித்தத்தினுடிகேட்கின் - நாகரிகமாகுமன்னநடையைப் போலும், மடக்கின்றமயில்போலுந்தாராபோலும் - மாடப்புறாவுமூர்க் குருவிபோலும், விடக்கின்றமெத்தனவாம்மீண்டுமீண்டு-மேண்மையாய்முடுக்காகவிளக்கமாகிக்கிடக்கின்றகெருடன்போற்பெலத்தேயோங்கிக்- கேசரம்போலசையுமதுபித்தந்தானே. (௱௯)

சிலேட்பநாடி.

தானென்றசிலேட்பத்தின்றுதுகேளாய் - தயங்கியேதோற்றமது தோற்றுதாகிக், கோனென்றகோழியின்றனடையேபோலும்- கொக்கினுறக்கம்போலூர்க்குருவிபோலும், மானென்றமங்கைநல்லார்மயக்கிற்சிக்கி- மருவினவனவன்றுதுபோன்மசகமாகித், தேனென்றசிலந்தியின்பூச்சுப்போலும்-சேட்பமாநாடியதுதெளிவாய்ப்பாரே. (௱௰)

வாதபித்தநாடி.

தெளிவானவாதபித்தநாடிசெய்தி-செப்பவேசிறுகுருவிபோனடந்து, வளிவானமயில்போலநடப்புங்காணும் - மருவியபின்னோந்தியின்றன்மார்க்கமாகும, கனிவானவாதசேட்பத்தினுடி - கானகத்தின்கோழியதுபோனடந்து, அளிவானஅட்டையின்றன்மார்க்கங்கண்டால்- அதிகமாய்முன்சொன்னநாடியாமே (௱௰௧)

பித்தசேட்பநாடி.

நாடியேபித்தசேட்பமத்திறுதுகண்ணியேநடக்கும்வகைநட்பைக்கேளீர், பாடியேபாம்புபோலசைந்துபின்னே- பதிந்ததவளைக்குதித்தல் தரும்போலாம், ஆடியேசிணபாநாடிதானே-அசைந்துமதயானைபோ

ளைடநடக்கும், தேடியேதீபந்த்தினாடிதானே - சிறுகாக்கைதூங்குதல்
போற்றுடிக்குமன்றே. (௩௰௨)

சன்னிநாடி.

துடித்திட்டங்கசைந்துநாடிநின்று- சொல்லும்விறகுக்தலையோன
டையயானால், கெடித்திட்டுக்கிறுகிறென்றேசுற்றிநாடிக் - கீழ்மாடிவ
லைந்துமேபதறிச்சுற்றி. அடித்திட்டு அன்னமேபோலட்டைபோல - அச
மந்தமாகவேமெலிக்கானால், தடிக்கிட்டுக்குழலமாய்ச்சிக்கென்றால்
சன்னியென்றேநாடியெனறேசாற்றலாமே. (௩௰௩)

சுகசன்னி.

சாற்றியேமந்தமாய்நாடிதானும் - தனித்ததொரு குக்குடம்போற்
பாம்புபோல, மோற்றியேமுஞ்சூறுபோலவாகி- முனையாகிச்சுடராகிக்
கொழுந்தேயோடி, ஆற்றியேயடங்கிநின்றங்கெழுப்பிற்றானல்- அப்பி
யங்கஞ்செய்தரிவையணுகிநோர்க்கும், தோற்றியேசுகசன்னியென்னும
நாடி-சூட்சாதிசூட்சமாய்த்துஞ்சும்பாரே. (௩௰௪)

வாதசுரம்.

துஞ்சியேவாளைமீன்போலப்பாய்ந்து - துடித்துமேசடித்துத்தான்
சிக்கலாகி, அஞ்சியேசர்ப்பம்போலடங்கிநின்று - ஆனைமும்மதம்போல
வார்ப்பரித்து, நெஞ்சியேநெறுநெறென்றுநிமிஷந்தானும- நிலைவிட்டுநீ
ங்கியேமீண்டும்புக்கில், வஞ்சியர்மேல்விகாரமாய்மனதைப்பூண்ட- வாத
சுரநாடியென்றேவகுக்கலாமே. (௩௰௫)

மரணநாடி.

வகுக்கவேவாதத்தினாடிதானும்-வளைந்துமேமுன்னோடிப்பிரண்ட
தாகில், வகுக்கவேமந்தமதுமெத்தவாகில்மயிற்றாராவன்னநடைபோன்
றுநின்றால், நிகுக்கவேநின்றுநின்றுநேரோடாமல்-நிலைதப்பிமுன்பாய்ச்
சல்பின்பாய்ச்சலாகிச், செருக்கவேசடர்தானுமெட்டுநாளிற் - சிவபுரத்
துக்கெய்துவிடுந்திண்ணந்தானே. (௩௰௬)

திண்ணமாய்பித்தத்தினாடிதானும் - தேள்கொடுக்குத்தெறிப்பது
போற்றெறிக்குமாகில், வண்ணமாமாதத்தின்மரணமென்க-வல்லூறுசா
ப்பமதுவளைந்துகாண்கில்பன்னியேபட்சத்தின்மரணமென்கபருவானா
த்துடிசெய்யிலெட்டுநாளாம், மின்னியேயிந்தமதுமீண்டுமீண்டு- மீட்
சியேமீண்டுவந்தால்மீளதாமே. (௩௰௭)

மீளவேவுந்தியினிற்சுழியைப்பற்றி- விளங்கியதோர்வாதபித்தசே
ட்டுமந்தான், ஆளவேயையமென்றநாடிதன்னில்-ஆதித்தன்சுடரொளி
போற்றோன்றுமாகில், காளவேகாந்தத்தின்கனலாய்க்காணில்கலங்கியே
தானம்விட்டுக்கடைசியாகில், பாளவேபம்பரம்போற்சுழலுமாகில்- பப
பதமடையுமென்றேபகரலாமே. (௩௰௮)

பகர்வேவாதத்திறநாடிதானும்-பருகியதோர்பித்தத்தின் வீட்டைச்சேர்ந்து, பிகரவேபித்தத்திறநாடிதானும்பேரானசேட்டுமத்தின்வீட்டைச்சேர்ந்து, அகரவேயையமென்றநாடிதானும் அதன்வீட்டைவிட்டுமேயப்பாலாகித், திகரவேகண்டத்தைச்சேருமாகில் செடமகேந்துசிவலோகஞ்சேர்வர்தாமே. (௱௰௯)

சேரவேவீணைபோற்றெறிக்குமாகில்-சித்தமாய்த்தினமூன்றுநாளிற்றீர்வர், ஆரவேயையமாநாடிகன்னில்-அதிர்ந்துமேகவளைபோற்குதிக்குமாகில், போரவேபாம்புபோற்பிரள்வுற்றார்ந்துபொறியாவந்தன்னுடையநடைகண்டாலும், மாரவேமரந்தன்னிற்கொடிபின்னினதுபோல வந்திடினுமரணமெனவகுக்கலாமே. (௱௨௰)

நாடிபார்க்கும்இயல்பு.

வகுக்கவேமானிடர்தம்வலக்கைபற்று- வளைவன்றிமுடக்கன்றிநெட்டிவாங்கி, முருக்கவேமூவிரலாற்றொட்டுப்பார்க்கில்- முன்னாடிவாதம் பின்னாடிபித்தம் சிருக்கவேயணிவிரல்சேட்பமாகும்- செயமல்லாமறிந்துணர்ந்துசேதிகேட்டு, நகுக்கவேநோயதனின்மைகண்டுநாடியிடச்செயலறிந்துநாடிடாயே. (௱௨௧)

பூத்தமங்கைநாடி.

நாடியேயெறும்புகாலூர்தல்போனும் - நல்லாமையசைவதுபோல் வாதநாடி, கூடியேகுளிர்ச்சியாயமெதுவுபோன்று- குடிலங்களுமல்லாமற்றோன்றுமாகில், வாடியேமங்கையர்க்குக்கெர்ப்பமாகும்-மகத்தானபஞ்சுபோன்மெதுவாயுற்றுப், பூடியேயின்னாதத்தினைபொலிவேயானால்- பூத்தமங்கைநாடியென்றேபுகலலாமே. (௱௨௨)

விகற்பநாடி.

புகலவேபுழுப்போலநிமிருமாகில்-பொருகாலவண்டிணிடவொலியும்போல, நிகலவேகாஷ்டத்திநெய்தான்வீழ்ந்துநேர்ந்தெழும்பமக்கினியினிருமைபோலும், திகலவேகிளியெழும்புஞ்செய்கைபோலத்திரையெழும்பியொடுங்குதபோறபித்தநாடி, விகலவேபடபடத்துத்தோன்றுமாகில்-விகாரத்திறநாடியென்றேவிளம்பலாமே. (௱௨௩)

பூதநாடி.

விளம்பவேமீதினியிற்கல்லெறிதல்போலும்- மிகப்புரவியாட்டுக்கிடாய்ப்பாய்ச்சல்போலும், திளம்பவேசெக்கினீடதிருகல்போலும்சீறுகின்றமூஞ்சூன்றுசசிமேபோலும், இளம்பவேபந்தடித்துயெழும்பல்போலும், ஏற்றமபோலேறியிழித்திடுதல்போலும், புளம்பவேபித்தத்திறநாடிதோன்றில் பூதத்திறநாடியெனப்பேசலாமே. (௱௨௪)

மரணநாடி

பேசவேபிங்கலையின்நாடிதானும்- பேணிநான்முழுதுமோடிப்பிராணமற்றுன, வாசவேமூவாண்டினையாணைந்தெசானும்-வாதமாநாடியதுவ

னுமையாகிவசவேயிரண்டுநாண்முழுதுமோடில்; ஈருண்டின்மரணமெனவியப்பலாகும், நாசவேநாண்மூன்றுவமுவாதோடில்- நமனுக்கங்கிவறயார்வனுண்டிற்றுனே. (ஈஉடு)

தானென்றபித்தத்தினடிதானும்-தரியாமனுவொன்றுதயங்குமாகில்,ஆனென்றவாறுதிங்கண்மரணஞ்சொல்லும் அசைவிலாதிரண்டு நாளோடுமாகில்.மோனென்றமூன்றுதிங்கட்குண்மறிப்பன்-மூர்க்கமாய்மூன்றுநாளோடுமாகில்,நானென்றநாற்பதோடைந்தாநாளில் நசிச்சுவேநமனிடத்தினல்குவானே. (ஈஉசு)

நல்கவேசேட்பத்தினடிதானும்- நாண்மூன்றுகடிதோடிலேந்து நாளாய், மல்கவேயிரண்டுநாளோடுமாகில்- மரித்திடுவனீரைந்துநாளிற்றுனும், ஒல்கவேயொருநாளேயோடுமாகில்- உறுசிவன்பதினைந்துமட்டுநிற்கும்,பல்கவேபத்துநாழிகையேநின்றால் பயமில்லேப்பார்தனிலேபாலிப்பாரே. (ஈஉஎ)

பாலிக்கபித்தத்தினடிதானும்-பகட்டியேமூன்றுநாள்புரளுமாகில் ஆலித்தவாசினுக்கசைதல்போலும்- ஆடியேயமர்ந்துதானிருக்குமாகில், மாலிக்கமணியசைதலோசைபோலும்-மகத்தானவுடுக்கையின்றன்றொனியைப்போலும், கோலித்தநாடியினிற்குறிகள்கண்டால்-கொடுமறலிநகர்தனேயேகுடிகொள்வாரே. (ஈஉஅ)

## சரீரலட்சணம்.

கொள்ளவேவாதத்தின்றேகந்தானும்- குளிர்ந்துமேசிறுதிடத்தேநூஷ்ணமாகித், தெள்ளவேதுடிதுடித்தேயிருக்கும்பித்தம்- தேகந்தானுஷ்ணமாயிருக்கும். தெள்ளவேசேட்டுமத்தின்றேகந்தானும்- சிக்கென்றுகுளிர்ந்திருக்குந்தொந்தத்தேகம் பன்னவேபலவிதந்தான்பெற்றிருக்கும்-பரிந்துதொட்டுதேகத்தைப்பார்த்துச்சொல்லே. (ஈஉகூ)

தேகத்தினிறந்தானுஞ்செப்பக்கேளீர் - சிறுமையாய்வாதந்தானுக்கறுத்திருக்கும், போகத்தின்பித்தநிறமஞ்சளாகும்-பொருஞ்சேட்பரோகிக்குவெளுப்புமாகும், பாகத்தின்றொந்தரோகிக்குத்தானும்-பலவர்ன்னமுமாகிப்பறந்துநிற்கும், ஆகத்தினிறம்பார்த்துநாடிபார்த்து-அத்தேடவிதப்பரிக்ஷையெல்லாமடவாய்ப்பாரே. (ஈகய)

## வசனபரிட்சை.

பார்வாதரோகிக்குவார்த்தைதானும்-பக்குவமாயச்சட்டதமாயிருக்கும். பேர்பித்தரோகிக்குவார்த்தைதானும்-பேசிடிலேவெலத்துமோபுரததிருக்கும், சேர்சேட்பரோகிக்குவார்த்தைதானும்- சிறுத்துமேயீனசுரமாயிருக்கும், வேர்தொந்தரோகிக்குவார்த்தைதானும்- வெகுவிதமாயிருக்குமெனறேவிரித்திடாயே. (ஈகக)

### மூத்திரபரிட்சை.

விரித்திட்டவாதமென்றரோகிக்குந்தான் மீறியேகண்கறுத்துத்தண்ணீர்பாயும், பரித்திட்டபயித்தியரோகிக்குக்கண்தான்- பச்சென்றுசிவந்திருக்குஞ்சேட்பரோக, பிரித்திட்டபிளேசாரும், வெளுத்திருக்கும்பெருஞ்சன்னிவாதரோகிக்குக்கண்தான். கரித்திட்டுச்சிவந்துபச்சென்றிருக்குங்-காமாலைரோகிக்குபசுமஞ்சளாமே (௱௯௨)

### மலபரிட்சை.

மஞ்சளென்றவாதரோகிக்குமலந்தானும்-பலபந்தமாகியே கறுத்திருக்கும், பிஞ்சலென்றபித்தரோகிக்குத்தானும்-பெருகியேவெச்சென்றுசிவந்திருக்கும், திஞ்சலென்றசேட்டுமரோகிக்குத்தானும்- சிதறிமலம்வெளுத்துமேசீதமாகும், பஞ்சலென்றதொந்தரோகிக்குத்தானும்- பலவர்ன்னமாயிருக்குமபண்புதானே. (௱௯௩)

### ஜலபரிட்சை.

பண்பாகவாதரோகிக்குமூத்தம்- பாரிதது தெளிந்திருக்கும்வெண்மையாகும், மண்பான்பித்தரோகிக்குமூத்ரமமார்க்கமாய்மஞ்சளித்துப்பசத்திருக்கும், திண்பானசேட்டுமரோகிக்குமூத்ரம் சேறுபோற்பெரியேநுரைததிருக்கும், கண்பானதொந்தரோகிக்குமூத்ரம்- கண்டபலநிறமாகுங்கருதிடாயே. (௱௯௪)

### நாவின்பரிட்சை.

கருதியேவாதரோகிக்குநாக்கு-கறுத்திருக்குமுள்ளுபோல்வெடித்திருக்கும், பருதியேபித்தரோகிக்குநாக்கு பச்சென்றுதானிருக்குஞ்சிவந்திருக்கும், வெருதியேசேட்டுமரோகிக்குநாக்கு-வெளுத்துமேதண்ணீருண்டாயிருக்கும திருதியேதொந்தரோகிக்குநாக்கு- சூட்சாதிபலவர்ன்னமாகுந்தானே (௱௯௫)

வர்ன்னமாமெட்டுவகைப்பரிட்சைபார்த்து - வகையானநாடியிடகுணமுங்கண்டு, தினைாங்தேகத்தின்செயலும்பார்த்துத்-தேசதேசாபேதச்செயலறிந்து, கன்னயாங்காலகாலங்கள்பார்கதுங்-கனமானவக்கினியின்கணக்கறிந்து.பன்னவாமபலபுலவாதுலைத்தேர்ந்து- பரிகாரப்பயனறிந்துப்பார்த்துச்சொல்லே. (௱௯௬)

நாடிநிதாநம்-முற்றிற்று.

---

## சுரரோகநிதாநம்

சொல்லவேசுரத்தினிடதிறமைகேளாய்-செட்டக்கிலுள்ள பிணிக்கெல்லாம்ராசாவாகும், எல்லவேநமனுக்குமொக்குமொக்கும்- எழிலோடுபிதாபகோபமாகும, தல்லவேதக்கனிடவேள்வியைத்தான்சாமபசிவன்கோபத்தாலழிததபோது, நெல்லவேநெற்றிக்கண் சுவாலைதன்னிலேநேராகப்புறப்பட்டுநேர்ந்ததாமே. (௱௯௭)

நேர்ந்ததோர்சுரமேழுவிதமுமாகும்- நிலையான நாமத்தினேர்மை கேளாய்-வார்ந்ததோர்வாதசுரம்பித்தசுரஞ்சேட்பம்-வாகானபூதசுரம்சிரணசுரமாகும், ஆர்ந்தவபிகாதசுரந்தொந்தசுரந்தொந்தசுரத்தோடு- ஆர்க்கமாமேழுவிதமறிந்துக்கொள்ளு, தீர்ந்ததோர்சுரபேதவண்மையெல்லாம்-செயலறிந்துகுணத்தோடுசெப்புறேனே, (ாந-அ)

## வாதசுரம்.

செப்புகிறேன்வாதசுரத்தின்குணத்தைத்-திருமுகமுமுதடுமேகறுத்துக்காணல், தப்புகிறேன்சரீரமெல்லாந்தடித்துநோதல்- தாகந்தான்மிகக்காணன்மெய்நடுக்கல், திப்புகிறேனுடம்புதிமிரொடுக்கமுஷ்ணம்-தேகம்பாரித்திருக்கன்மலபேதத்தால், குப்புகிறேன்குளிர்ந்து மயிர்க்குச்செறிதலிந்தக்-குணமெல்லாம்வாதசுரக்கூறுமாமே. (ாநக)

## பித்தசுரம்.

கூறுனபித்தசுரத்தின்குணத்தைக்-கூறிடவேநித்திரைதான்மெத்தக்காணல், தேறுனமலமூத்ரஞ்சிவந்திருத்தல்-சிதறியேவயிறுகழிந்திடுதல்சததி, வாறுனவாய்ப்பிதற்றல்வாய்தான்கைத்தல்-மகத்தானமூர்ச்சையொடுதாகங்காணல், தாறுனவெழுந்திருந்துமோடல்விக்கல்- தவித்திடுதல்சந்தாபப்படுதல்காணே. (ாசய)

## சிலேட்பசுரம்.

சந்தாபமானசேட்டுமசுரத்தைச் சாற்றிடவேநாக்குமுகம்வெளுத்துக்காணல், மந்தாபமார்நோதலிருமலிளைப்பு- வருகுதல்வாய்துவர்த்துமேஉரிசையில்லை,முந்தாபமூச்சுவிடப்போகாமற்றுன் முயங்கியேவிக்கலொடுதாகங்காணல், சிந்தாபமிடறுநொந்துமேன்மூச்சாதல்- தினவெடுத்தல்தியங்கிடுதல்சேட்பமாமே. (ாசக)

## வாதபித்தசுரம்.

ஆகுமேவாதபித்தசுரத்தின்செய்தி-அறிந்திடவேயங்கமெல்லா மசைதல்நோதல், நாகுமேநாக்குத்தான்கறுத்துக்காணல்-நயந்துபிரலாபித்தனித்தயாதல், வாகுமேமலபேதமாயிருக்தல்-மலம் வெளுத்தல்வாய்கைத்தல்வடிவங்குன்னல், தேகுமேயறிவோடுதினைவுமாதல்-தியங்கிடுதன்மயங்கிடுதறிண்ணந்தானே. (ாசஉ)

## வாதசிலேட்பசுரம்.

திண்ணமாம்வாதசிலேட்டுமசுரந்தான்- செடமெல்லாநொந்திடுதல்சுவாசங்காணல்; எண்ணமாமிருமலுநாவெழுந்திருத்தல்- இசைந்துமயிர்க்குச்செறிதன்மிடறுநோதல், தண்ணமாந்தாபமேமிகவுண்டாதல்- தயங்கியேசஞ்சலித்தல்,வாய்தான்பெத்கல்விண்ணமாமிரவிலொடுவியர்வைகாணல்-மிக்கவெழுந்திடவிதன்றன்விபாமாமே. (ாசங)

## பித்தசிலேட்பசுரம்.

விபாமாம்பித்தசிலேட்டுமசுரந்தான்-வியர்வையேமிகவருதல்வாய்நாண்பெத்தல், நிபாமாய்நித்திரையுமிகவேமிஞ்சல் - நெடிந்துமயிர்க்குச்

செறிதவிருமலாதல், தபாமாமார்நோய்தல்தாபங்காணல்- தலைவலியும்பி டரிவலிதகைந்துகாணல். நபாமாநாக்கதுவும்வழவழத்தல்-நாக்கோடுமூ க்குநலமழிதல்காணே. (௱௪௪)

பூதசுரம்.

அருதலாம்பூதசுரத்தாண்மைகேளீர்- ஆதியந்தகுமாகண்டன்போ ல்வலிக்கும், கழிதலாங்கண்ணுருட்டியேவிழிக்கும்-காய்ந்தவுடன்சருதி தியேபிரலாபிக்கும், விழிதலாம்போசனங்கண்மிகவிரும்பும்- வேண்டின தெல்லாமிகவுமாசையாதல், பழிதலாய்ப்பாடலொடுசிரத்திலாடல்- பார மயிர்க்குற்செறிதல்நித்திரையுமாமே. (௱௪௫)

ஆசீரணசுரம்-

நித்திரையாமாசீர்ணசுரநேர்மைகேளீர்- நேர்மையாய்ச்சுரமோடே யிளைப்புக்காணல், மத்திரையாய்விக்கலொடுவயிறுமந்த - மாயிருத்தன் மார்புதுடைகுரங்குநோதல், பித்திரையாய்ப்பிளித்தேப்பமிடுதல்வாந்தி பேர்பெரியதாகமொடுமூச்சுகாணல், சித்திரையாய்வயிறுநொந்துபொ ருமிக்கொள்ளல்-சீதளமாயுடம்பெங்குந்திமிருமாமே. (௱௪௬)

அபிகாதசுரம்.

திமிரானவதிகநடைகுதிரையானை- சுமையெடுத்தலதிகமாய்வேலை செய்தல், தமிரானதாகமோடிளைப்புகைகால்-தளர்ந்திட்டுபப்ணிதனிலே சஞ்சரித்தல்.அமிரானவபிகாதசுரந்தானுண்டாம்-அதின்குணங்கடாகமு டனுடம்பெல்லாநோம்,வெமிரானவியர்வையொடாலோபம்ப்ரம்மை-மி சக்குளுந்தபோசனத்திலாசையாமே. (௱௪௭)

ஆகிகசுரம்.

ஆசையாமாகிகத்தின்சுரத்தைக்கேளீர்: அதிநகுளிருண்டாதல்தே கம்வாடல், தேசையாய்த்தேகம்புளகித்திருத்தல்- சிறியேயிருமலுடம் பெரிவுகாணல்,தாசையாய்ச்சந்தாபங்கலக்கணேவு தருவிலாவுடம்பெ ல்லாமுதுகுநோவு, ஆசையாய்ப்பத்தியத்தின்மனதுண்டாதல்- அதிகநி த்தின்வருதன்மயக்கந்தானுமே. (௱௪அ)

மயக்கமாய்மார்புமுகமெல்லாம்வாடி- வடிவுவெளுத்திடுதல்கண்தா ங்பசுமையாதல், தியக்கமாய்க்கண்ணுகிரிலீரத்தமில்லை-சிதறியேவயிறு கழிந்திடுதல்சத்தி, கயக்கமாயுள்ளங்காலுள்ளங்கையும்-கண்ணியேயெரி ந்திடுதற்றுகங்காணல்,இபக்கமாய்திரேகமெங்குமழற்றல்காணல்- இசை ந்தபடிபேசலெண்ணம்வேறுமாமே. (௱௪௯)

மாறல்சுரம்.

வேறுகியொருநாடான்மாறிக்காணல்-விளங்கிரண்டு நாள்மாறிச்சுர முண்டாதல், நாறுகிமூன்றுநாளு மீளமாறல்-நலத்தவைந்துநாண்மாறலை ர்த்தராத்ரி, பாறுகிவருநல்பதினைந்துநாண்மாறல்- பகர்பந்தவொருமாதந்

தான்மாறிக்காணல், வாறுகிவாதபித்தசேட்பங்கூடி-மருவிநின்றசுரந்தானுமாகிகமாமே. (௱௫௰)

## ஆகிகசீதசுரம்.

ஆகிகத்திற்சீதசுரத்தாண்மைகேளீர் ஆகமெல்லாமிகக்கடுப்புற்றனல்போலாகித், தேகிகத்திற்சிரமிடறுகண்களொடுபுருவஞ்சிறுவலியாய்வலித்துமதபேதமாகி, நாகிகத்தில்நாக்குதடுவழுவழுத்து - நல்லநித்திரையில்லாவுடல்திமிர்த்துஉருமும், மேகிகத்திற்சுரகுளிருந்தாகமூர்ச்சை-மிகத்தாபமயக்கமொடுதியக்கமாமே, (௱௫௧)

## ஆமசுரம்.

தியக்கமாமாமசுரத்தாண்மைகேளீர்-சிறுவலியாய்வலித்துமாசனங்கடுத்து, மயக்கமாமிரத்தமெடுசீதம்பேதி- மருவுதண்ணீர்தாகஞ்சுரமுமுண்டாம், கயக்கமாயுடம்பூதிவெளுறிக்காணும் - கால்கையுமசந்திருக்குங்கைக்கும்வாய்தான், தயக்கமாய்கால்கையுஞ்சயித்யமாகும்-சளியோடுமிருமலுமாய்த்தவிக்குந்தானே. ௱௫௨)

## சர்மத்தைப்பற்றினசுரம்.

தவித்திடாசுரநாலின்றன்மைதன்னைச்-சாற்றிடதேசடத்தினிற்குந்தோலைப்பற்றித், துவித்திட்டசுரமோடுமெலும்பைப்பற்றிச்-சூட்சமாய்க்காய்ந்தசுரமாந்தந்தன்னை, மவித்திடாதெரித்தசுரமாஞ்சந்தன்னை- மருவிநின்றசுரநாலின்வண்மைதன்னைக், குவித்திடாக்குணங்களெல்லாங்குறித்துச்சொல்லக்-குறுந்தோலைப்பற்றியதோர்குணத்தைக்கேளே. ()

குணமாகச்சற்றுடலைக்காய்வதாகும்-குடிலமாய்நாடிமந்தமேயிருத்தல், தணமாகச்சற்றேதான்றலையேநோதல்- தண்ணீர்தான்வேண்டியேதாகங்காணல், பிணமாகவுடம்பெல்லாம்வெளுத்துக்காணல்-பிரமையாய்வாய்பேசல்வாய்நீரூறல், நிணமாகவுடம்பெரிதன்மயக்கங்காணல்- நேர்தோலைப்பற்றுசுரநேர்மையாமே. (௱௫௪)

## அஸ்தியைப்பற்றினசுரம்.

நேர்மையாமெலும்பைப்பற்றியசுரத்தின்-நிலவரங்கேண்மிக்கதாகந்தான்காணல், மேர்மையாய்மேலெல்லாங்குளிர்ச்சிகாணல்-மிகக்கப்பட்சுரந்தானும்மேலிருத்தல், தீர்மையாய்தேகம்வெளுத்திளைத்திருத்தல்-தேகமெல்லாம்பஞ்சுபோற்சிரணித்தல், ஆர்மையாயடிவயிறுதனிலேநோதல்-அதிகதீவிரமானமலம்போக்காமே. (௱௫௫)

## இரத்தத்தைப்பற்றினசுரம்

போக்கானரத்தகதசுரகுணத்தைப் புகன்றிடவேபிரமையாய்ச்சுரந்தான்காணல், தாக்கானவியர்வையொடுதாகமுண்டாய்த்தன்னுடம்பெல்

லாநோதன்மூர்ச்சைகாணல்- வாக்கானவுடம்பதுவுங்கண்ணனுண்டாய், வழுவழுத்துநாக்கெல்லாம்மஞ்சள்போலாம், நீங்கானநெஞ்சுதனிற்கோழையுண்டாம்-நித்திரையாய்மலப்பந்தநீக்குந்தானே. (௱௫௬)

மாமிசத்தைப்பற்றினசுரம்.

மலபந்தமாங்சகதசுரகுணத்தை-வழுத்திடவேயதிகசுரமாகக்காணல், சிலபந்தசுவாசமொடுவியர்வுதோன்றல்- சிக்கியதேகமெல்லாநொந்துகாணல், லபந்தவுதடுலர்தலாலாபித்தல்-உடம்புபுளகிதமாதன்மயிர்க்குச்சாதல், அலபந்தமனதுவியாகூலமாதல்- அருவியெனக்கண்ணிநீர்ததும்புந்தானே. (௱௫௭)

ஜன்னிவாதசுரம்.

ததும்பலென்றசன்னிவாதச்சுரத்தின்- தன்குணந்தான்கழுத்துநெற்றிமார்பயர்க்கும், வெதும்பலொடுதந்திரமாஞ்சித்தப்ரம்மை-மிக்கானசரீரமெல்லாமெரிதனோதல், அதும்பலொடுகண்சிவந்துபச்சைபாய்தல் அதிகமாய்வாய்பிதத்தின்மூர்ச்சைகாணல், வதும்பலொடுமார்வலித்தல்தியக்கமாதல்-மயிர்ச்செறித்தல்இருமல்விக்கல்சுவாசம்தானே. (௱௫௮)

சுரரோகநிதாநம்-முற்றிற்று.

---

## சன்னிரோகநிதாநம்.

தானென்றசன்னியிடநிதானம்தன்னைச்சாற்றவேபதின்மூன்றும் தந்திரிகசன்னி, ஆனென்றஅத்தகமாம்சன்னிதானும்-அதிகருத்திரசன்னிசித்தவிப்பிரமம், தேனென்றசீதாங்கச்சன்னியோடு-சிறியதாத்திரீகசன்னிகர்னீகுபுச்சம், கானென்றகாணிகமாம்சன்னியோடு-கடுபக்திநேத்ரசன்னியும்தானுமே. (௱௫௯)

தானுனாத்தேழுசன்னியோடு-தக்கபிரலாபசன்னிசிங்குவாகம், ஆனுன அபின்னியாசச்சன்னியோடு-அடங்கலாய்ப்பதின்மூன்றுசன்னிதன்னில், கானுனஆறுசன்னிசாத்யமாகும்-கடிந்தேழுசன்னியுமேஅசாத்யமாகும், பானுனசன்னிபதின்மூன்றுக்குள்ள-பரிவானகுணமெல்லாம்பண்பாய்க்கேளே. (௱௬௰)

தாந்திரிகசன்னியின்குணம்

பண்பானதாந்திரிகச்சன்னியதின்குணந்தான்- பகரவேதேகமுமெப்போதும்போலாம், உண்பானவுடம்பிலேகுத்தல்காணல்- உயிர்சோபமாயிருத்தல்கால்வலித்தல், திண்பானசிலேட்டுமமேமிகுந்துகாணல்-தியக்கமாய்க்கண்திறவாமற்றான்மூடல், தெண்பானதிரேகமெல்லாமெரிச்சல்காணல்-திரேகமெல்லாங்குளுமையாயிருக்கும்பாரே. (௱௬௧)

### அந்தகசன்னியின்குணம்.

இருக்குமேநாவரளுந்தண்ணீர்தாகம்- எரிவுண்டாய்த்தேகமெல்லாம்பிரமையாகும், தருக்குமேதலைசுற்றல்மிகவுங்காணும் தன்னிலேவாய்பிதற்றும்வாந்தியாகும், விருக்குமேவிக்கலொடுசுரந்தானுண்டாம்-மேனமையாங்கைகாலுமசதியாகும், பருக்குமேதலைதனிலேபாரங்காணும்பார் அந்தகச்சன்னிபாதமாமே. (௱௬௨)

### உருத்திரகசன்னியின்குணம்.

சன்னியென்றருத்திரகந்தன்குணம்கேள் - தவித்துமேபிரதாபமெரிதலுண்டாம, தின்னிசித்தப்பிரமையொடுகழுத்துநோதல், தேகமெல்லாங்குத்தலுண்டாய்த்தியக்கமாதல்- பின்னிஇடைகொள்ளாமற்பிரளல்பெத்தல்-பின்கண்டபேருடனேமுறைபாடாகல், உன்னவுதடுலருதலாய்க்கழுத்துநெற்றி-உருத்திரகசன்னியெனவுரைக்கலாமே. (௱௬௩)

### சித்தப்பிரமைசன்னி.

உரைக்கவேசித்தப்ரம்மைசன்னிதன்னை உடம்பெல்லாமிக்கறுத்துநோதலுண்டாம், வரைக்கவேவாதமொடுபித்தமிஞ்சல்-மருவியசித்தப்பிரமைவிழித்தல், நரைக்கநாவிதமுங்குணமாய்க்காணல்- நலியாகிப்பாடியேவாய்பிதற்றல், இரைக்கவேசுவாசமொடுபேதியாதல்- இருந்தவிடம்விட்டுமேயேகும்பாரே. (௱௬௪)

### சீதாங்கசன்னியின்குணம்.

ஏகவேசீதாங்கசன்னிதன்னை-இயம்பிடவேசரீரமெல்லாங்குளிர்ந்திருக்கல், ஆகவேயிருமலொடுஇளைப்புண்டாதல்-அசதியொடுவிக்கலுடம்பொல்லாநோதல், மோகவேவாந்தியோடழற்றல்மூர்ச்சை-மூண்டுமேதேகமெல்லாமசைதல்காணல், பேகவேபேதியடிக்கடியுண்டாதல்- பிதற்றியேபுலம்பிமிகப்பேசுந்தானே. (௱௬௫)

### தாந்திரிகசன்னியின்குணம்.

பேசுமேதாந்திரிகசன்னிதானும்- பிதற்றலாய்வாய்ப்பிராவுதலுமாகும், கூசுமேநாக்கதுமிகக்கறுத்துக்-கூர்முள்ளுபோல்நாக்கிற்றண்ணீரில்லை, தாசுமேயுதடுலர்ந்துதாபங்காணும் தவிப்பெய்திவயிர்கழியுஞ்சுவாசமுண்டாம், வீசுமேதினவெடுத்துக்கண்பருந்து- மிகத்தண்ணீர்பாய்ந்துசாமிகுதியாமே. (௱௬௬)

### கண்டபுச்சனை.

மிகுதியாய்க்கண்டபுச்சம்விளம்பக்கேளாய்- மிகப்பிரமைதான்வருதல்தாபமாதல், தகுதியாய்த்தலைசுற்றல்சந்தோஷித்தல்- தனுப்போலக்கழுத்துநரம்பிழுத்துக்கொள்ளல், பகுதியாய்ப்புலம்பல் பயப்படுதல்மூர்ச்சை-பாரமாய்ச்சரீரமெல்லாம்நோதல்காணல், வகுதியாய்வாந்தியோடிருமல்விக்கல்-மார்புதலைநோதலாய்மருவுமாமே. (௱௬௭)

கர்ணிகாசன்னியின்குணம்.

மருவுகர்ணிகாசன்னிபாதந்தன்னை - வகுத்திடவே வாய்ப்பிதற்றி வெடித்தல்காணும், நருவுநாக்குக்கறுத்துப்பிரலாபித்தல்- நடுக்கியேவிக்கலோடிறைப்புகாணல், உருவுமுடம்பெங்குமேயசைதலாதல் உற்றசெவிகேளாதுகாதிரைச்சல், தருவுதலைபாரமாய்நடுக்கல்காணல்தண்ணீர்மேலடிக்கடிக்குத்தவித்தலாமே. (௱௬அ)

பட்சிநேத்திரசன்னியின்குணம்.

கவித்தபட்சிநேத்ரசன்னிபாதந்தன்னைச் சாற்றிடவேசரீரமெல்லாஞ்சயித்யமாதல், துவித்தகண்தான்றிறவாக்கினிலிருத்தல்- தூயகண்ணீர்பாய்ந்துமேதியங்கிக்காணல், கவித்தகண்ணில்பார்வைகாணாதிருத்தல் கடுஞ்சித்தப்பிரமையாய்ப்பிரலாபிக்கல், பவித்துடம்பெல்லாம்வாரம்பதைப்புகாணல்-பாந்தெழும்புமக்கினிபோற்சுரமுமுண்டாமே. (௱௬௯)

இரத்தேழுசன்னி.

சுரமானரத்தேழுசன்னிதன்னைச்- சொல்லிடவேநாக்குதடுவெடித்துக்காணல், நிறமானரொத்தமாய்பேதியாதல்-நெருப்பாகச்சுரமடித்தலுஷ்ணமாதல், திரமானவாய்வாளல்சித்தப்பிரமை- தியங்கியேநினைவழிதல்விக்கல்காணல், தாமானதலைசுற்றல்கறுப்புநாக்குத்- தமுகாதுகேளாமலிருத்தல்தானே. (௱எ௰)

பிரலாபசன்னி.

இருத்தல்பிரலாபமாஞ்சன்னிதன்னை-இயம்பிடவேசரீரமெல்லாமசவுகாணல், புருத்தல்புலம்புலுஷ்ணமாயிருத்தல்- புண்ணாகச்சரீரமுமொநந்திருமல்காணல், அருத்தல்தாபச்சுரமாய்தானடித்தல்- அடிக்கடிக்குவிக்கலொடுமூர்ச்சைகாணல், வருத்தல்மயிர்க்குச்செறிதல்முகமும்வாடல்- வாயலறிமோடியிடும்வண்மைதானே. (௱எக)

சிங்குவாசன்னியின்குணம்.

வண்மையாஞ்சிங்குவாற்சன்னிதன்னைவழுத்திடவேசுவாசமோடுஷ்ணமாதல், தண்மையாய்த்தாகங்கைகாலெரிச்சல் தருநாக்குக்கறுத்துமுட்போல்வெடித்தல், கண்மையாக்காதுகேளாதிருத்தல் கடினமாய்வாதிறவாமற்றூண்மூடல், உண்மையாயுடம்பெங்குஞ்சுரந்தான்வீசல் உடம்புபாரித்திருத்தல்விக்கலாமே. (௱எஉ)

அபின்னியாசன்னி.

இருத்தவேவாதபித்தசேட்பங்கூடி- இருமலொடுசுவாசமாய்ச்சுரமடித்தல், நருத்தவேநாக்குபலவர்ன்னமாகி- நாவதுதானரண்டுநிந்திரைம

மாதல், தெருத்தவேதேகமெங்குநோதல்காணல் - செடமெல்லாம்வியர்வையாய்ப்பலயீனமாதல் அருத்தவேயாகமெங்குமழன்றுபொங்கும்-அபன்னியாசன்னியிடவாண்மைதானே. (௱௭௩)

## சன்னிகளில்சாத்தியம்.

ஆண்மையாயாறுசன்னிசாத்யமாகும்-அதின்விபரமொவ்வொன்றுயறையக்கேளாய், தாண்மையாய்த்தந்திரிகசன்னிதாந்திரிகசன்னி- தாக்கானபிரலாபச்சன்னியேரடு, திண்மையாய்ச்சித்தவிப்ரமசன்னியோடு சிங்குவாகச்சன்னிகாணிகச்சன்னியாறு, வெண்மையாய்விஷதத்தில்விடுபட்டேகும்-மேன்மையாஞ்சன்னியிடகுணமிதாமே. (௱௭௪)

## சன்னிகளில் அசாத்தியம்.

குணமில்லாசாத்யசன்னிகூறக்கேளாய் கொடிகானருத்திரிகசன்னியோடு, அணமில்லாவர்தகமும்பக்கிநேத்திரம் அரிதானகண்டகுபுச்சமர்த்தேழோடு, திணமில்லாச்சிதாங்கமபின்னியாசஞ்சீரானவவிழ்தமிட்மிதுதிராது, பணமில்லாச்சன்னிபதின்மூன்றுஞ்சொன்னேன்-பக்குவமாய்ப்பார்த்திதனைப்பாலிப்பாயே. (௱௭௫)

## சன்னிகட்குக்காலவளவு.

பாவித்தசன்னிகட்குக்காலங்கேளாய்- பகர்தாந்திரிகசன்னிக்குநாளேழாகும், ஆவித்தவர்தகற்குப்பத்துநாளாம்- அதிகருக்கிருக்குப்பனிரெண்டேநாள், சேலித்தசித்தப்ரமற்கிருபத்தோர்நாள்-சிதாங்கச்சன்னிக்குப்பதினைந்தாகும், காலுத்ததாந்திரிகற்கிருபத்தைந்து- காணுகின்றநாளேழிற்றீருந்தானே. (௱௭௬)

திருமேகண்டபுச்சம்பதின்மூன்றேநாள்- திர்க்கருணிகசன்னிதொண்ணூறேநாள், பாருமேபட்சிநேத்ரசன்னிநாளெட்டு-பத்துநாள்ரத்தேமூசன்னிக்காகும், பேருமேபிரலாபமீரேழாகும்- பெரியசிங்குவாகத்துக்கீரெட்டாகும், ஆருமேஅபின்யாசம்பதினைந்தாகும்-அவதிநாட்சன்னிதனக்கறிந்திடாயே. (௱௭௭)

## தோஷசுரஉற்பத்தி.

அறிந்திடவேதருணசுரத்தவபத்யம்வந்தால்-ஆங்கிரமமாமேமூவிதத்தோஷமாகும், தெறிந்திடவேயேதென்றால்சொல்லக்கேளாய்-தித்திப்புப்புளிபழற்சிகசப்புமாகும், பறிந்திடவேபாக்குவெற்றிலையும்பாலும்-பரிமளமாந்திரவியமும்பச்சைத்தண்ணீர், கறிந்திடவேசயிற் பண்டம்ஸ்திரீசையோகம்-தரித்தேடுவாசித்தலெழுதல்வழிநடையே. (௱௭௮)

வழிநடைதான்சுகந்தமாஞ்சந்தனம்பூ - மணமானகற்பூரஞ்சிவந்ததொருவஸ்திரம், நெழிந்திடைதான்நெய்யவெல்லமெண்ணெயுடன்மோ

ர்தான் - நெகிழ்ச்சியாந்தயிர்மெத்தபுதுப்பிடவைகாற்று சுழிநடைதான் பெண்பார்வைமெய்நீண்டியாளல்-சுரவந்தவொன்பதுக்கு ளொன்பதின் மேற், பழிநடையிப்படிக்கொத்தவபத்தியம்வந்தாக்கால் - பரிந்துமகா தோஷம்வந்துபிறக்குந்தானே. (௱௭௯)

தானென்றசுரத்திலவபத்தியங்கள்ளல் - சயித்தியத்தாலுபசாரத் தால்மந்தத்தால், சூனென்றசுரம்பிறந்துதோஷமாகும்-சுருக்கான மூர்ச் சையாய்இருந்துகாணும், கானென்றபிரமையொடுக்கியதாகம்-கருத்தழி ந்துபுலம்பியேமார்தானோகல், ஆனென்றஅவபத்தியத்தில் வந்ததோஷ ம்அதின்குணத்தையறிந்தானவிழ்தஞ்செய்யே. (௱௮௰)

செய்யவேதருணசுரமாயிருக்கல் - ஸ்திரீசஞ்சாரஞ்செய்தாற்றிரி தோஷமாகும், உய்யவேஇதின்குணந்தான் உடம்பெல்லாநோகும் உபர் கின்றமாருங்குளெரிதலுண்டாம், தையலேசரீரமெங்குமட்டங்காணு ம்-தவித்துமேபுலம்புமடிக்கடியெழுந்து, கையவேகால்கைதான் குளிர்ந் திருக்கும்-கடினமாஞ்சித்தபிரமைகாணுங்காணே. (௱௮௧)

பிரமையாங்காச்சலொடுபிதற்றல்காணல் - பெருகவுஷ்ணம்மாதல் தாகமாதல், வறுமையாய்வயிறெறிதல்மூர்ச்சைகாணல்-வாதமாம்நாடிய துகுடிலமாதல், சிறுமையாகியர்வையொடுசஞ்சலித்தல்-மிக்கானவுழலை யுப்பிசமுமாதல், அறுமையாயங்கமெல்லாமழற்சியாதல்அதிகவிஷந்தோ ஷசுரமறிந்துபாரே. (௱௮௨

காருக்காகச்சுவாசமாமிகவுண்டாகும்-கணமாகவாயிறாரோஉஷ்ணிக்காணும், உருக்காகஉடம்பெங்கும்மிகவலிக்கும்- உளறிரோணிபோல்வாய்நீர்காணும், முருகாகமயக்கமுண்டாகும்-மார்பிலேவலியாகிஇருமலுண்டாம், தாருகாகவயிறதனிற்பசியுமில்லை- சுவாசமாம்பித்தத்தின்குட்சந்தானே. (௱௬௨)

## சேட்பபித்தம்

சூட்சமாஞ்செம்புதனிற்களிம்புபோலும், துரிதாகவாயெடுக்குஞ் செகப்பாய்வீழும், மாட்சமாமலமிறுக்கிச்சிவப்புபோலாம்-பயக்கமொடு வியர்வைதான்செந்நீர்பாயும், தாட்சமாந்தண்ணீர்தானமிகத்தவிக்கும்-தலைதானுந்திருப்பியேதவக்கமுண்டாம், கேட்சமாந்திடுக்கோடுபயமுமாகுஞ்சிறுகதிர்போல்மேனிச்செய்பித்தமாமே, (௱௬௩)

## கரும்பித்தம்.

செய்பித்தமாகியேநியக்கமுண்டாய்ச்-சிரசோடுமெய் நடுக்குந்தலைவலிக்கும், கப்பித்தமாகியேகண்ணுறங்கும்-கடைக்கண்தான்சிவந்துமின்மினியாகும், நம்பித்தஞ்சடமெல்லாங்கனத்துவறளும்-நாவுதனில்ருசியில்லைப்பசியுமில்லை, வம்பித்தங்கருப்பாகிவாந்தியுண்டாம்-மாசடையுங்கரும்பித்தம்வளப்பந்தானே. (௱௬௪)

## காப்பான்பித்தம்.

வளப்பமாஞ்சரீரமெல்லாஞ்சொறியுண்டாகி வருந்தமிகவாகியேகட்டிகட்டும், குளப்பமாய்வயிறுதான்பேதியாகும்- குமலாயிருமியேயிழுத்துக்கொள்ளும், இளப்பமாய்க்கால்தானும்பெலன்கெடாகும் இடுப்பிலேவலியுண்டாய்த்திமிருண்டாகும், களப்பமாய்க்கருகியேமேனியெல்லாம் - கந்திகாப்பான்பித்தங்கண்டிடாயே. (௱௬௫)

## அசீரணபித்தம்,

கண்டிட்டமந்தமாய்ப்பசியோ இல்லை-கடுத்துமேநளிராகிமலமிறுக்கும், வெண்டிட்டவிழிகரித்துநீர்தான்பாயும்- மிக்கதலைவலிக்கும்வயிறிரைச்சலாகும், அண்டிட்ட அடிவயறு அழுக்கமாகும்-அசனமிகச்செல்லாதுகைகாலோயும், பண்டிட்டபிளித்தேத்காய்வாய்நீரூறும்- பண்பானவசீரணபித்தம்பயின்றிடாயே. (௱௬௬)

## உருசிபித்தம்.

பயின்றிட்டமனமறுத்துக்குடல்பிரட்டிப்- பாங்கானவாந்தியொடு அருசியாகித், தியன்றிட்டதியக்கமாய்ச்சிரசிலேறித்-திருப்பியேதலைதன்னைபபிறகேவீசும், நவின்றிட்டவடிநக்குமிகத்தடித்து-நாவிலேஉணர்ச்சியில்லாதுறக்கமற்று, அவின்றிட்டவாகாயமெரிதல்போலாம்-அதட்டுமேஉருசியென்றபித்தந்தானே (௱௬௭)

## எரிபித்தம்.

அதட்டியேஅடி இடைதானிரண்டுபாதம் அழகானகண்ணோடுஉள்ளங்கால்கள், கதட்டியேஉள்ளங்கையெரிவுதானும்-கா[illegible]டுமூக்கோடுவாண்டுபோகும், முதட்டியேமுதுங்கு[illegible] முதிர்ந்த அருவிப்பாகமெதத்வாகும், பதட்டியேநாற்றுத்[illegible]-புரமாமெரிபித்தம்பயின்றவாறே, (௱௬௮)

## அழல்பித்தம்.

வாரான இளமைதனில் மிகநரைக்கும் வடிவமெல்லாமிக வெளுப்பாய்த்தானிருக்கும், காரான கடைக்கண்தான் மிகச்சிவக்கும் கண்டபல ஞானங்கள் மிகவேபேசும், தாரான வார்த்தைகளைதான் மிகச்சிக்கென்று - துடியிடையார் மேலின்பந்திறந்து கூறல், பாரான பலகலைநீர் மிகவுரைத்தல் - பாடுமெய்யழற்பித்தம் பரிசுதானே. (கசகூ)

## துடிபித்தம்.

பரிசுதான் உடம்பெல்லாமிகத்துடித்துப் - பாண்டுவாய் மேனியுங்கண்டபச்சென்றிருக்கும் உரிசைதானில்லாமல் உண்ணமாட்டார் - ஓட்டமேயிருதியாயுலையப்பண்ணும், அரிசுமேயாயிழைமேல்மனப்புண்ணாகும் - அடிக்கடிக்கு ஆரோடுஞ்சண்டைகொள்ளும், துரிசுதான் மிகப்பண்ணுமேதாவண்டில் - துடிபித்தந்தன்னுடையசொருபமாமே. (கஎய)

## விஷபித்தம்.

சொரூபமாய்ச்சோர்ந்துமே விழுந்திருக்கும் - தூற்றுமே கொடுமைதன்னையாரோடுந்தான், உருபமாயுள்ளங்கால்தனிலிருந்து - உயரமாயே றுமுச்சந்தலைதன்னிற்றான், நிருபமாவிஷமிறக்கும்போலே யும்தேகமெல்லாம் வலியுண்டாய்க்கண்டிப்பாகும், அருபமாயசனமிகத்தானுஞ்செல்லா - அரிதானவிஷப்பித்தமசாத்தியமாமே (கஎக)

## அதிசாரபித்தம்.

அரிதானவயிற்றனிலிரைச்சலாகும் அடிவயிறு பிடுங்கியேபேதியாகும், உரிதான உன்பசந்தான்மெத்தவாகும் - ஒளியிலாப்பக்கத்தில் வலியுமாகும், எரிவானசரமெல்லாங்குமறல்காணும் - ஏற்றமாய்த்தாகமோடுமயக்கமாகும், கரிதானவரோசிகமாசத்தியாகும் - கலிக்குமேயதிசாரப்பித்தமாமே. (கஎஉ)

## மூலபித்தம்.

சாரமாய்வயிறிரைந்துபேதியாகும் - சலிப்பானகோபமாய்த்தூமேலேறிடும், கோரமாமூறத்தில்முளையுங்காணும் குறங்கிலேநெட்டித்துடையுங்கடுப்புமுண்டாம், சோரமாவுடல்வெளுத்துசோகையாகும் - தூக்கமே மிகமிஞ்சிச்சோம்பலாகும், காரமாய்க்கண்ணுந்தான் கரிச்சலுண்டாம் - கனமூலபித்தத்தின் காட்சியாமே. (கஎங)

## உதிர்பித்தம்.

ஆமென்ற அங்கமெல்லாமைவார்த்து - அட்டிஞற்போலவேவெளுத்தனவுமாகும், போமென்றசரீரமெல்லாம் புண்களாகும் - புழுதியள்ளிப்பூசினாற்போற்சரீரம், வாமென்றவடிவமதுதானுங்களாகும் - மலைசலமுஞ்சுருங்கியேவாட்டமாகும், நாமென்றநாடியதுதானுண்டுகாணும் நாட்டமுண்டாமுதிர்பித்தநாடுவோர்க்கே. (கஎச)

## கண்டபித்தம்.

நாடிநாற்குரலினைத்தான்கனக்கக்கொண்டு நற்கசப்பாயசத்தியத்து காணெடுக்கும், வாடியே கண்டத்திற்புண் போலாகும்-வழவழக்குநாவெ க்காம்வரண்டிருக்கும், தாடியேதாளடியில்கனப்புண்டாகும் - சமுக்கிர தந்திரீநாசைபோற்காதிலுண்டாம், பேடியாமயிருஞ்செம்பட்டையாகு ம், பிறவிசுவாங்கண்டபித்தப்பிரதாபந்தானே. (௩௭௫)

## ஊடுபித்தம்

பிரதாபமாகியேஓடியெங்கும் - பெற்றனாலுதாகினங்கள்மெத்தப் பேசும், நிரதாபமாகவேபல்கடிக்கும்-நெருப்பாகக்கண்சிவக்கும்நிறைதக் குமூடும், குரதாபமாகவேகூவற்பாடும்-கொக்கரிக்குங்கூக்காடுங்குறி ச்சேபார்க்கும், அரதாபமாகவேயாண்மையுண்டாம்- அசாத்தியமாமோ பித்தமணுகினோர்க்கே. (௩௭௬)

## மூடுபித்தம்.

அணுகியேயபாரணப்பொன்றனைக்காண் அகப்பட்டவிடந்தனிலே புதைத்துப்போடும், மணுகியேமணிகளைத்தான்கண்டபோதே வார்த்தை கள்தானுதாசினங்கள்வசனிப்பாகும், நணுகியேகாக்குக்குள்தானேபே சமநலத்கண்டிபண்ணியேயிருக்குமைதகள், மிணுகியேஎந்நேரமன்னம் வேண்டா-மிக்காகமூடுபித்தமீறினோர்க்கே, (௩௭௭)

## நடுக்குபித்தம்,

மீறியேதலையோடுசிரசுநெற்றி- மிக்கானபிடரியொடுமுதுகுக்கண் டு, காறியேகண்டங்கள்கதுப்போடொக்கக்-கனமானநடுக்கியேகாந்தியா கும், சீறியேசசப்பாகவாந்தியாகும்-கிணுக்கிருமலாயிருமுந்தூக்கமில்லை ஊறியேவாய்நீர்தான்மார்பில்வீழும் ஊறுமேநாத்தானுநடுக்கும்பித்தம

## கபாலபித்தம்.

நடுக்குமேகபாலந்தான்சிரசோடொக்க- நளிராகிஉடம்பெங்குந்த டிப்புமாகும், விடுக்குமேஅம்புபோற்சிரசெல்லாந்தான் - மேனியுமேம ஞ்சணிறமாகுங்கண்டாய், முடுக்குமேமூக்குதண்டெல்லாநோகும்-முக மெல்லாம்வீங்கியேமூர்ச்சைகாணும், படுக்குமேஅடிக்கடிதானெழுந்தி ருக்கும்-பாரமாங்கபாலபித்தப்பண்புதானே. (௩௭௯)

## சத்திபித்தம்

பாரமாயுடம்பெங்குந்திமிருண்டாகும்-பதைத்துமேநாவுக்குள்வ லியுண்டாகும், வாரமாய்வாய்கையற்றுவாந்தியுண்டாம்- மகந்தானதலை யொடுக்கமயக்கமாகும், ஆரமாய்அக்கினிதான்மிகவுண்டாகும்- அரோசி கமாமெந்நேரமண்மைகுன்றும்காரமாய்த்தண்ணீர்தான்மிகவேவுண்டா தசமிக்க-தாகசத்திபித்தத்தாண்மைதானே. (௩௮௦)

### தாகபித்தம்.

ஆண்மையாயடிவயிற்றிற்பனைகப்புண்டாகும் அங்கமெல்லாம்வெவ்வழல்போலழன்றுகாணும், காண்மையாய்க்கண்ணீர்காண்மிகக்குடிக்கு-சயித்தியமம்பணைடைக்கிலிச்சையாகும், காண்மையாயுண்டத்தில்வியர்வைகாணுங்-கழுத்தடியுநாவடியுமிசிக்குக்கொள்ளும், பூண்மையாய்ப்புளிப்புமேலிச்சையாகும் புகலிய தாகபித்தம்பேசலாமே. ()

### விக்கல்பித்தம்.

தாகமுடனசத்தியதாய்விக்கலாகும்-தளிர்மெய்திசரீரமெல்லாஞ்சயித்யமாகும், பாகமுடன்றகேசரட்டுத்திடைகொடாதுபால்போலேவாயினிலேநுரையுங்கள்ளும், சாகமுடன்சயித்தியகநில்பிக்கிடக்கும்-நலாகவுடல்வெதுப்புங்களர்ச்சியாகும் சோகமுடனகைகால்தானைச்சலாகும் சுருக்கிடுமேவிக்கல்பித்தஞ்சுருதிகாணே (கஅ௨)

### சயபித்தம்.

சுருதியாயிருமலதாமிரவுமுண்டாய்ச்-சுகமாய்வெதுப்புமேவிடுகண்ணீர்தாகம், பருதியாயுடல்வெளுத்துப்பாண்டாகும்-பஞ்சபோற்கண்களெல்லாம்வெளுப்பாய்ப்போகும் குருதியாய்நெஞ்சுதனிற்கோழைகட்டும்-குணுக்காகக்கட்டிபோற்சளியேவிழும், நிருதியாய்நெஞ்சுதனில்எரிவுண்டாகும்நித்திரையேமிஞ்சுசயபித்தந்தானே. (கஅக)

### திமிர்பித்தம்.

பித்தமாயுடம்பதுதான்மிகமயக்கும்-பேதமாய்வயிறெறங்குமுன்னுபோலாம் சித்தமாய்க்காலமேவாந்தியாகும்-நினைவொடுநித்திரையுமசதியாகும், பத்தமாயொன்றையேபிடித்துநிற்கும்-பாரமாயுடம்பெங்குந்திமிருண்டாகும், சுத்தமாய்ச்சரீரமெல்லாந்துசண்டாகும் - துருசுநடைகொடாதுதிமிர்பித்தந்தானே. (கஅச)

### வலிபித்தம்.

நடைகொடாதடிவயிற்றிலிழுத்துநொந்து-நாவரண்டுதலையெல்லாமிகக்கனத்து, இடைகொடாச்சகலகெல்லாநோவுண்டாகி- ஈரல்தனிற்குலைதனிலேவலித்துநோவாய், படைகொடாமலந்தானும்பச்சென்றாகும் படபடத்துஉடம்பெங்கும்பக்கங்கொள்ளும், மடைகொடாவயிறெரிச்சல்மெத்தவாகும்-மார்படைக்கும்வலிபித்தவண்மைதானே. (கஅரு)

### சீதபித்தம்.

வண்மையாயுடம்பெங்கும்வடியுங்கண்ணீர்-மயக்கமாயுடல்கனத்துப்பாரமாகும், புண்மையாய்ப்பிடரிதனிலிகவுண்டாகும்- பொருமியேவயிறுப்பசங்கைக்கும், திண்மையாயுடல்களைத்துச்சொக்குப்போலாம்- சீறியேமிகவிருமிச்சிகைகேடாம், செண்மையாய்வாய்நீர்தானுப்புமைக்குஞ்சிறுநீருஞ்செப்பாகுஞ்சீதபித்தம். (கஅசா)

கிருமிபித்தம்.

சீதமாயடிவயிற்றிற்றிருண்டாகிச் - செழுமையாயுடம்பெங்குந் தினவுமாகி, வாதமாயுடம்பெங்குங்கடுப்புண்டாகி-வற்றியேமலசலமும் வரண்டுபோகும், காதமாய்க்கால்கைகள்கதலித்தண்டு- கனத்ததுபோல் வெச்சென்றுகடுப்புமாகும், நாதமாய்மலந்தன்னிற்கிருமிவீழும் - நாறு மேயுடல்திமிருப்பித்தமாமே. (௩அ௭)

அசாத்தியபித்தம்.

உடம்பதுதான்லாகிரிகள்தின்றவன்போல்- உணர்ச்சிதானில்லாம ற்பிடவைகட்டா, தடம்புதானழலனுருந்தன்மைபோலத்தவிச்சுமேதா கந்தான்மிகவுண்டாகும், வடம்புதான்வாதாடுமெனிதரோடே- வார்த்தை கள்தான்பலபேச்சும்வசனிப்பாகும், வடம்புதானுக்கிரமாய்க்கண்சிவக் கும்-வாய்வாளுமசாத்தியபித்தந்தானென்றே. (௩அஅ)

மார்க்கபித்தம்.

தானென்றசகலநூல்தான்றான்பேசும்- தடுதியினிலுட்காருமோட் டம்பாயும், போனென்றபிடவையைத்தான்கிழித்துபோடும் புலம்புமே வாயில்வந்ததெல்லாம்பாடும், தேனென்றசிரசோடுபிடரியெல்லாம்- சிக் கெனவேஇசுவாகுந்தேகம்வாடும், பானென்றபலபலவாங்கருமஞ்செய் யும்-பழிக்குமேபிறரைத்தான்மார்க்கபித்தம். (௩அ௯)

மருத்திடுபித்தம்.

மார்க்கமாமனமதுதான்மௌனமாகும்- வடிவெங்குமூதியேநெஞ்சு வற்று, ஊக்கமாயுடம்பதுதானசதியாகும் - ஊணுறக்கமில்லாமலுழனு மெங்கும், தேர்க்கமாந்திடுக்கிட்டுச்சிதைவாம்புத்தி-சேயிழையார்மருந் தினுற்றிரட்சியாகி, ஆர்க்கமாயடிக்குடலில்மிகுந்துபாழி- அடங்காதும ருத்திடுபித்தமாமே. (௩௯0)

ஆமப்பாபித்தமதுநாற்பத்திரண்டின்- அடவானகுணமெல்லாமாய் ந்துபார்த்து, தாமப்பாசதாசிவன்றான்தன்வந்திரிக்கு- தயவுடனேஅநு க்கிரகம்பண்ணிச்சொல்ல, வாமப்பாதன்வந்திரிஅசுவினிதேவர்க்கு- மகி ழ்ந்துரைக்கஅசுவினித்தேவர்தாமும், தேமப்பாஅகஸ்தியமாமுனிக்குச் சொல்ல-சித்தமகிழ்ந்தேயுரைத்தார்புலத்தியர்க்கே. (௩௯௧)

புலத்தியருந்தேரையமாமுனிவனுக்குப்-போதிக்கத்தேரையாமுனி வன்றானும், தலத்தியாம்யூகியாம்எனக்குச்சொல்ல-சாங்கமாயூகினென்ற முனியாம்யானே, வலத்தியாய்வடமொழியின்விரிவாய்த்தானே, மானி டர்கள்தமக்குரைத்தேன்மறைப்பில்லாமல், குலத்தியாங்குருவினிடவு பதேசத்தாற்-குத்தபித்தநாற்பத்திரண்டுமுற்றே. (௩௯௨)

பித்தரோகநிதானம்-முற்றிற்று.

உ

## சேட்பரோகநிதாநம்.

முற்றானசேட்பந்தானிருபத்தொன்றும்- முனியுரைத்தசொற்படியேமொழியக்கேளாய், சிற்றானவிருமலாஞ்சிலேட்பத்தோடு- செறிகாசச்சிலேட்டுமமாஞ்சுவாசச்சிலேட்பம், மற்றானதீபனசிலேட்பத்தோடேமந்தசிலேட்டுமம்வாதசிலேட்பமாகும், துற்றானபித்தசிலேட்பந்தொந்தசிலேட்பம்-சுகசன்னிவாதசிலேட்பந்தானே. (௩௬௩)

ஆகுமேசுரசிலேட்பமதிசாரசிலேட்பம்- அதிகசலசிலேட்டுமமாவக்கினிசிலேட்பம், போகுமேபூதசிலேட்டமுயலகன்றன்பொறிவெறிச்சசிலேட்டுமமாம்விகாரசிலேட்பம், சோகுசுரோணிதசேட்பம்விரணசேட்பம்- துர்க்கந்தசிலேட்டுமமாநித்யசிலேட்பம், நாகுமேஇருபத்தொன்றுஞ்சிலேட்பம்-நாட்டினேன்வாலாறுநயந்துகேளே. (௩௬௪)

நயமாசஒருவருடன்பேசும்போது- நாவிலொன்றுமனதிலொன்றுநாடும்பேர்க்கு, பயமாகவந்தவர்கட்கிடங்கொடாத-பாதகர்க்கும்வேதத்தைப்பழிக்கின்றோர்க்கும், துயமாகசூரியருக்கெதிரேநின்று- ஜுரிசாகமலசலங்கள்விட்டபேர்க்கும், செயமாகவிஷ்ணுசமயஞ்சிவசமயந்தான்-நிடாகரித்ததுரோகிக்கும்சேட்பமீறும். (௩௬௫)

மீறியேதித்திப்புபுளிப்புத்தானும்-மிகதின்னுங்கிழங்குவகையருந்தினும், சாறியேசயித்தியமாங்குளிர்ந்தபண்டந்-தண்ணீர்தான்பழையதுகளருந்தலானும், சீறியேதன்வயதுதனக்குமூத்தஸ்திரீகளுடனதுபோகம்செய்தலாலும் மாறியேமயானபுகைபடுதலாலும்- வருகுமேசேட்பத்தின்மகிமைதானே. (௩௬௬)

### சிலேட்டுமம்வர்த்திக்குங்காலம்.

மகிமையாய்மாசியொடுபங்குனித்தான்- மருவியேவர்த்திக்குமையந்தானும், நகிமையாய்வைகாசிதனிற்கோபிக்கும்-நன்மையாம்ச்சமிக்கின்றகாலங்கேளாய், அகிமையாயடிதனில்மிகச்சமிக்கும்- ஆவணியும்புரட்டாசிதன்னிற்கேளாய், தகிமையாய்த்தீரட்சியாங்காலமாகும்-சதாசிவன்றன்சொன்னபடிசாற்றினேனே. (௩௬௭)

### இருமல்சிலேட்பம்.

சாற்றியேயினிப்புநெய்ப்பாய்ச்சளியேவிழும்-தளுக்காகுமுகந்தானுங்குளிருண்டாகும், மாற்றியேமூக்கதனில்நீரோபாயு மாசற்றவுடம்பெல்லாம்வெள்ளையாகும்-சீற்றியேமலந்தன்னிற்சீதமுண்டாய்ச்-சிறுநீருமளுசளித்துச்சிறுகவிழும், காற்றியேஉடம்புக்குள்மெதுவுண்டாகும்-தன்னவிருமலாஞ்சேட்பங்கணக்குத்தானே. (௩௬௮)

கூ

## காசசிலேட்டிமம்.

கணக்காகச்சரீரந்தான்தேளமாகிக்-கனத்துமேகமகதிட்டுப்பாரமாகி, மணக்காகநாடியெல்லாநுணுக்கமாகும்- மருவுசேட்பத்தைடந்துவாய்வரண்டு, அணக்காகஅக்கினிதான்மிகவுண்டாகி- அடிமூக்குக்கண்டெல்லாமிகக்கனத்து, திணைக்காசஇருமலொடுதினவுமுண்டாம்- செயலாகச்சிலேட்டுமத்தின்றிறமைதானே. (ருசுகூ)

## சுவாசசிலேட்டுமம்.

திறமையாய்நெஞ்சுதனிற்கோழைகட்டும் - சிக்கென்றுதானிருமிமூக்கடைக்கும், குறமையாய்க்குறட்டென்றுசுவாசங்காணும்-குளிரோடுசுரமுண்டாய்மயக்கமாகும், மறமையாய்மார்போடு நெஞ்சடைக்கும்- வாய்வரண்டுமூக்கதனில்நீரோபாயும், வெறுமையாய்மிகத்தண்ணீர்தாபமுண்டாய் விடுசுவாசசிலேட்டுமத்தின்விபரந்தானே. (சுஎ)

## தீபனசிலேட்டுமம்.

விபரமாய்த்தீபனந்தான்மிகவுண்டாகும் மிக்கானவுடம்பெல்லாமெரிவுண்டாகும், அபரமாம்நெஞ்சடைக்குமழுகையாகும் ஆக்கையெல்லாம்வலியுண்டாயழலுண்டாகும் சபரமாய்க்கைகாலுஞ்சயித்யமாகும்- கனத்துமேசரீரந்தான்பருத்துக்காணும், உபரமாயுண்ணுக்கிற்பசபசக்கும்-உறுதியாய்த்தீபனசிலேட்டுமந்தானென்னே, (சாக)

## மந்தசிலேட்டுமம்

தானென்றவயிறுதனில்மந்தமுண்டாய்ச்-சலங்கட்டு மலங்கட்டுஞ் சயித்யமாகும், ஊனென்றவுடம்புதனில்அயர்வையாகும்-ஓக்காளமிகவாகிஉயர்மூர்ச்சையாகும், காமென்றஅடிவயிறுகல்லுப்போலாம்- கனத்திருமலிருமலோகாலுண்டாம், வாயென்றவாய்கைத்துக்துவர்ப்புக்காணும்-மந்தமாஞ்சிலேட்டுமமென்றறைந்தவாமே, (சாஉ)

## வா சிலேட்டுமம்.

வழுக்கதோவாயிறுதான்பொருமிக்கொள்ளும்-வலித்துமேவயிரங்கீழ்க்கடுக்கும் அழுக்குதேவாங்கமெல்லாங்குழிகள்வீழும்- அகரங்கள்பல்லெல்லாங்கறுத்துக்காணும் விழுக்கதேவமேனியெல்லாம் - வலியுண்டாகும்-மேகம்போல்நீர்தான்தீஞ்சுவெள்ளைகாணும் பழுக்கதேவபல்லுக்குக்குடைச்சலாகும்-பாரமாய்வாதசிலேட்டுமத்தின்பண்பே. (சாங)

## பித்தசிலேட்டுமம்

பண்பாகக்கண்மயங்கிக்கிறுகிறுக்கும் - பக்கியங்காண்மிகுதியாய்க்கியாகும், உண்பாகவசனமிகக்காலுங்கசக்கும்- உறுதியாய்நீர் தான்மிகவுண்டாகும் கண்ணாசக்கடுங்கடங்கிறுகிறுமிகுந்து கோவயிறுநெலாமூர்ச்சையாகும், திண்பாகமேனியுமேமஞ்சளிக்கும்-பித்தசிலேட்டுமத்தின்பண்பாகுந்தானே- (சாச)

### தொந்தசிலேட்பம்.

விபரமாய்மேனியெங்குமழற்றியாகும்- விக்கலோடிருமலாய்ச்சுவாசமுண்டாம், அபரமாய்ச்சுரமுடனேயசதியாகும் - அழன்றுமேவுடம்பெங்குமெரிவுண்டாகும், கபமாய்அன்னமுந்தான் பொசிக்கொட்டாது-சளியோடுஇருமலுமாய்ச்சண்ணுகிற்கும், குபரமாய்க்குளிரோடுமயிர்க்கூச்சுண்டாம் கொடிதானதொந்தசேட்டுமசாத்யம் (சாரு)

### சன்னிசிலேட்பம்.

கொடிதாகநாவரண்டுகறுப்புமாகும்- குளிர்ந்துமேசுரமுண்டாமெரிவுண்டாகும், கடிதானஉடம்பெங்குமிசுவுகாணும்-கனமானவசதியொடுமறதியாகும், கடிதாகத்தாடையொடுகன்னங்காதும் - தாக்கானபுருவமொடுநாசியுச்சி, படிதாகத்துடித்துமேபடபடக்கும்-பாகசன்னிசிலேட்பமென்றேபருகிடாயே, (சாசு)

### சுரசிலேட்பம்.

பருகவேசுரந்தானும்பலகாலுண்டாம் - பாரமாயுடம்பெங்குமவலியுண்டாகும், அருகவேயடிக்கடிக்குவியர்வையாகும் - அன்னந்தான்கொண்டுடனேவாந்தியுண்டாம், உருகவேவாயெறெல்லாமுளைச்சலாகும் -உப்பிசமுமேல்மூச்சுமிருமலுண்டாம்,கருகவேநாவரண்டுநீர்தாகிக்கும் -கனமானசுரசிலேட்பங்காணச்சொல்லே, (சாஎ)

### அதிசாரசிலேட்பம்.

சொல்லவேவயிறுமணிற்குற்றலுண்டாம்- சூலையாய்வலித்துமேசுழன்றுவிழும், அல்லவேவிலாப்பக்கமிளைச்சலாகி- அதிசாரம்போற்சிவந்துஅசதியாகும், பல்லவேமார்பொடுநெஞ்சுநொந்து-வாய்வரண்டுஇருமலொடுமூச்சுண்டாகும், தல்லவேதாகமுடனெரிவுமுண்டாம் -தவிக்குமேயதிசாரசிலேட்பந்தானே, (சாஅ)

### சலசிலேட்பம்.

தவிக்குமேதண்ணீர்தான்மிகவுங்கேட்கும்- சலந்தானுஞ்சிக்கென்றுதடித்திறங்கும், அவிக்குமேபடிக்கடிக்குநீரிறங்கும்- அனலாகதழன்றுமேஆலோசிக்கும்,கவிக்குமேகுரல்தானுங்கம்மலாகும்-கனமாகக்கோழையொடுசிலேட்பம்விழும், பவிக்குமேபல்லெல்லாமலைச்சலாகும்-பாகமென்றசலசிலேட்பப்பருகிடாயே. (சாகூ)

### அக்கினிசிலேட்பம்.

என்றதோரிருமலொடுகோழையுண்டாம்- எழிலுடம்புஅக்கினியாயெரிபறந்து, கன்றெனவேகால்கையுமழற்சியாகிக் கண்ணேடுமூக்குமேயெரிவாய்க்காணும்,கன்றெனவேதாகமதுமிகவுமுண்டாம்-சயித்தியமாய்க்கால்கைகள்குளிர்ந்துகாணும், உன்றெனவேயுண்டபின்புபசியேயாம்உறுதியக்கினிசிலேட்டுமத்தினுண்மைதானே. (சாய)

### பூதசிலேட்டம்,

உண்மையாங்கண்ணிருட்டிவிழிகதுப்பார்க்கும்-ஊமையைப்போருணிருந்தேசஉரக்கப்பேசும், குண்மையாய்க்காட்டோடு சூச்சவாங்குமகொடிக்கொடியாய்ச்சளியோடுஇருமலாகும், தெண்மையாய்மேனியெங்கும்கம்வலிவாக்குங்- கெருநெரனப்பலதனையேமிகக்கடிக்கும். தண்மையாய்ச்சங்கேதஷவார்த்தைதே சிசண்டைகொள்ளுநபூதசிலேட்டந்தானுமே. (௪௱௰௧)

### முயலகசிலேட்டம்.

தானுடம்பெல்லாம்வலிப்புகாணும்-சரீரத்திலுணர்ச்சியற்றுத்தளர்ச்சிகேட்டாம், வேனுனக்கண்டானுஞ்சிவந்துகாணும்- மிகக்கண்ணீர்பாய்ந்துமேமேனிகனனும், ஊனுனஉடம்பெங்குங்கருகிக்காணும்-உறுதிமைசலம்விழுகல்லெரிந்திடாது, மூனுனமூச்சோடுஇருமலாகும்-மூர்க்கமாமுயலகசேட்டுமசாத்தியம். (௪௱௰௨)

### வெறிசிலேட்டம்

முயல்போலேவிழித்துமேமுறுக்குமீசை-முனையாகவுமுக்கிருந்துமுறுக்கிப்பாயும், பயல்போலப்பல்லையேமிகத்திறக்கும் பாடுமேசங்கீதம்பலகாலுந்தான், கயல்போலக்கண்களெல்லாஞ்சிவந்துகாணும் காயிலைபோலுடம்பெங்குமிக்கறுக்கும், உயல்போலஉறுமியேவுதடுகாயும்-உலைச்சலாம்வெறிசிலேட்டமுண்மைதானே, (௪௱௰௩)

### விகாரசிலேட்டம்.

வெறிச்சுயேமேனியெல்லாமோடியெக்கும் மிடுக்காகப்பாடுமேசங்கீதந்தானு மறிச்சுமேமங்கையர்மேற்சிந்தையாகும்-மனதொன்றுமற்றொருகாரியத்திற்செல்லா, வறிச்சுயேசஞ்சலங்கள்தனக்குட்பேசும்-சாப் பாட்டுமேல்நினைவுதரிகொடாது, குறிச்சுமேமயக்கமாம்விகாரமாகும் கூறினுமவிகாரசேட்பத்தினுண்மை. (௪௱௰௪)

### சுரோணிதசிலேட்டம

உண்மையாய்முழங்காலில்மிகக்குடைந்து- உளைந்துமேமுதுகோடுவிலாப்பக்கங்கள், கண்மையாய்முழங்கைகள்முழங்கைசந்து- கடினமாய்வீங்கியேகுடைச்சலுண்டாம, தண்மையாய்சளிகட்டுந்தாகமாகும சாத்கமாய்இருமியேமூச்சுண்டாகும், திண்மையாய்நாவரண்டு திக்கிப்பாகுமசெயமானசுரோணிதசிலேட்டந்தானே. (௪௱௰௫)

### விரணசிலேட்டம.

தானென்னதொண்டையினிற்புண்ணுமாகிச் - சளியேடுரீய்த்தானுங்கலந்துவிழும, காரென்றகழுத்தோடுபிடரிகன்னம-கனமாக வீங்கியேகாச்சலுண்டாம, காரென்றகுளிரோடுளரிவுண்டாகும-கொக்கென்றேஇருமியேகூவலுண்டாம, வேனென்றமிடறெல்லாம நாவுமபுண்போல்-மிகவிரணசிலேட்டுமத்தின்விபாந்தானே. (௪௱௰௬)

### தூர்க்கந்தசிலேட்டம்.

விரணமாய்ச்சீயோடுரத்தமுண்டாம் மிகவிருமிமீன்றண்ணீர்போல நாறும், அரணவாயன்னத்தைஇரங்கொட்டாது-அடிவயிறுவீங்கியேநால்கைவீங்கும், தாரணமாய்த்தாகமேமிகவுண்டாகும் - சரீரந்தான்மிகவற்றித்தழலாய்வேர்க்கும், தூரணமாயவிழ்ந்தந்தான்பலித்திடாது- தூர்க்கந்தசேட்டுமந்தானசாத்யமாமே. (௬௰௭)

### நித்யசிலேட்டம்

கந்தமாங்காசமொடுஇருமலாகிக் - கனக்கமேதும்பலாய்க்கருநிவற்றி, பூந்தமாமேனியெங்குமெரிவுண்டாகும்- பாண்டுவாய்மேனியெங்குமிகவெளுத்து, உந்தமாயோக்காளமிகவுண்டாகும்- உயரமாய்க்கிறுகிறுத்துக்கிழேதள்ளும், சத்தமாய்க்குரல்கம்மிப்பேசொட்டாது, தனிநித்யசிலேட்டுமதாஷ்டீகந்தானே. (௬௰௮)

தாட்டியாய்ச்சிலேட்டுமமதிரூபத்தோன்று தயாநிதியாஞ்சிவன்றானுந்தாய்க்குச்சொன்னார், நாட்டியாய்த்தாயார்நந்திக்குச்சொல்ல நந்தியுந்தான்றிருமூலர்க்குபதேசிக்க, கேட்டியாய்த்திருமூலர்சித்தருக்குத்திரமாகவுபதேசம்பண்ணச்சித்தர், ஊட்டியாயூகிமுகியாமெனக்கு- உபதேசம்செய்தபடிஉரைத்திட்டேனே. (௬௰௯)

உரைத்திட்டபஞ்சபூதியத்தைச்சொன்னேன்- உண்மையாய்த்தத்துவத்தினுண்மைசொன்னேன், நரைத்திட்டநாடியிடநிதானஞ்சொன்னேன் நலமானஅஷ்டவிதப்பரிக்ஷைசொன்னேன், துரைத்திட்டசாத்தோடுசன்னிசொன்னேன்- சுயமானகுன்மமொடுசூலைசொன்னேன், வரைத்திட்டவாதமொடுபித்தஞ்சொன்னேன்வகையானசேட்டுமத்தின்வளஞ்சொன்னேனே. (௭௰)

சேட்பரோகநிதானம்-முற்றிற்று.

---

## பிரமியரோகநிதாநம்.

உரைத்திட்டேன்மேகமென்றரோகந்தானே - உத்தமனேஇருபத்தொன்றாகுங்கண்டாய், திரைத்திட்டசிவனுந்தேவிக்குச்சொன்னார்தேவிதான்றன்வந்திரிக்குபதேசிக்க, தரைத்திட்டதன்வந்திரிஅசுவனிதேவர்க்குச்-சாற்றிடவேயசுவினியாந்தேவர்தாமும், பரைத்திட்டஅகஸ்தியருக்குப்போதிக்கப்-பாங்காகப்புலஸ்தியருக்கருள்செய்தாரே. (௭௰௧)

அருள்செய்தார்அகஸ்தியர்தான்புலஸ்தியர்க்கு- அன்னவர்தாந்தேரையமாமுனிக்குரைத்தார், பொருள்செய்தார்பூலோகத்துள்ளபேர்க்கு- போனஆயுர்வேதத்தைத்தானே, தெருள்செய்துதிரட்டியேதேரையர்தான் தேசிகனாய்எனக்குரைக்கச்செகந்தோர்க்கெல்லாம், மருள்செய்துபோகாமல்சாத்திரத்தின்படியே-மார்க்கமாம்பிரமேகம்வழுத்தக்கேளே.

வழுத்தவேபிரமியத்தின்பெயரைக்கேளாய்வாதத்தின்பிரமியமாம் பித்தப்பிரமியம் திழுத்தவேசேட்டுமத்தின்பிரமியந்தான்-சீரானவாதபித் தப்பிரமியமாகும், நழுத்தவேபித்தசேட்பப்பிரமியந்தான் நலதந்தொந்தப் பிரமிசமாங்கட்டிப்பிரமியப், தழுக்கவேசலப்பிரமியந்தந்திப்பிரமியம்-த ணிந்தசேதாரிசந்தப்பிரமியந்தானென்றே. (௪௨௩)

தானென்றசீப்பிரமியமொழுக்குப்பிரமியம் தகியரிதப்பிரமியமாங் கிருச்சப்பிரமியம், கானென்றகரப்பனும்பிரமியத்தோடு-கல்வினையும்பிர மியமாந்தாதுப்பிரமியம், நேனென்றநீச்சபிரமியம்வலிப்பிரமியந்தான்நே ரானமதப்பிரமியம்விரணப்பிரமியம், ஏனென்றபிரமியந்தானிருபத்தொ ன்று-இதினுடைஉற்பத்திஇயம்பக்கேளே. (௪௨௪)

இயம்பவேயெளியோரையிகழ்ச்சிசொல்லல் - ஏற்றமாம்பெரியோ ரையேவல்கொள்ளல், புயம்பவேபொன்றனையேசோரஞ்செய்தல்- பொ ருளதனையபகரித்தல்பெருமைசொல்லல், நயம்பவேதம்பினர்க்குநஷ்ட ஞ்செய்தல் நாட்டமாயெந்நேரம்பெண்மோகித்தல், பயம்பவேபயந்தவ ந்தபேரைக்காட்டல் பழித்தபேர்பிரமியத்திற்படும்பாடாமே. (௪௨௫)

பாடாகப்பெண்போகமிகவிரும்பிப்-பயின்றிட்டுப்பட்டினியேமிக விருந்தல், தாடாகத்தான்பதத்திற்சூடுதாங்கல்-சாரசமாய்க்கார்த்தைமிக ப்பொசித்தல், ஊடாகவுப்புரைப்புத்துவர்ப்புமிஞ்சல்- உக்கிரமாம்பலப லவாம்விசேஷஞ்செய்யல், காடானமனக்கிலேசங்காரமான-கைத்தலொ டுமிருக்கவிதுகாணுங்காணே (௪௨௬)

காணவேமுதுகெலும்புகோர்வைதற்றிக்- கனமானநாதபிலுங்கதி த்துச்சுற்றி, ஆணவேஅடிக்குய்யமூலாதாரம்-அழன்றுமிகநோவாகிப்ப ற்றிக்கொள்ளும், நாணவேநாடியோடெலும்பிற்சூழ்ந்து நலமானசுரோ ணிதத்தில்மிகக்கலந்து, ஆணவேயடிவயிறுஇழுத்துநோவாம்- ஆகாதபி ரமியத்தினுண்மைதானே. (௪௨௭)

## வாதப்பிரமியம்.

ஆண்மையாய்க்கோசலம்போனீரிறங்கும்- அருக்கியேயடித்தண்டி ல்மிகவலிக்கும், வேண்மையாய்க்கட்டியாய்சீத்தான்வீழும் விரையிலே கனத்துமேநோக்காடுண்டாம, பாண்மையாயடிவயிறுபக்கந்தன்னிலப பதத்துநேர்வாகிப்பாரமுண்டாம், வாண்மையாய்வயிறதனிலிசவுண்டா குட் வற்றுமேசரீரந்தான்வாதப்பிரமியம். (௪௨௮)

### பித்தபிரமியம.

சரீரந்தான்மிகவற்றித்தியக்கமுண்டாய்ச் சந்தோடுகைகால்தாமேனுவுண்டாகும, சரீரந்தான்கறுத்துமேயெரிவுண்டாகும-கனமானகுதங்குய்யக்கடுப்புக்காணும, வரீரந்தான்மஞ்சள்போற்சியாய்வீழும - மனந்தானுமருபியாய்க்கைகாலேயும, புரீரந்தான்லிங்கமதுபுளகிவிமழுமபோனலிங்கமேனுபித்தப்பிரமயம. (௬௨௯)

### சேட்பபிரமியம.

லிங்கத்தில்நோயுண்டாய்க்கடுப்புக்காணும- நீரிறங்கிவெள்ளையாய்சலமாய்வீழும, பங்கத்தில்மேனியெல்லாமபழுப்பாய்க்காணும-பாண்டுவாய்க்கண்ணிகங்களிரத்தமில்லை, சுங்கத்திற்சுருக்கிட்டுநீரிறங்கும- அரிசாகவடிக்கடிக்கருக்கல்காணும, அங்கத்திலனல்மிகவேயழன்றுமேனிஅசாத்தியசேட்டுமப்பிரமியமறிந்துகொள்ளே. (௬௩௰)

### வாதபித்தபிரமியம.

அறியவேயாக்கையெல்லாமவலிவுண்டாகி- அடிலிங்கத்தடியிலேசலாகைவைத்தாற்போல் மறியவேயடிக்கடிக்குவருத்தமாகும- மாப்போலச்சிறுநீரிற்கரைந்துவீழும வெளியவேபவுத்திரத்திற்கட்டிகட்டுமமேன்மையாய்மலமதுதானிறுகிக்கொள்ளுமம, துரியவேசுருக்கென்றுநீரிறங்கும- துடிக்குமேவாதபித்தப்பிரமயந்தானே. (௬௩௧)

### பித்தசேட்பபிரமியம்.

பித்தமாய்வாயெல்லாமிகவேகைத்துப்-பிரமியேயடிவயிறுஇசவுகாணும், சுத்தமாய்மஞ்சளித்துவெள்ளைவீழும- சுருக்குத்தான்லிங்கத்தில்மிகுதியாகும், பத்தமாய்க்கணுக்கணுக்குநோயுண்டாம்கு-பகலுறக்கமிகுதியாம்பசியெடாது, பித்தமாயுடம்பெல்லாமூதிக்காணும்- பித்தசேட்டப்பிரமியம்பேசுங்காலே. (௬௩௨)

### தொந்தப்பிரமியம்.

பேசுமென்றசரீரத்திற்றினவுண்டாகிப்- பேரானபுழுக்கள்தானூர்தல்போல, ஆசுமென்றஅடிவயிற்றிற்சுரப்புண்டாகும்-அடிக்கடிக்குநீர்தானுங்கடுத்திறங்கும், கூசுமென்றலிங்கத்திற்கசிவுண்டாகிகுறிகள்தானைபலவர்ன்னமாகக்காணும், தூசுதானழுதன்னிற்றேய்ந்திருக்கும்-தொந்தமாப்பிரமியத்தின்குணந்தானே. (௬௩௩)

### கட்டிப்பிரமியம்.

தாணுகச்சடமெங்குங்கட்டியாகித்- தரிக்காமல்வலியுண்டாய்த்தளர்ச்சிகேடாய்த், தோணுகலிங்கத்தில்தினவுண்டாகிச்- சொரியாகிவிரையிரண்டிற்றீநீர்பாயும, ஊணுகக்கட்டியாய்லிங்கந்தன்னில்- உறுதியாய்பருக்கைபோற்சியாய்வீழும், மாணுகவுடம்பதுதான்வற்றிக்காணும்- மருவுகட்டுப்பிரமியத்தின்வண்மைதானே. (௬௩௪)

### சலப்பிரமியம்.

வண்மையாய்வடிவமெல்லாம்வலியுண்டாதல் - வாய்கைத்துவாந்தி யொடுமயக்கமாதல், தண்மையாய்லிங்கத்திற்சலங்கசித்தல் தாக்கானவ டிவயிற்றிற்பிடுங்கலுண்டாம், வெண்மையாய்மலந்தனிலேசீதங்காண ல்-வெளுப்பாகிநீரிறங்கிக்குற்றலுண்டாம், அண்மையாயறையாப்புக்க ட்டியுண்டாய்-அழுந்துமேசலப்பிரமியவாண்மைதானே. (சஙரு)

### நாறுதத்தப்பிரமியம்.

ஆண்மையாயடிவயிறுபுண்போனொந்து அடித்தண்டுவிருவிருத்து உச்சங்காணும், தாண்மையாய்லிங்கத்தின்கின்னரத்தின் - தந்திபோல்நீ ருக்குமுன்னேவிழும், மேண்மையாய்வெளுப்புத்தான்சீலேதன்னில்-வி ந்தையாயடிக்கடிக்குநனைவுகாணும், நாண்மையாய்கால்கைபுமெரிச்சலா கும், நாறுதந்தப்பிரமியத்திளுட்டந்தானே. (சஙசு)

### இரத்தப்பிரமியம்.

தந்திரமாய்த்தியங்கியேதலைசிருப்பும்-சரீரமெங்கும்பஞ்சுபோற்ற ளர்ச்சிகேடாம், மந்திரமாய்வருந்தியேநீரிறங்கும் - மாசற்றமுயலிரத்த ம்போலேவிழும், சுந்தரம்போலிருந்தமுகந்தூசியாகும்- சுருக்குத்தான் சிறுநீருஞ்சிகப்பாய்விழும், அந்தரமாய்ப்பசாசுபோலலைச்சலாகும்-அடி க்கடிக்குநீரிறங்குமிரத்தப்பிரம்யம். (சஙஎ)

### சீப்பிரமியம்.

கடுத்துமேசீப்போலவெள்ளைகாணும் கட்டுமேஅறையாப்பிறப்வு த்திரத்தில், நடுத்துமேநாபியெல்லாம்விரணமாகும்- நற்சந்துக்களுக்கா லில்குடைச்சலுண்டாம், படுத்துமேயடிக்கடிக்குநீரிறங்கும்- அதிகமா ய்க்குளிரோடுசுரமுமுண்டாம், மடுத்துமேவருத்தமாய்மயக்கமாகும்- வ டிவமெலாநொந்திடுஞ்சீப்பிரமியமாமே. (சஙஅ)

### ஒழுகுபிரமியம்.

சீயாகித்தண்ணீராய்ரத்தம்போலச்-சிறுகியேஒழுகுமெந்தநேரமுந் தான், காயாகிக்கட்டியாய்முளையுண்டாகிக்கனமானவிரணமாய்க்காயமெ ல்லாம், ஆயாகியங்கமெலாங்குடைச்சலாகும் - அழுந்துமேயக்கினியாய ஞ்டிக்கொள்ளும், நோயாகிப்பாய்க்குள்ளேகிடையுமாகி - நுண்மையா யொழுகுமென்றமேகந்தானே. (சஙகூ)

### அரித்திரப்பிரமியம்.

தானுமேமஞ்சள்போல்வெள்ளைகாணும் தழலாகவெதும்பியேநீரி றங்கும், காணுமேகதிர்தனையேவற்றினாற்போல்-கடுப்பாகவிருவிருக்கு ங்கடுஷ்ணமாகும், வானுமேமதியம்போற்றானிருந்து- மதிமுகங்கள்ம ஞ்சள்போற்றானிருக்கும், தேனுமேகசப்பாகுநாவுதானும்- திடுக்குண் டாமரித்திரமாம்பிரமியந்தானே. (சசய)

### சிரிச்சிரப்பிரமியம்,

அரித்திரமபோனீரிறங்குமாண்மைகுன்றும- அருக்கியேமிகக்கடுத்துநீர்தான்வீழும, நெரித்திரமபோனீர்தனையேகட்டிக்கொள்ளும- நிரசியமபோற்சரீரத்திலுறக்கமில்லை, தரித்திரமபோலன்னத்தைப்பொசிக்கொட்டாது - சஞ்சலமாய்மனதுதான்றரிக்கொட்டாது, விரித்திரமபோலுடமபொல்லமுளைச்சலுண்டாம - விகிழுத்ரக்கிரிச்சிரபிரமயந்தானே. (௬௪௧)

### காப்பான்பிரமியம-

உளைஞ்சுமேவயிறுதான்சீதங்காணும- ஊஷ்ணமாய்மூத்திரந்தானுருக்கிவீழும - அளைஞ்சுமேயங்கமெல்லாஞ்சொரியுண்டாகும-அழலாகவெதுமபலாய்க்கைகாலோயும, புளைஞ்சுமேலிங்கத்திற்புண்போல்குற்றிப்பொடிப்பொடியாய்சுண்ணமபுக்கற்போல்வீழும,களைஞ்சுமேநீரோடுமலமுஞ்சிக்கும-கசியுமேகாப்பானையபிரமியந்தானே (௬௪௨)

### கற்பிரமியம்.

கசியுமேலிங்கத்திற்கள்ளைப்போலக்- கற்றாழைநாற்றந்தான்உடமபில்வீசும, தசியுமேசாந்தரைத்துப்படுத்தகற்போல்- தயங்கியேநீர்ச்சிக்கிவயிறுவிமமும, விசியுமேவிருப்பாய்வயிறெல்லாந்தான் - மீறுனநாபிதொட்டுப்பீசமாகும, பசியுமேயில்லாமற்பாரமாகும-பளிங்குநிறமாகுங்கற்பிரம்யந்தானே. (௬௪௩)

### தாதுபிரமியம்.

கல்லானசிலந்தியதினூலைப்போலக்-கனமானலிங்கத்திற்கலந்துவிழும், வல்லானவண்மையோடுதிரங்காணும்-வலியெடுக்குமடித்தண்டுவிம்மும்போது, சல்லானகல்மிஷந்தானடியிற்றங்கும்-சமத்தானவிலாப்பக்கந்தனிலேகுற்றும், துல்லானமூத்திரந்தான்றுவியாய்வீழுந்-தாதுபிரமியத்தினிடச்சுருக்குத்தானே. (௬௪௪)

### நீச்சப்பிரமியம்.

சுருக்காகக்கள்ளுபோனீரிறங்குஞ்- சூக்ஷமாய்வெள்ளையொடுநீருங்காணும், மருக்காகலிங்கமுச்சமாகும்போது வருத்தமாயடித்தண்டுகுடத்தோடொக்க, விருக்காகவிருவிருப்பாய்வலியுண்டாகும்- விசையானநரம்பெல்லாஞ்சுருக்கமாகும்,குருக்காகவடிவயிறுதனிலே குற்றுங்குளிருமேநீசபிரமியத்தின்கூறே, (௬௪௫)

### வலிப்பிரமியம்.

கூறாகவடிநரம்புகுதங்குய்யந்தான்-குற்றியேயடிக்கடிக்குவலியுண்டாகும்,வாறாகவடிவெல்லாம்மிகவழற்றி- மயக்கமாய்நாவோடுகைத்தலாகும், பாறாகப்புறங்காலிற்றிமிருண்டாகும்- பருத்துமேலிங்கத்தில்வெள்ளைவீழும், தாறாகத்துன்மாங்சஞ்சுருண்டுகாணும்- தாசிமிகப்படியும்வலிப்பிரமியந்தானே. (௬௪௬)

## மதுப்பிரமியம்.

வலியாகிலிங்கமெலாம்வருத்தமாகி-வண்டலாய்த்தேன்போல நீரி றங்கும், எலியாகியெறும்பரிக்குஞ்சிறுநீர்தன்னில்- இறைச்சிபோலுள் ளுக்குள்விரணமாகும்நலியாகிநாற்றமாமுடம்பெங்குந்தான்-நாவிலேஉ ணர்ச்சியிலாதுரிசைபோகும், மலிபாகிநாவரண்டுமயக்கமாகும்-வருத்த மாமதுபிரம்யமார்க்கமாமே. (௬௬௭)

## விரணப்பிரமியம்.

மார்க்கமாயுடம்பெங்கும்விரணமாகி-மகவருத்தமாகியேமயக்கமாகி தீர்க்கமாய்லிங்கமதுபொழுத்துவீங்கிச்-சீயோடிரத்தந்தான்மிகவேகா ணும், கார்க்கமாய்கறடோடுகணுக்களெல்லாங்-கட்டியேநோவாகிக்கடுப் புமுண்டாம், வேர்க்கமாய்மேனியெல்லாம்வெதும்பலாகும்-விருவிருக்கு ம்விரணபிரமியந்தானாமே. (௬௬௮)

தனுணபிரமியந்தானிருபத்தொன்றும் -சதாசிவன்றான்றாய்தனக்கு அருளிச்செய்ய,பானுனதாய்தானுநந்திக்குச்சொல்லப் -பராபரமாநந்தித ன்வந்திரிக்குச்சொல்ல, ஆனுனதன்வந்திரி அசுவினிதேவர்க்கு- அருள் செய்யஅசுவனியும்அகஸ்தியர்கக்குச்சொல்லக், கோனுனஅகஸ்தியரும்பு லஸ்தியர்க்குச்சொல்ல-குருவானபுலஸ்தியருங்குறித்திட்டாரே (௬௬௯)

குறித்திட்டார்தேரையமாமுனிவனுக்குக்- கூறுனதேரையமாமு னிவர்தாமும், உறைத்திட்டயூகியென்றஎனக்குச்சொன்னார்-யூகியென் றமுனிநானேஉளமுவந்து, மறைத்திட்டஆயுருவேதத்திலுள்ள- மறை ப்பானபொருளெல்லாமாய்ந்துபார்த்து, தெறித்திட்டுதிரட்டியெல்லா மொன்றாய்ச்சேர்த்து-சிவன்சொன்னபடிசொன்னார்தெளிவாய்த்தானே.

பிரமியரோகநிதானம்-முற்றிற்று.

---

# மேகரோகநிதானம்

தெளிவாகத்தேவிதான்சிவனைநோக்கித்-தெண்டனிட்டு ஆயுருவே, தத்தைமுன்னே, அளிவாகஅநுக்கிரகம்பண்ணவல்லோ- ஆத்மகோடிக ளிட்த்திற்கிருபைவைத்து, நளிவாகதேவருக்குந்தேவரான-நடேசரோச கலபேரிட்த்திற்றானும், எளிவாகஇதயகமலத்திற்றானே- இருந்தவமே கு லத்தைநீர்சொல்லுமென்றாள். (௬௭௰)

சொல்லுமென்றுகேட்டவுடன்சிவனுமப்போ-தேவிமைச்சான்மு கம்பார்த்துவாராய்தேவி, அல்லுமென்றமேகமதுஇரண்டுபகது-அதிது

லபமாயிருக்கும்லோகத்துள்ளே, உலனுமென்றஉன்னுடையசிநேகந்த ன்னால் உரைக்கரிதுஉரைக்கின்றேனுற்றுக்கேளாய், மலனுமென்றமா தேவிபார்க்கில்லாமல்-மகிழ்ந்துநீகேளுமென்றுவசனிக்தாரே. (௪௫௨)

வசனித்தமேகமதுஇரண்டுபத்து-வாதத்திற்பிறந்தசலம் நாலேயா கும்,பிசனித்தபித்தத்திலும்பவித்தபோனசலந்தானுமாறுமாகும்தெச னித்தசேட்டுமத்தில்உற்பவித்தசிரோனசலந்தானும்பத்தேயாகும், இச னித்ததிதினுடையகுணகுணங்கள்எழிலானஉற்பத்தியியம்பக்கேளே.

இயம்பவேஆறுகுளம்பின்னஞ்செய்கல் - ஏற்றமாய்ப்பிராமணஸ் திரீசங்கம்பண்ணல், பயம்பவேபாலர்களுக்கொளித்துத்தின்னல்பழமை சலம்போறவழிதனைத்தடுத்தல், அபம்பவேஆலயத்திற்சலம்விட்டோர் க்கும்- ஆதியாம்வேதத்தைத்தூஷித்தோர்க்கும், துயம்பவேசூரியனைவ ணங்காதார்க்கும் சுருக்காகமேகம்வந்துற்பவிக்குந்தானே. (௪௫௩)

உற்பவிக்கும்பால்நெய்யாவிறைச்சிகள்ளால்- உரிசையாய்மீன்றன் னுலருவிருந்த, மற்பவிக்கும்பதார்த்தத்தால்மதூரவஸ்தால்-மந்தங்கள்த னிற்பொசித்தல்வேகாப்பண்டம், குற்பவிக்குங்குளுந்தவன்ன மங்கை கோஷ்டி-குறித்தநித்திரைதவிர்தலக்கினிமந்தம், தற்பவிக்குஞ்சரீரந்தா ன்மிகப்பருக்கவு சஞ்சலந்தான்பயப்படுதல்தரிக்கும்நோயே, (௪௫௫)

வாதசலம்.

தரித்திட்டவாதத்தின்சலந்தானாலு தனியானநாலுங்கும்பேரேதெ ன்னில், அரித்திட்டஆச்சியசெந்திமேகத்தோடு- அதன்பிறகுசுற்றமா மேகமென்று, பிரித்திட்டபிரமியமேகமொன்று- போனமாங்சாவிமே கமொன்று, குறித்திட்டஇதுவாதசலந்தானாலு - குணகுணத்தினுட்ப மெல்லாங்குறிப்பாய்க்கேளே. (௪௫௬)

ஆச்சியமேகம்.

குறிப்பாகஆச்சியசலமிறங்கும்போது- குணமானநெய்போலத்தா னிறங்கும்,நெறிப்பாகச்சீலைதோய்த்துக்கொளுத்தல்-நேரானவிளக்குப் போலெரியும்பாரு, செறிப்பாகித்தினமொன்றிற்குறுணிதானும்- சீக்கி ரமாயிரங்கிவிடுந்தேகம்வாடுமே, எறிப்பார்க்குமேகங்கண்டேழுநாட்கு ள்ளெய்துவாரெமபுரத்திலெய்துவாரே, (௪௫௭)

சுக்தமேகம்.

எய்துவார்சுக்தமாமேகந்தானும்- இறக்குமேகோசலம்போலவர்ண் ணமாக, நைதுவார்நாற்றமுமப்படியேயாகும் - நாளுழிதானிறங்குமொரு ருவேளைக்குக்,நைதுவார்நாச்சிறுல்விளங்குந்தானும் - கடுந்துவக்கமுமு

யெரியுங்களேமெத்தாகும், பைதுவார்பதினைந்துநாளிற்கொல்லும்-பால
ன்போலிருந்தமுகங்கிழமுமாமே. (சஙு அ)

பிராமியமேகம்.

கிழமாகப்பிரமியந்தானிறங்கும்போது- கேவலமாங்கொழுப்பான
மாம்சநாற்றம், பழமாகவேலேக்குநாளுழிதானும்-பருக்துதான் இறங்கு
மேயடிக்கடிக்கு, அழுமாகஅந்தநீர்காச்சினக்கால்- அதின்வாடைதேன்
போதத்தானீநக்கும், இழமாகஇப்படித்தான்கண்டமேகம்-எமபுரத்துக்
கறுமாதத்தினிற்றானேகும். (சஙுகூ)

மாங்சர்விமேகம்.

எருமேமாங்சாவிஇறங்கும்போது - இளவாட்டின்கொழுப்புபோ
ற்றானிறங்கும், ஆருமேகாச்சினலாட்டினெய்போல்- அடவாகவேளேக்
குக்குறணிகாணும், காருமேகருப்பஞ்சார்போலநாறும்-கனத்துக்தான்
மூன்றுநாளெட்டுநாளில்,சாருமேயைந்தாழாதத்திற்றானும்-சதுர்விதமா
ம்வாதசலந்தானுமாச்சே. (சசுய)

வாதம்நாலுக்குஞ்சமுதாயகுணம்.

ஆச்சென்றநாலுக்குங்குணத்தைக்கேளாய்- அழகானகைகால்கண்
ணுடலழற்றும்,நாச்சென்றநாவரளும்பல்லுநாக்கு-நடுத்தொண்டைகறு
ப்பேறுமுதலெட்டாந்தான், பேச்சென்றபிலச்சியமாம் கண்மேல்நோக்
கும்-பெருகவன்னந்தண்ணீருமிகவேவாங்கும், தாச்சென்றசரீரந்தான்க
த்திவெட்டும்-தான்போலக்கடுத்துமேதழலுண்டாமே. (சசுக)

தழலாகவெதும்பியேமயக்கமாகும்- சஞ்சலமாயிடைகொடாதேபி
ரட்டும், அழலாகவடிக்கடிக்குவாயுதானும்- ஆகாதநாற்றமாய்ப்பிறியுமெ
த்த, குழலாகநாடியேகுடிலமாகக்குணபேதமாய்நடக்கும்வேகமெத்த,வ
ழலாகவாதமேகந்தனக்கு-வகுத்தமுறைபாடுதானுலுமாச்சே. (சசுஉ)

பித்தசலம்-சு.

முறையானபித்தசலமாறுமாகும்-மூதிர்ந்த அப்பியமென்றும்பிரமி
மியென்றும்,தறையான்சாம்பீர்ணமதும்பமென்றும்-சாத்திகமேயாறுவி
தந்தன்னேடாறு, மறையானவிந்தாறுமேகந்தன்னே-மகதேவர்சொல்லி
டவேதேவிகேட்கத், துறையானகுணகுணத்தைவிரித்துச்சொல்ல -சு
ற்றமாயப்பியத்தின்சுருபங்கேளே. (சசுங)

அப்பியமேகம்.

சுருவமாயப்பியந்தானிறங்கும்போது- துடியானமதம்போலத்தா
னிறங்கும்,வெருவமாய்வேளேக்குநாளுழிதானும்,விரிவாகத்தானிறங்கு
ந்நாச்சினக்கால், உருவமாயுவர்மண்போற்படியும்பாரு-உக்காமாக்கண்
வெட்டாமாதந்தன்னில், இருவமாயெமபுரத்துக்கெய்துவார்கள் - ஏற்ற
மாமப்பியத்தின்மேகந்தானே. (சசுச)

### அபிரம்மியமேகம்.

தானென்றகற்குழஞ்சாறுபோலும்- தன்னூற்றம்போலவேமிகவே நாறும், கானென்றகாச்சிறுற்கடிதாநாற்றம்- கடிகைக்குளிருநாழிதானி றங்கும், ஏனென்றவிக்குணமாமேகந்தானும் இறங்கினதோர்மூன்று மாண்டுதன்னில், பானென்றபரமபதமெய்துமென்று-பரமனுரை அபிர ம்மியப்பண்புதானே. (சசுரு)

### சாம்பிர்ணமேகம்.

பண்பாகச்சுண்ணம்புஅழலேநாறும்படியுமேயடிதனிலே நீறுபோ ல, நண்பாகவேளைக்குநாளுழிதானும்- நாழியேஇறங்குமிகவெரும்பரிக் கும், கண்பார்க்கக்காச்சிறுற்சுண்ணநீரும்- கனமாகப்படியுமேயடியிற்று னும், தண்பாகக்கண்டசலமிரண்டாமாண்டிற்சாகுவரோசாம்பிர்ணத்தண் மைதானே. (சசுசு)

### மதுமியமேகம்.

தண்மையாய்ச்சலந்தாங்னும்பசுப்புமஞ்சள் -தானிறங்கும்பீசமுங் கோசமுங்கடுக்கும். அண்மையாயடிக்கடிக்குநீரிறங்கும் அடிக்கடிக்குஅ ணைநாழிதனிலேகாணும், வெண்மையாயடியதனில்தான்பிடிக்கும் - மிக் கானசடம்வெளுத்துமேனிகண்ணும், பண்மையாய்ப்பஞ்சவாண்டதனி ற்கொல்லும்-பகர்கின்றமதுமியத்தின்பாங்குதானே. (சசுஎ)

### சாத்தியமேகம்.

பாங்கானபளிங்குநிறம்போலிறங்கும்-பரிபீசகோசமுமேகடுத்து க்கூசும், தாங்கானதாழைமொடுவிழுதுசாறு-தனைப்போலத்தானிறங்கு ம்காச்சிக்காணல், தேங்கானசீப்போலமிகவேநாறும் - சீக்கிரமாவேளைக் கோர்படிதாளுகும், ஏங்கானஇப்படித்தான்கண்டமேகம்- எய்திடுமேஐ ந்தாண்டில்அசாத்யந்தானே. (சசுஅ)

### ஆவிருதமேகம்.

சாத்தியமாய்முசல்சத்தம்போலவீழும் - சாதகமாயிருநாழிதானிறி ங்கும், காத்தியமாய்க்காச்சிறுற்புலாலேநாறும் - கனமானபீசகோசங்க டுக்கும், ஊத்தியமாயிப்படிதான்கண்டமேகம்- ஒன்பதாமாதத்திலொடு ங்குஞ்சீவன், ஆத்தியமாமாவிருதமேகமென்றே- அவனியுள்ளோர்தங்க ளுக்கறியச்சொல்லே. (சசுகூ)

அறியவேபித்தசலமாறுக்குந்நான்- அங்கமதிற்செய்கின்றகுணத் தைக்கேளாய், தறியவேசரீரம்வற்றியெரிவுண்டாகும்-சடத்திலுந்தானீ ரிலுந்தான்கவிச்சுண்டாகும், தெறியவேசீப்போலுங்கற்குழைபோலு ம் - சேல்போலுந்தேன்போலுநாற்றமுண்டாம், வெறியவேபீசத்திற் கோசத்திற்குதத்தில்-மிகுநீரல்நாபியிலும்வேக்காடாமே. (சஎ0)

வேக்காடாய்விரணமுண்டாய்வாய்தானாறும்- விக்கலொடு அருகியாய்ச்சுரமுண்டாகும், தீக்காடாய்தேகந்தானிகிடைக்கொட்டாது - தியக்கமொடுமூர்ச்சையுண்டாமயக்கமாகும், சாக்காடாய்நாவரளுங்கண்ணீர்தாகம-சத்தியொடுசரீரமெல்லாந்தளர்ச்சியாகும், தாக்காடாமல்சஞ்சலந்தான்மிகவுண்டாகும-சயகுணந்தானபித்தசலமாறுமாச்சே. (௪௭௧)

வசாமேகம்.

ஆறானசிலேட்டபசலம்பத்துதன்னை அரன்சொல்ல ஆத்தாள்தான்கேட்கும்போது, வாறானவசாமேகமஉத்சமேகம் - மச்சியாமேகத்தோடாகிகமேகம, தூறானசுராரிசுக்லமுத்தமேகம்- சற்றமாய்பிணியொடுலவணமேகம், தேறானதெயித்தியமாமேகமென்று-செப்பினார்சிலேட்பத்தின்செலத்துத்தானே. (௪௭௨)

தானென்றவசாமேகமிறங்கும்போது- சலத்தின்மேல்நிணம்போலுமாடையுண்டாம், வேனென்றவேளைக்குக்குறுணிதானும்- விடுபட்டுததானிறங்குங்காச்சிக்கானல், நேனென்றநிணமுறுக்குபோலநாறும்-நிலையாகஇப்படிதானிறங்குமேகம், வனென்றவழாண்டுதன்னிற்றானும்-எமபுரத்துக்கேகுமென்றேஇயம்பிடாயே. (௪௭௩)

உத்தமேகம்.

இயம்பவேநல்லதண்ணீர்போலிறங்கும்- எடுத்ததனைக்காச்சினால்நல்லதண்ணீர், நயம்பவேநாற்றமதுநலலதண்ணீர்-நல்வேளைதனக்குமொருகுறுணியாகும், அயம்பவே அப்படிதான்கண்டமேகம்-ஐயிரண்டுவருஷத்திலறியக்கேளாய், மயம்பவேமறலியிடஊர்புக்காகும்- மகத்தானவுத்தமமாமேகந்தானே. (௪௭௪)

மச்சமேகம்.

உத்தமமாயெலும்புக்குட்சதையைப்போல- உருகியேதானிறங்குங்காச்சினக்கால், நிற்றமமாய்நிணநாற்றமாயிருக்கும்- நிசமாகவேளைமுநாழியாகும், பத்தமமாயப்படிதான்கண்டமேகம்-பரமசிவனடிகிணியாப்போவியாகும், இத்தமமாயேமனிடஊர்புக்காகும்-இசைந்தவைந்துவருஷத்தில்மச்சாமேகம். (௪௭௫)

மேகந்தானிளநீர்போற்றானிருக்கும் - மிகக்காச்சிலிளநீர்போற்றானிருக்கும், வாகந்தான்வாடையதுஇளநீர்வீசும்-வகையானவேளைக்குநாழியாகும், தாகந்தான்மிகவுண்டாயுடம்பிளைக்கும் - சஞ்சலந்தான்மிகவுண்டாங்கண்டவழு, பாகந்தான்வருஷத்திற்சாவுமாகும்-பாங்கான ஆகியமேகத்தின்பண்பே. (௪௭௬)

சுராரிமேகம்.

பண்பாகநரையோடேவெளுப்புபோலப்- பனங்கள்ளுபோலவேதானிறங்கும், கண்பாகவேளைக்குநாழியாகும்-காச்சினாற்கள்ளுநாற்றமி

தான்மிகவேவீசும், மண்பாகமாப்போலமணந்தானுண்டாம்-மயக்கமாயி ப்படித்தான்கண்டமேகம், எண்பாகவழூஆண்டதனிற்கொல்லும்வற்ற மாஞ்சுராரியென்றமேகந்தானே. (சுஎஎ)

சுக்கிலமேகம்.

என்றதோர்மேகந்தானிறங்கும்போது-வற்றமாஞ்சுக்கிலத்தினிற மேபோலும், தன்றதோர்தாளியிடச்சாறுபோலும்-தரித்துமேமெழுகூ ர்ந்துசிறுகிவீழும், கன்றதோரிதைக்காச்சிற்கட்டிபோலக்-கனமானசா ல்பேரற்றேஞ்சிப்போகும், மூன்றதோர்கண்டசலம்மூன்றுமாண்டில்- மூயற்சியாய்க்கொளுஞ்சுக்லமேகந்தானே. (சுஎஅ)

உதகமேகம்.

மேகமாய்க்கழுநீர்போற்சிக்கிச்சிக்கி-மிகுதியாய்த்தானிறங்குங்கா ச்சினக்கால்,சாகமாய்ச்சங்குசுண்ணும்புபோலத்-தாழவேமண்டிமிகப்பா யும்பாரு, பாகமாயிப்படித்தான்கண்டமேகம்-பாங்குமாயோராண்டுதனி லேகொல்லும், வேகமாய்மிகநாறுஞ்சரீரந்தானும் - மிகஉதகமேகமென் றேவிளம்புவாயே. (சுஎகூ)

பிங்நாகிமேகம்.

விளம்பவேதேன்போலமிகவிறங்கும்-மிக்கானதேன்வர்த்தநாற்ற மாகும், அளம்பவேமெழுகுபோலடியினிற்கும்-அதிகமாயீயெறும்புமி கவேமொய்க்கும், குளம்பவேவேளைக்குக்குறணியாகும்குறிகண்டவை ந்துமாதத்திற்கொல்லும், தளம்பவேசரீரத்தில்மதுத்தாணுறும்தனித்த தோர்பிநாகியென்றமேகந்தானே, (சுஅய)

லவணமேகம்.

தனித்ததோர்மேகந்தானிறங்கும்போது-தழலானசுண்ணும்புகார் நீர்போல, மினித்ததோர்மிகுதியாய்த்தானிறங்கும்-வேளைக்குநாளுமி தானுமாகும், கனித்ததைக்காச்சிறுற்படியுமுப்புக்-கண்டசலமபதினைந் துவருஷத்திற்றுன்வனித்ததோர்மறலியிடவூர்புக்காகும்மகாலவணமே கத்தின்வண்மைதானே. (சுஅக)

தயித்தியமேகம்.

வண்மையாய்மேகந்தானிறங்கும்போது - மகாஇறைச்சிகழுவின தோர்தண்ணீர்போலாம், கண்மையாய்க்காச்சிறுற்கவிச்சடிக்குமகனமா னநீர்த்தாரைமுறுக்கிவிழும், வெண்மையாய்வேளைக்குமூநாழியாகும் மிக்கானகுறிகண்டமூன்றுமாண்டுதன்மையாயேமனிடப்புசுத்துக்கேகு மசயித்தியமேகந்தானுந்தசமுமாமே. (சுஅஉ)

சேட்பசலத்தின்குணம்.

தசமானபந்துக்குங்குணத்தைக்கேளாய் - சரீரந்தான்பருத்துமே வெளுப்புண்டாகும், அசமானதினவுண்டாமடிக்கடிக்கு-அன்னமுமேமெத ன்னிருமிகவேநேடுமே, நசமானஇருமலுடன்சோகையுண்டாமகளளரி

வாயாயாசமுழலையாகும, குசமானகுணங்களெல்லாஞ்சேட்பந்தன்னில் கொடியசலக்குணமென்றேகூறினோ. (௪௮௩)

## மேகமஇருபதுக்கும அவத்தை.

கூறுனமேகமது இருபதுக்கும-குணந்தன்னைச்சிவன்சொல்லதேவி கேட்க, தாறுனதாகமொடுசோகமேக்கந்- தரியாமல்நீரிழிதலிருமல்மூச்சு, ஆறுன அருசிசத்திசித்தப்ரமமை- அடிக்கடிக்குத்தண்ணீர்தானன்ன ங்கேட்கல், ஈறுன இடுப்புக்குள்கடுப்புகாணல்எலுமபுழற்றலழற்றலோ டெரிவுண்டாமே. (௪௮௪)

எரிவோடுசரீரமெல்லாமறைபட்டாற்போல்- எழிலுடமபுநோதல் நித்திரையில்லாமை, வரிவோடுமொய்வுமெத்தவுமபறித்தல்- மனதுசஞ்சலப்படுதல்காற்றுவேண்டல், மெரிவோடுமேல்மூச்சுமிகவுண்டாதல்-விக்கலொடுமயக்கந்தான்மெத்தக்காணல், தெரிவோடுதேகமெங்குமவெளுருண்டாதல்-தேகமெத்தவாலோபப்படுதல்காணே. (௪௮௫)

காணவேமுதலவத்தைசரீரந்தானும- கனமாகப்பருத்திறுகிநீர்த்துவாரம, வேணவேவேண்டாக்கியகலமபண்ணும மிக்கவிரண்டாமவத்தை விளமபக்கேளாய், மூணவேமூத்ரப்பீடையுமாச்சுக்ல- முகமுழுகித்தேஜசுதான்மிகவேகுன்றும, நாணவேமூன்றுகுமவத்தைக்குந்தான்-நாவருளுமவாயுவதுமீறுந்தானே. (௪௮௬)

தாஞனநாலவத்தையங்கதாகம- சன்னியதுபாதமுண்டாமைந்தவத்தை, தேஞனநீர்ப்பெருகுந்தாதுநஷ்டம - நிலையாறுமவத்தையுடற்கிடைகொள்ளாது, மூஞனமூர்ச்சைவருமேழவத்தை-மிக்கவரோசிகஞ்சுவாசந்தேகசாட்யம, எஞனஎட்டாவதத்தைதானே-எழுகிரந்திபிளவையுந்தான்மிகவுண்டாமே. (௪௮௭)

## சாத்யவசாத்யம.

உண்டாகுமொன்பதாமவத்தைக்கேளாய்- ஒழுக்கான ஆசாரங்கிருமியுண்டாம, பண்டானபத்தாந்தானவத்தைக்கேளாய்-பாரமாமக்ஷயங்கண்டுபாத்துக்கேகும, வெண்டாகுமேகந்தானிருபதுக்கும - விளங்கியதோர்தசவவத்தைவிபாஞ்சொன்னோம, ஆண்டாகுஞ்சாத்யவசாத்யமிரண்டும-அறிந்துகொண்டு அடவாகவிழ்தஞ்செய்யே. (௪௮௮)

செய்யவேவச்சிரமாந்தண்டமான செயமானமுதுகுதண்டைப்பற்றிநிற்கும, பெய்யவேபெருநாமபில்மேகந்தானும- பிறக்குமென்றேதானறிந்துவாதந்தன்னால், பிய்யவேபிறந்தசலமநாலசாத்யம-பித்தத்திற்பிறந்தசலமாறுமயாப்யம, பையவேசேட்டுமத்திற்பிறந்தசலமபத்தும-பாமனுனாத்தார்சாத்யமபாராபரிக்கே (௪௮௯)

## மேகமஇருபதுக்குமபத்தியம.

பரிமேகமிருபதுக்குமபத்தியந்தான்- பாங்காலவுரைத்திடவேபசுவின்வெண்ணெய், பொரிவாகளருமைமோர்பொன்னாங்காணி-யோர்பெ

ற்றசிறுநீரைமுசுட்டையாகும், அரிவாகஅவரையொடுவிடல்முருங்கை அதிசாமாங்கண்டுசெருக்கரையுமாகும், மரிவாகமாதளையாம்பேரீத்தாகும் மகாவிளம்பழமூந்திரிப்பழமுமாமே (௪௱௰)

ஆமேபேயன்வாழைப்பழமுங்கச்சல் - அத்திபிடப்பிஞ்சுசிறுபய றுபழஞ்சோறு.பாமேபழஞ்சோற்றுநீர்வெந்தயஞ்சீரகமாம்- பாகல்பீர் க்கங்காய்கருவேப்பிலைகொத்தமலி, நேமேநெற்பொறிஎள்ளுமுசுமுசுக் கையாகும்-நோானநல்லெண்ணெய்புண்ணுக்குளுந்து, தாமேகமிருபது க்கும்பத்யவர்க்கம்-சாற்றினார்சிவன்றானுந்தாய்க்குத்தானே, (௪௱௧)

தாயானபாாபரிக்குச்சிவன்றான்சொல்லத் -தாய்கேட்டுநந்திதனக்க ருளாற்சொல்ல, தூயானநந்திதன்வந்திரிக்குச்சொல்ல- கற்றமாய்த்தன் வந்திரிஅசுவினிக்குச்சொல்ல ஆயானவசுவினி அகத்தியர்க்குச்சொல்லஅக த்தியரும்புலத்தியருக்குபதேசிக்க, பூயானபுலத்தியரும்தேரையமாமுநி க்குப்-புகன்றிட்டாரவந்தனுக்குத்தேரையமுனிதானே. (௪௱௨)

தானனையான்தானேமனமுவந்து சகலசனத்துபசாரச்சாங்சமாகக், கோனன்சிவன்சொன்ன ஆதிநூலின் - குறிப்பெல்லாம்பார்த்துணர்ந்து மொழிவைத்திரட்டி, தேனனசாத்திரமாய்த்தமிழினலே-தெளிவாகஎல் லோரும்றியவென்று, ஆனனஆயுருவேதத்தையெல்லாம்- அடக்கியேசு ருக்கினேன்மேகமூற்றே. (௪௱௩)

மேகரோகநிதாநம்-முற்றிற்று.

## குட்டரோகநிதாநம்.

முத்தாகுங்குஷ்டந்தான்பதினெட்டுக்கும்- மூங்கியானயூகிமான்சொ ல்லக்கேளாய், புத்தாகும்புண்டரிகக்குஷ்டத்தோடு - பொருகின்றவிற் போடக்குஷ்டமாகும், பத்தாகும்பரமகுஷ்டம் கேச்ரகுஷ்டம- பரிவா ணகாணகுஷ்டம்சிகுமகுஷ்டம,கித்தாகுங்கிருஷ்ணகுஷ்டமஅதுவுமபர் குஷ்டம-கெடியானமண்டலகுஷ்டகுமாமென்னே. (௪௱௪)

குஷ்டமாமபர்ப்பரிசகுஷ்டமோடு - குடிலமாமவிகர்ச்சிகக்குஷ்ட மாகும, வட்டமாமவையாதிகுஷ்டமோடு -மருவலாங்கிடபகுஷ்டஞ்சர் மவேவம, திட்டமாங்தேத்திருக்குஷ்டமோடு-சித்துமாகுஷ்டஞ்சாகாரு குஷ்டம, துட்டமாஞ்சுவேதகுஷ்டந்தன்னேடொக்கச்- சுயமபானபதி னெட்டுகுஷ்டமாச்சே, (௪௱௫)

ஆச்சென்றபதினெட்டுகுஷ்டந்தானும- அவாவர்கள்செய்கின்றவ தர்மத்தாலாம, தேச்சென்றசிவாலயத்திலுச்சிஷ்டங்கள், செய்தவர்கள் சிவநிந்தைபண்ணினோர்கள், மூச்சென்றபெரியோரைத் தூஷித்தோர்க ள்-மூஸ்கரமாயடைக்கலந்தையெடுகின்றோர்கள், கூச்சென்றதினையளவு ங்குறைந்தகூலி-கொடுக்கின்றோர்குஷ்டத்திற்கூடுவாரே. (௪௱௬)

## புண்டரீகக்குஷ்டம.

கூடுமேதாமரையின்பூவிதழ்ப்போல்- குவிந்துமேகறுப்போடுவெளுப்புமாகும,தேடுமேசிவப்புபலவர்ன்னமாகும-தினவுமிகவாராதுசொனையிற்பன்னீர்,வாடுமேஅய்யினுறமத்தியாகி- வருத்தமிகவுண்டாகிநோவுமாகும, போடுமேசரீரங்கள்முகங்கள்காது-புண்டரிகக் குஷ்டத்தின் புதுமைதானே. (௪௯௭)

## விற்போடக்குஷ்டம.

புதுமையாய்ச்சரீரமெங்குந்தினவுண்டாகும- பொருவெடியாய்த்திக்கெனத்தீக்கொழுந்துபோல,மெதுமையாய்விட்டெரியும்நல்லபாமபின் விஷப்படம்போலேதடித்துவெளுப்புமாகும,சுதுமையாய்மிகச்சொரியுஞ்சிவப்புமாகும-தூக்கமொடுசஞ்சலமுமமிகவுண்டாகும, கதுமையாய்த்தோலெல்லாந்தடிப்புண்டாகும - கனத்தவிற்போடகமானகுஷ்டந்தானே, (௪௯௮)

## பாமகுஷ்டம.

தானுனதினவுண்டாய்வெளுத்திருக்கும் தங்கியேசீப்பாயுந்தேகங்குன்றும், கானுனசரீரமெல்லாவெரிவுண்டாகும்- கனமானதாமரையின்குடைபோலுண்டாம்பானுனசொரியோடுதினவுண்டாகும்-பாம்பினிடத்தோல்போலவுருஞ்சிவிங்கும், கானுனகால்கையுங்குறைந்துகாணும்கனமானபாமகுஷ்டமாகுந்தானே. (௪௯௯)

## கேச்சர்மகுஷ்டம்.

தானுகச்சடந்தானுமிகக்கறுப்பாம் - சடமெங்குந்தோலுரியுஞ்சிவப்புமாகும், வேனுனவெறவெறனத்தானிழுக்கும்- வெடிக்குமேசொரிச்சலாய்த்தினவுண்டாகும்,கானுகச்சர்மகுஷ்டமிதிலுண்டாகும்-கடினமாய்க்காலவிரல்கனப்புண்டாகும், கூனுகத்தேகமெங்குப்வலியெடுக்குங்குறியானகேச்சர்மகுஷ்டந்தானே. (௫௱)

## காணகுஷ்டம்,

சர்மந்தான்மிகவெடிக்கும்போரிற்றுனும்- சடமெல்லாம்வேதனைபச்சென்றிருக்கும்- தொர்மந்தான்றிரிதோஷகுணமுண்டாகும்-தேகமெங்கும்பாரிக்குந்திமிருண்டாகும்கர்மந்தான்காக்கணம்பூநிறமதாகும்-கண்டுப்புவீக்கமாய்த்தானிருக்கும் வர்மந்தான்மனக்கிலேசமிகவுண்டாகும்-மர்காணகுஷ்டத்தின்மார்க்கந்தானே. (௫௱௧)

## சிகுரகுஷ்டம்.

மார்க்கந்தான்பசுமையாய்-வெளுப்புண்டாகும்-மாசிவப்புக்கறுப்புமாய்த்தினவுண்டாகும், தார்க்கமாய்த்தடிப்புச்சீப்பாச்சலாகும்- தசைவயிறுகடினுகக்கீட்சொரியுமாகும், தேர்க்கமாய்த்திமிரோடுதசையும்பாவும்-தேக்கானஎரிச்சலாய்உஷ்ணமாகும் சித்தமாய்வயிறுதனிற்கண்டிப்பாகும்-சிகுரகுஷ்டந்தன்னுடையசேதிதானே. (௫௱௨)

## கிருஷ்ணகுஷ்டம்.

சேதியாய்த்தேகமெங்குந்தான்கறுக்கும்- சிவப்புடனேசேட்டுமெத் திலுற்பவித்துக்,காதியாய்த்தோல்திமிர்த்தேகதித்தூநாறும்-கனமானதா துவிலுமூஷ்ணந்தாக்கும், நூதியாயுடம்பெங்கும்நோவுண்டாகும்-நுட் பமரம்புறங்காலிலறையிற்காணும், தாதியாய்த்தலைதன்னில்மிகுதியாகு ம்-சஞ்சரிக்குங்கிருஷ்ணகுஷ்டத்தாண்மைதானே. (ஙாரு)

## அவுதும்பர்குஷ்டம்.

ஆண்மையாய்த்திக்காய்ப்போலரும்பி-அடுக்கடுக்காய் முளைத்துமே பெருத்துமெத்தக், காண்மையாய்க்காய்ந்துமேஉடம்பெங்குந்தான்- கரு கியேஉடம்புதோல்திரைந்துதொங்கும். தோண்மையாய்த்தேகமெங்கு ந்திமிருண்டாகும்-செ:ரியுமேசரீரத்திற்செந்நீர்பாயும் வாண்மையாய்ம க்கந்தான்மிகவுண்டாகும்-வகுத்ததோர வுதும்பர்குஷ்டந்தானே. (ஙாச)

## மண்டலகுஷ்டம்,

வகுத்ததோர்பச்சைவர்ணமிரத்தவர்ன மாயிருக்குமுடம்பெல் லாஞ்சிரசெல்லாந்தான்,விருத்ததோர்தலையிலேவெளுப்புமாகும்-மேனி யெல்லாமிகத்தடித்துக்கறுப்புண்டாகும், திருத்ததோர்தினவாகுஞ்சொ றியுமாகும்சிகப்பானசலம்வீழுஞ்சடமெங்குந்தான், வகுத்ததோர்மண் டலகுஷ்டத்தின்செய்தி-மார்க்கமெல்லாம்பார்த்துணர்ந்துமருவுவீரே ()

## அபாபரிசகுஷ்டம்.

மருவவேதேகமெல்லாமிகவேநொந்து- மாசற்றசத்தமெல்லாமிகக் கறுக்கும், செருவவேசிந்தையெல்லாநோவுண்டாகும்- தேகமெங்குந்து டிபடாநோவுண்டாகும், அருவவேவாய்வுமிஞ்சியதிகநோவாம்-அதிர் அ வேதனையாகுமிகநீர்தொட்டால், பருவவேவீங்கியேவெடிப்புண்டாகும் பாந்தவபர்பரிசகுஷ்டப்பண்புமாமே. (ஙாசு)

## விசர்ச்சிககுஷ்டம்.

பரிசமாய்வாதபித்தத்துற்பவித்துப்- பரிந்துதொட்டாலெண்ணெ ய்தனைவெளுப்புமாகும், விரிசமாய்த்தினவெரிப்புவேதனையுமாகும்-மிக ச்சிவப்புத்தண்டிப்புத்தோலுறப்பு மரிசமால்காவெரிப்புஞ்சலிப்பு-மகத் தானவெட்கிப்புவயிறுசப்பு, அரிசமாய்கோபிப்புச்சாசப்பு- சுறுசுறுப் புவிசர்ச்சிகக்குஷ்டமாமே. (ஙாஎ)

## வையாதிகுஷ்டம்.

சுறுப்பாகச்சேட்டும்பிதகந்தன்னிற்றான் - றனித்துடம்பிலேவெடித்தங்காற்றவெண்ணு அறுப்பாகவுண்டவொண்ணுத்தணலதாகி- அமூன்றுகைகால்கண்காதுகண்டந்தானும், வெளுப்பாகவெடித்துமேவிங்கிப்புண்ணும்-மேனியெல்லாநற்பாம்புமின்னலாகும், கறுப்பாகச்சந்தெல்லாம்பாவிநிற்கும்-காரணமாம்வையாதிகுஷ்டமாமே. (௫௱௮)

## இடபகுஷ்டம்.

காரணமாஞ்சரீரமெங்கும்பச்சையாகும்-கனத்துயானைத்தோல்கதுப்புமாகும், மாரணமாய்மகாதினவுசொரியுமாகும் மகத்தானமூக்கிரந்தானடிக்கடிக்கு, நாரணமாய்நன்னீரதாகுமேனி- நலக்கமாய்நாற்றந்தான்மிகவுண்டாகும், சீரணமாய்ச்சிவப்பட்சிவாதமாகும்-செடந்தானுமூதுமே இடபகுஷ்டம் (௫௱௯)

## சர்மதேவகுஷ்டம

இடபமாயுடம்புவலியதிகமாகும்- இற்றுகவெடித்துவேதனையாகும் தடபமாய்த்தடிப்பாகிச்செம்மையாகுந்- தனைத்தொட்டால்நோக்காடாய்த்தினவெழுப்பும், வடபமாய்மயக்கோடு அசதிகாணும் -மாறாதநோக்காடுமிகவேயுண்டாம், திடபமாயுதரத்தில்வலியுமாகும்- செப்புகின்றசர்மதேவகுஷ்டமாமே (௫௱௰)

## தேத்திருக்குஷ்டம்.

சர்மந்தான்சிவப்பாகவட்டணித்துச் - சலவைபோல்வெளுக்குமே தினவுண்டாகும், வர்மந்தான்ரோகமதுமிகவுண்டாகும்-மயிரொல்லாஞ்சுருண்டுமேஉண்டையாகும், கர்மந்தான்பித்தசேட்டுமமிகுக்கும் - காயந்தான்கதித்துமேதிமிருண்டாகும்,தர்மந்தான்சடமெல்லாமூதலாகும் தாக்கானதேத்திருக்குஷ்டந்தானே. (௫௱௰௧)

## சித்துமாகுஷ்டம்.

தாக்கானவாதபித்தத்துற்பவித்துத் தளிரானசுணைப்பூவின்வண்ணமாகி, வாக்கானவடிவமெல்லாந்திமிருண்டாகி- வட்டணித்துப்பசுமஞ்சள்வர்னமாகும், தேக்கானதிமிரோடுசெந்நீருண்டாய்- தேகமெங்குமசைக்கொணுச்செழுமையாகும், நீக்கானநினைவோடுமறதியாகும்-நிலவரமாஞ்சித்துமாகுஷ்டந்தானே. (௫௱௰௨)

## சதாருகுஷ்டம்.

சித்தானதண்டிப்பாய்ரத்தவர்ன்னம்-செழும்பச்சைவெள்ளையாய்ச்சிவப்புமாகும், எத்தானவெரிப்போடுதினவுமாகும்-எளிதானசேட்டுமவாதத்துற்பத்தி,பத்தானகரடுகட்டிப்புண்ணுமாகும்- பாம்புதோல்போற்றிரைந்துபருத்துக்காணும்,வித்தானமூக்கோடுகாதுகன்னம் - மிகத்தடிப்பாஞ்சாதாருகுஷ்டந்தானே. (௫௱௰௩)

### சுவேதகுஷ்டம்.

தடிப்பாகத்தவளநிறம்போல்வெளுத்துச்சர்வாங்கமும்வெளுக்தாற்றான்றிரும்பும், மடிப்பாகமயிர்வெளுத்தாலசாத்யமாகும்வரிவதடவுள்ளக்கைக்குதவங்குய்யந்தான், நெடிப்பாகநெருப்புப்பட்டதுபோற்புண்ணாய் - நிறமிருந்தாலசாத்தியமென்றேயுரைக்கலாகும், வெடிப்பாகமேனியெல்லாம்வெளுத்துவிங்கில்- வெண்சுவேதகுஷ்டமென்றேவிளம்பலாமே. (௫௱௰௪)

### குஷ்டம்வாலாறு.

விளம்பவேமிகுந்தஉஷ்ணந்தன்னாலும் மிகுந்தசீதளத்தாலுமழற்சியாலும், வளம்பவேமந்தக்தால்வாந்தியாலும்- மகத்தானபெண்ணோடுமருவலாலும், இளம்பவேகிலேசங்கள்மிகுதலாலும்- கெடியானவுரக்கன்களடைதலாலும், தளம்பவேமயிருகிர்கள்தவிடுமண்கள்- சாதத்திற்பருகலால்மிகுக்குங்குஷ்டம். (௫௱௰௫)

குஷ்டந்தான்பதினெட்டுவாவேதன்னிம்- குருநிந்தைசிவநிந்தைமறையோர்நிந்தை, திஷ்டந்தான்தேவதைதைத் தூஷணைக்குரோ॥தம்செப்பலாற்றிருடலாற்பரதாரத்தை, அஷ்டந்தானாசையாலடைக்கலத்தை அபகரித்தலகதிபாதேசிதன்னை, வஷ்டந்தான்வைதலாற்கர்ப்பழித்தல்- வந்திடுமேபதினெட்டுகுஷ்டந்தானே. (௫௱௰௬)

### சாத்யம்.

குஷ்டந்தான்பதினெட்டில்சாத்தியந்தான் கூறக்கேள்விற்பொடகபாமற்குஷ்டம், இஷ்டந்தான்கெசசர்மகுஷ்டமோடு - கிருஷ்ணகுஷ்டமவுதும்பர்குஷ்டந்தானும், திட்டமாந்தேத்திருக்குஷட்மோடு- செயசித்துமாகுஷ்டங்கிடிபகுஷ்டம், தட்டந்தான்மிகுந்தசாதாருகுஷ்டம்சமகிருஷ்ணகுஷ்டமசாத்தியமாமென்னே. (௫௱௰௭)

### அசாத்யம்.

ஆமென்றபத்துந்தானசாத்யமாகும்- அசாத்யமதுதானெட்டுஅறிந்துபாரு, போமென்றபூர்வத்தின்கன்மத்தாலும்- புவிதனக்கும்மிகுகன்மஞ்செய்தபாவம், பாமென்றபெரியோர்கள்சாபத்தாலும் - பாதகங்கள்மனதறியப்பண்ணும்பேர்க்கும், கோமென்றகுஷ்டமாம்ரோகம்வந்து- கூடுமென்றுவூகிமுனிகூறினேனே. (௫௱௰௮)

குட்டரோகநிதானம்-முற்றிற்று.

---

## பாண்டுரோகநிதானம்.

கூறவேபாண்டுவிடப்பெயரைக்கேளாய்-குறிப்பாகவைந்துவிதமாகும்பாரு, வாரவேவாதமாம்பாண்டுவோடுமார்க்கமாம்பித்தத்தின்பாண்டுவாகும், தேறவேசிலேட்டுமமாம்பாண்டுதானும் - திரிதோஷப்பாண்டோடுவிஷப்பாண்டாகும், ஆறவேபாண்டுவிடவாண்மையெல்லாய்- ஆராய்ந்துசொல்லவேயறிந்துகொள்ளே. (௫௱௰௯)

### உற்பத்தி.

அறிந்துமேஉற்பத்திசொல்லக்கேளாய்-அதிசாரமலமிளகியெக்கேரந்தான், பிறிந்துமேபிளியுப்புபெருத்தலாலும்-பெத்தமாமக்கினியிலிருத்தலாலும், மிறிக்துதாம்பூலமிகஅருந்தலாலும்- மீறியேமதுக்களைத்தான்புசித்தலாலும், பறிந்துமேபகல்நித்திரையேசெய்தலாலும்- பாண்டுவெந்துபாரிலுள்ளோர்படும்பாடாமே. (௫௨௰)

பாடானபஞ்சுதணைத்திருடினோர்க்கும்- பாங்கானசிவதுயிலைப்பருகினோர்க்கும், மாடானபசுவதைப்பட்டினியதாக-வைக்கின்றோர்மறைவழியைநடந்திடாதார், காடானவாரணியந்தனிற்பறித்துக்-கடுவதைகடுவதைகள்செய்கின்றோர்கண்காணாத, கோடானபழிசொல்லிக்குடிகெடுக்கும்-கொடும்பாவிபாண்டுவினாற்குதிகொள்வாரே. (௫௨௧)

### வாதபாண்டு.

கொள்ளவேவாதபாண்டுரோகங்கேளாய்- குடல்பிரட்டியடிவயிறுதான்வலிக்கும், தள்ளவேதாகமொடுபுசியுமில்லை-தழலானசாசரப்பாகத்தானும், நள்ளவேநரம்பெல்லாங்கறுப்புமாகும்-நடுக்கலொடுகண்சிவப்புமலபந்தந்தான்,விள்ளவேதலைவலிக்குமேனிவீங்கும்-வெளுப்பாகும்வாதத்தின்பாண்டுவாமே. (௫௨௨)

### பித்தபாண்டு

வாமென்றமேனியெல்லாமஞ்சளித்து-மகாவெளுப்புஉண்டாகிமங்தக்கண்ணும், தாமென்றதாகமொடுமூர்ச்சையாகும்- தனிவாயில்மிளகுபோற்றுனுணாக்கும், நேமென்றநெஞ்சுமுடிதானுமுண்டாய்- நெருக்கியேமூச்சுமுட்டதுவேயாகும், கோமென்றகிறுகிறுத்துவாய்கைப்பாகுங்கிளர்பித்தபாண்டுவெனக்கீறலாமே. (௫௨௩)

### சிலேட்பபாண்டு.

கீறியதோர்நரம்புதோல்மிகவெளுப்பு- கிளர்நாவுஉப்புரைக்குமயிர்கூச்சாகும், வாறியதோர்வாந்தியாங்குரலுங்கம்மும்- மகத்தானதும்மலுடன்கோழையாகும், ஈறியதோரிருமலொடுமயக்கமுண்டாம்இடுப்பசதியிந்திரியநஷ்டமாகும், ஊறியதோர்சோபமொடுதாபமாகும்- சிலேட்டுமத்தின்பாண்டென்னச்செப்பலாமே. (௫௨௪)

### திரிதோஷபாண்டு.

செப்பவேஅருசியொடுசோபதாகம்-செயலானசுவாசமொடுஇளைப்புமாகும், வெப்பவேமேநிசிறுநீர்தான்வீழும்-மிடுக்கானபெலனமார்பிடித்தல், துப்பவேசூட்டோடுதியக்கமாகும்- தும்மலாயுடம்பெங்குமூதிக்காணும், திப்பவேதேகமெங்குமசதியாகும்- திரிதோஷப்பாண்டென்னச்செப்புநூலே. (௫௨௫)

விஷபாண்டு.

நூலாகலத்தோடேயுடல்வெளுக்கும்- நோய்காம்புகுடாகுந்தாகமாகும், ஆலாகஅருசியொடுசத்திவிக்கல்- அதட்டியேஇருமலுடனதிசுவாசம், வாலாகவயிற்றிரைச்சலதிசாரதோஷம்-மாசுரமுமுண்டாதல்மார்கனத்தல், வேலாகமேனியெங்குமிகவேவூதல் - விஷபாண்டுஅசாத்யமென்றேவிளம்பலாமே. (௫௨௬)

விளம்பவேபாண்டுமுற்றிஇருக்கும்போது- மீறியேபித்தவஸ்துதனைப்புசித்தால், புளம்பவேமங்கையுடன்புணர்ச்சிசெய்தால்பூண்டிடுமே காமாலையென்னும்ரோகம், தளம்பவேகாமாலைபதின்மூன்றாகும்-சார்வானபேரோடுகுணகுணத்தை, உளம்பவேஅசாத்தியங்களதனையெல்லாம் உரைக்கரிதுஉரைக்கின்றேனுற்றுக்கேளே. (௫௨௭)

காமாலைரோகநிதானம்.

உரைக்கவேஊதுகாமாலையோடு- உயர்ந்தவாட்காமாலைவாதக்காமாலை, புரைக்கவேபித்தகாமாலையோடு- பேரானசிலேட்டுமகாமாலையாகும் வரைக்கவேவாதசிலேட்டுமகாமாலை- வகையானபயித்யசிலேட்பக்காமாலை, துரைக்கவேதொந்தகாமாலையொடுசூக்ஷமமாமஞ்சட்காமாலையாமே

மஞ்சளாமழுகுகாமாலையோடு - மருவுகின்றசெங்கமலக்காமாலையாகும், குஞ்சலாங்கும்பகாமாலையோடு கொடியகுன்மக்காமாலைபாதின்மூன்றாகும், தஞ்சமாங்காமாலைமுற்பிசன்மத்தில்-தயையில்லாக்கோபத்தாற்சண்டைதன்னால், பஞ்சவாம்பரமசிவன்றன்னைத்தானும்-டணியாதமூடருக்குப்பரவுந்தானே. (௫௨௮)

காமாலைஉற்பத்தி.

பருகவேஉள்ளங்காலுஉள்ளங்கைகள் பார்முகக்கண்ணுடம்புமிகவெளுப்புகாணும், கருகவேகால்கைகளோச்சலாகுங்கனமாகநடுக்கியே இளைப்புண்டாக்கும், சுருகவேமலந்தானும்வாண்டுகட்டும்- தூய்முகமஞ்சளிடநிறமதாகும், வெருகவேவீக்கமயக்கமிளைப்புண்டாகும்- மிகக்காதுமந்தமொடுதலைகனப்புண்டாமே. (௫௩௰)

ஊதுகாமாலை.

கனப்பாகக்கண்ணுமுகங்கசிவுண்டாகும்- கனவீக்கமுடலெங்கும் உளைவுண்டாகும், அனப்பாகவழற்றலாய்த்தேகமுணர்வில்லை-அதிகமாய்ச்சீதவெப்புகலைதிருப்பு, தினப்பாகத்தியக்கமொடு சிறுநீர்மஞ்சள்-தேகமெங்கும்வாடியேதிமிருண்டாகும், உனப்பாகஉட்குடைச்சலாயிருக்கும்- ஊதுகாமாலையெனவுரைக்கலாமே. (௫௩௧)

வாட்காமாலை.

உரைக்கவேகால்கைகள்மிகவும்வற்றும்- ஊணவேகால்தவறுமசதியாகும், நிரைக்கவேநீலம்போல்மலமிலங்கும்- நீர்தானுஞ்சிவந்துமேமெருப்பாய்க்காணும், துரைக்கவேசூலைநோவென்னக்குற்றும்-சோறுருசியில்லாதுமாலைக்கண்ணும், வரைக்கவேவடிவெல்லாங்கருகிக்காணும்மயங்குவாட்காமாலைவகுத்தவாறே. (ருஙஉ)

வாதகாமாலை.

வாறுனவயிறுதனைப்பொருமிவிக்கும்-மலந்தானுங்கழியாது உடம்புவீக்கும், பூறுனபுறங்காலுமுகமதைக்கும்-புகழ்கருமமொன்றையுந்தான்செய்யவொட்டா, ஊறுனவுடல்கடுக்குமிகவிளைக்கும்-உறக்காதுமிகவீங்குங்கண்பருக்கும், பாறுனபசியில்லாதுறக்கமாகும்- பண்பானவாதகாமாலையாமே. (ருஙங)

மாலையாயுடம்புலர்த்தும்உறக்கமில்லை- மகத்தானபடுக்கைவிட்டுவெழுஞ்செய்யா, சேலையாய்ச்சோறுமேசெரியாமற்றுன்-செடமெங்கும்வாயுவாய்த்தியக்கமாகும், பாலையாமூச்சதுவுமிகவுண்டாகும்- பருக்கையாய்க்கழியும்வயிறுதானும், ஆலையாய்வயிற்றிரைச்சலதிகமாகும்அசதியாம்பித்தகாமாலைதாமே. (ருஙச)

சிலேட்பகாமாலை.

தாமென்றசடத்தையேயறிவழிக்கும்-தாக்கான இருமலேமிகவுண்டாகும், வேமென்றதலைமுகமூம்வியர்வையாகும்மிடுக்கானநடைகுறையுமூச்சுமாகும், பாமென்றபாக்கருந்தில்மிகச்செருக்கும்பண்பானவிழிசிவக்குமுடல்நடுக்கும், நேமென்றநெஞ்சுதான்மிகக்கனக்கும்- நெடிதுயர்க்குஞ்சிலேட்டுமகாமாலையாமே. (ருஙரு)

வாதசேட்பகாமாலை.

துயர்க்குமன்னந்தனைத்தானுஞ்சீரணமாகா- செரிக்கசுகமாகவொட்டாச்செருமலாகும், முயிர்க்குமுகமூக்குக்கண்மிகவேவெக்கும் - முடுகியேவயிறிறைந்துபொருமிக்கொள்ளும, கயர்க்குநாக்குக்கண்ணுமிகவெளுக்கும்-கனமானநடையினில்மூச்செறியவைக்கும்,வியர்க்குமேனிகமெல்லாமவீக்கமாகும்-மிடுக்கானஇருமலுண்டாம்வாதசிலேட்பம். ()

பித்தசிலேட்பகாமாலை.

உண்டாகிவாந்திபண்ணுஞ்செருமலாகும் - ஓயாமற்றலைவலிக்குமனமருக்கும், வண்டாகிவயிர்கழியுந்தாகமுண்டாம - மனமெல்லாம்புண்ணுகிமயக்கமாகும், துண்டாகிச்சாதமுப்பிச்சிரணியாது- துய்யமுகங்காலோடுகைவெளுக்கும், வெண்டாகிமேனியுமேஊதிக்காணும்- மிக்கபித்தசிலேட்பகாமாலையாமே. (ருஙஎ)

தொந்தகாமாலை.

ஆமென்றவங்கமழன்றேயெரிக்கும்- அசதிவருமடிக்கடிக்குஇருமலுண்டாம், தாமென்றதண்ணீர்தான்மிகத்தவிக்கும்- சடமெங்குங்கடுப்பெடுக்கும்புளித்தேக்காகும், போமென்றநாவதுதான்மிகப்புளிக்கும்-புளியானபசியெடுக்குங்குளிருண்டாகும், வேமென்றஅடிவயிறுவீங்கும்வேர்க்கும்-மிக்கதொந்தகாமாலைவிபரந்தானே. (ருஙஅ)

மஞ்சள்காமாலை.

விபரமாய்மூத்திரந்தான்மஞ்சளாகும்-வீங்குமேசரீரமெங்குமெலிவுண்டாகும், ழுபரமாய்முகங்கால்கண்கையுண்ணாக்கு- மொழிமஞ்சணிறமாகும்முமமினுக்கும், அபரமாயன்னத்தையிறங்கொட்டாது- அழுகையாய்மனஞ்சலிக்குமூச்சுண்டாகும், தபரமாய்த்தாதுநஷ்டம்மலமுமபந்தம்சார்ந்தமஞ்சகாமாலைதன்போமே. (௫௩௯)

அழகுகாமாலை.

போனகால்கையுமசதியாகும் - போர்புருவங்கண்கள்கழற்கொடிக்காய்போலப், பாரானபச்சென்றுதானிருக்கும்-பருகுநீர்மஞ்சணிறமாய்விடுக்கும், தீரானலிங்கத்துளெரிப்புமாகும்- செரிக்கவொட்டாதன்னத்தைச்சிதறியுப்பும், ஆரானவழல்போலவெதும்புமேனிஅழதுகாமாலையிடவாண்மைதானே. (௫௪௰)

செங்கமலக்காமாலை.

ஆண்மையில்லாத்தமாகத்தின்குணமுமாகும் - அங்கமெல்லாந்தழற்சியுமாய்ச்சோம்புமாகும், தீண்மைசிறுநீர்சிவந்துமஞ்சளித்துச்- சிறுகியேசிறுநீர்தான்அருக்கிவீழும், நாண்மையாய்நகங்களுடல்மிகவெளுத்து-நற்காயம்வற்றியேசுரமுண்டாகும், ஊண்மையாயுண்ணாக்குஉமிநீர்நாக்கும்-உறுமஞ்சள்செங்கமலக்காமாலையாமே. (௫௪௧)

கும்பகாமாலை.

காமாலையடிக்கூடிக்களையேபோடும்-கனமாகவுடம்புசிறுநீர்மஞ்சள், வேமாலைநோத்தில்வியர்வையாகும்- மேனேக்கும்வாதந்தான்கண்சிவக்கும், பூமாலைபோலவேதுவண்டுபோகும்-புகழானமயிலுறக்கம்போலேயாகும், கோமாலைமலந்தானுங்குதுக்கென்றாகும்கொடியகும்பகாமாலைக்குணமிதாமே. (௫௪௨)

குன்மகாமாலை.

குணமானவாய்வெளுப்புகண்தான்பச்சைக்- கொடுமூத்ரமஞ்சளித்துக்குழம்புமாகும், அணமானவன்னந்தான்செரிக்கும்போது- அடிவயற்றில்வலியுண்டாம்வாந்தியாகும், மணமானதொன்றுமேயறிந்திடாது- மயிலுறக்கமிளைப்பிருமல்மூச்சுமாகும், பிணமானதனுபோலக்கிடைகிடக்கும்பிராளுமேகுன்மகாமாலைதானே. (௫௪௩)

சாத்தியம்.

தானானகாமாலைப்பதின்மூன்றாகும் - சாத்தியந்தானேழாகும்பேரேதென்னில், பானானைபித்தியகாமாலையோடு- பாவுமஞ்சட்காமாலைசிலேட்பமாகும், ஊனானஊதுகாமாலையோடு-உணர்த்தும்வரட்காமாலைவாதசிலேட்பம், கோனானபித்தசிலேட்டுமக்காமாலைகுணமாகமேழுந்தான்கூர்ந்துகேளே. (௫௪௪)

அசாத்தியம்.

கேளென்றகும்பகாமாலையோடு- கெடிகொள்குன்மக்காலைதொந்த காமாலை,வாளென்றவாதகாமாலையோடு-மருவுகின்றசெங்கமலககாமாலை யாகும், ஆளென்றவழுகுகாமாலையோடு - ஆறுந்தானசாத்தியமாமறிந் துகொள்ளு, கோளென்றுசொல்விமகாகொடுமைசெய்த-குணங்கெட்ட மானிடனைக்கூடுந்தானே. (௫௪௫)

பாண்டுரோகநிதானம்-முற்றிற்று

---

## சோபைரோகநிதானம்.

தானனசோபையதுநாலுவிதமாகும்சாற்றிடதேவாதத்தின்சோபை யோடு, தேனனபித்தத்தின்சோபையாகும் - சிலேட்டுமத்தின்சோபை திரிதோஷசோபை, நானனநாலுவிதச்சோபைதன்னில்-நாட்டமெல்லா ஞ்சொல்விடநீநயந்துகேளாய், பானனஉமைதனக்குச்சிவன்முன்சொ ன்ன-பாங்கதனைப்பகருவன்யான்பரிந்துகேளே. (௫௪௬)

பாங்கானசன்னிபாதச்சுரங்கள்-பகர்சித்தப்பிரமை சன்னிபருகினு லும், தேங்கானபன்னகந்தான்றீண்டலாலும்-சிலவிஷங்கள்தேகத்திலூ றலாலும், ஆங்கானசிறையிருத்தல்அடிபடுதலாலும் - அநேகவழிநடக் கைமலையிருக்கையாலும், தாங்கானசலக்கரைகள்தனிவிருக்கல்-சாம்பல் மண்மாதவிடுதன்னுற்சோபையாமே. (௫௪௭)

வாதசோபை.

சோபைதான்வருமுன்னேஉடல்தான்வற்றும்- சகநரம்புதான்வெ ளுக்குமசீர்ணமாகும், தூபைதான்பெலக்ஷயமாய்நடக்கலாகுஞ் சுரமோ டுமிகவெளுப்புமிளைப்புமாகும், மாபைதான்மயிர்முனைகள்சிவந்துபோ கும்-மகத்தானநித்திரையுமந்தமாகும் சோபைதான்அங்குலிலேசடமெ ங்குந்தான்-கொடுவலியாம்வாதத்தின்சோபையாமே. (௫௪௮)

பித்தசோபை,

வலியாகமயிர்மஞ்சளித்திருக்கும் மகத்தானசத்தியமேமிகவிருப்பு ம், தலியாகத்தாபமொம் இளைப்புகாணும்-சரீரந்தான்மிகச்சிவப்பந்தலைவ லிக்கும், புலியாகவிருந்ததுபோய்பெலவீனத்தால் புகலரியமயக்கமொடு வியர்வையாகும், நலியாகக்கண்புருவமூக்குத்தண்டு - நலங்குமேபித்தத் தின்சோபைதானே. (௫௪௯)

சிலேட்பசோபை.

நலங்குமேவடிவெல்லாந்தினவுண்டாகும்-நல்மயிர்க்கால்வெளுப் புஉடல்வெளுப்பு, திலங்குமேதேகமெங்குஞ்சாசாப்பு-திடுக்கியேமிகக் குளிருநித்திரையில்லை, விலங்குமேவிழியனலாங்குரல்நெரிவாகும்- விகூழியாய்ப்பேதிதலைகிறுகிறப்பு இலங்குமோத்தவகளசாந்துவிங்கு ம்-சிலேட்டுமத்தின்சோபையெனறமெசப்பலாமே, (௫௫௰)

## திரிதோஷசோபை.

செப்பவேமெல்லியர்மேல்மிகுந்தகோபம்- செடம்விக்கமுபாகியு மாய்ச்சுரமுண்டாகும, அப்பவேஅதிசாரம்வயிற்றடைப்பு-ஆசனத்தில்மி கக்கடுப்பு அசனஞ்செல்லா, நப்பவேகால்கையுந்துண்டுகொணும்- நடக்க வேபெருமூச்சாய்க்கிறுகிறுக்கும், திப்பவேஉமிநீர்தான் மிகவேஊறும் திரிதோஷசோபைசாத்தியமாச்சொல்லே. (௫௯)

சொல்லவேபாண்டுகாமாலேசோபை· தொகுப்பாக மூன்றினிடச் சொரூபஞ்சொன்னேன், மல்லவேவடமொழியின்வகுப்பைப்பார்த்து- மகத்தானநாதாக்கள்வசனங்கேட்டு, வல்லவேமானிடர்கள்பிழைக்கவே ன்று-மனேன்மணிக்குச்சிவன்சொன்னவசனங்கன்னே, எல்லவேயூகியெ ன்றமுனியாம்யானே-எழுதினேனுயுருவேதத்தைத்தானே. (௬௦)

தானான ஆயுருவேதத்தையெல்லாம்-சாங்கமாய்ச்சோதித்துச்சாரந் தன்னே, தேனானதமிழினால்விரித்துச்சொன்னேன்-சிறுபிள்ளைபார்த்தா லுந்தெரியவென்று, ஏனானஏழுலக்ஷத்தொந்தப்போக்கே - எடுத்துமே சோதித்துஎழுகினேன்யான், ஊனையூகியென்றமுனியாம்யானும்உல கத்தோர்க்காகவென்றுஉரைசெய்தேனே. (௬௧)

சோபைரோகநிதானம்-முற்றிற்று,

---

## மகோதரரோகநிதானம்

செய்ததோர்மகோதரந்தான்முப்பத்திரண்டு - சிறப்பானபெயரை யெல்லாஞ்சொல்லக்கேளாய்,வைத்ததோர்வாதமகோதரத்திேனுடுவகை யானபித்தமகோதரஞ்சிலேட்டபம்,கொய்ததோர்வாதசிலேட்டுமத்தினே டு,கொடும்பித்தசிலேட்டமகோதரமுமாகும்,தொய்ததோர்தொந்தமகோ தரத்தினேடு-துரிதமாங்கமலமகோதரமுங்காணே. (௬௨)

காணவேவில்வமகோதரத்தினேடு - கடியதோர்வழுமைமகோதர முந்தானும், நாணவேநழுவைமகோதரநீராம்பல் நலத்தவூரும்பலொடு வெப்புப்பாவை,கோணவேகுலமுட்டிமகோதரந்தான்,கொடியகீழ்க்கவி சைமேற்கவிசையாகும்,பாணவேபக்கமாங்கவிசையோடு-பழுக்கவிகை பெருவயிறுமகோதரந்தானே (௬௩)

வயறானசூலமகோதரமும்வல்லே - மகோதரமும்விஷமகோதரத்தி னேடு,கொயறானதொந்தமொடுவழுவைவில்வம்-கொடிசானஉரமகோ தரமுமாகும், புயறானகூர்மமுடன்வெப்புபாவை- புரமகாமகோதரமும் குலேமுட்டாகும்,வெயறானபாண்டுவோடுதாமகோதரந்தான்-வீசுகின்ற மகோதரமுஞ்சலமுமாமே. (௬௪)

சலமகோதரமாங்சமகோதரமதாகும்- தரக்கானமகோதரந்தான்முப்பத்திரண்டு, உலமானஉற்பத்தியுரைக்கக்கேளாய் உமியினல்கல்விஞல்ரோமமுள்ளால், சுலமானசுனையிஞல்தோஷநீரால்- தும்பியேநீர்தேரை நீர்அலர்ந்தசோற்ருல், மலமானமங்கையர்கள்மருந்தினிட்டால்-மகோதரமாய்நோய்வந்துமருவுங்காலே. (ருருஎ)

காலானமேகந்தான்வயற்றிற்கட்டிக் - கடிசானசிய்சிதம்வயிற்றிற்றங்கில், தாலானசதையுதிரம்வயிறுதன்னில்-தயங்கிஞற்பாஷாணங்கரிக்கிற்சூதம், சேலானசெம்பினிடவூறல்தங்கில்-சிரணத்தில்மேலன்னஞ்செலுத்தலாலும, மாலானமங்கையர்கள்மருந்திஞலும் மகோதரங்கள்வந்துஉற்பத்தியாமே. (ருருஅ)

உற்பத்திஒருவருடனுண்மைபேசி உயர்சபையிற்பலவிதமாயுரைக்கின்ருேர்க்கும, அற்பத்திலனியாயஞ்செய்கின்ருேர்க்கும் அலபத்திலனியாயம் பண்ணினேர்க்கும்,பற்பததிதொருவரிடப் பிரயோசனத்தைப்-பறிக்கின்ருேர்கெடுக்கின்ருேர்பர்திதன்னில், அற்பலத்திலோரவஞ்சனேயேசெய்த துரோகிக்குமகோதரங்கள்தொடர்ச்சியாமே. (ருருகூ)

வாதமகோதரம்.

துடர்ச்சிபாங்காயமதுவெளுப்புமாகும்- சூக்ஷமாய்ச்சடலம்வற்றித்துர்ப்பலந்தாண், அடர்ச்சியாமன்னமது வேண்டாதாகும்அடிவயிற்றிலிரைச்சலுமா யுப்பசமாகும், புடர்ச்சியாய்ப் பிணமுகமாய்ச்சாயலாகும் புளிப்பானவசீரணத்திற்பசியுமுண்டாம், தடர்ச்சியாயடிவயிறு தன்னில்வீங்கும்-சஞ்சலிக்கும்வாதமகோதரந்தானென்னே. (ருசுய)

பித்தமகோதரம்.

என்றகண்ணிற்காசவன்னமுமாய்ததோன்றி- ஊற்றசுரமோகமாய்த்தாகமாகும்அன்றவதிசாரமுமாய்வயிறுபோகும் -அழற்றியொடுவியர்வைமேல்மன்சளிப்பு துன்றதோல்சாசரப்புத்தூட்டிபோலஞ்- சுயநரம்பிபலவிதமாய்வர்ன்னமாகும், பன்றசனஞ்செரியாமல்மலமுமபோகும் பயித்தியமகோதரத்தினிடப்பண்புதானே. (ருசுக)

சிலேட்பமகோதரம்.

பண்பானவுடல்நடுக்கியரூசியாகும்-படுக்கைதனிலுறமில்லாதுப்புறைக்கும், குண்பானகுளிர்காச்சல்சுவாசகாசங்-கோபமொடுவயிறுஉப்பசமுமாகும், வெண்பானபஞ்சுபோல்மிகவெளுக்கு- மிடுக்கானநீர்மலமுங்கடுகடுக்கும், திண்பானஇருமலொடுகோழைமிஞ்சும்- சிலேட்பமாமகோதரத்தின்செயலிதாமே. (ருசுஉ)

வாதசிலேட்பமகோதரம்.

செயலான்சடம்வெளுத்தாற்போற்கடுத்தல்- தினிவயிற்றுமடிப்புத்தான்மன்றயவீங்கல், நயலானநரம்புவயிற்றினிற்புடைத்தல் நலமானதுர்க்கந்தவாயுமீறல். அயலானவண்டங்கள்திடுக்கிட்டாற்போல்அடிவயற்றில்முழக்கமாமலம்விட து, பியலானபீசந்தாஸ்மிகுதிவீங்கும்- பிரிதவாதசிலேட்டுமகோதரந்தானே. (ருசுங)

பிரிவாகநாபிமாரள்வுமட்டும்-பிதுங்கலாய்வயிறுமெத்தப்புடைக்கிடைக்கும்,வரிவாகவாய்வதுதான்மிகத்தம்பிக்கும்-மலங்கட்டும்நீர்குறையும்மார்பில்நோவாம், எரிவாகஊம்பில்மூளையிலேதாக்கி-ஏற்றமாம்நயனவொளிமிகக்கிடைக்கும்,அரிவாகவங்கங்கள்கால்கைவீங்கும்-அதிர்பித்தசிலேட்டுமத்தின்மகோதரமாமே. (ருகூச)

## தொந்தமகோதரம்.

அதிராகமஞ்சணீராக்கையாகும்- அதட்டியாய்வாதத்தின்நாடியாகும்.பதிராகப்பஞ்சுபோரிற்கண்ணீருகுக்கும்பங்கமாயங்கமெல்லாம்பருக்கவிக்கும்,வதிராகவஞ்சகமாச்கால்கைவற்றும்-வற்றியே உடம்பெல்லாம்வயிறுவிம்மும், சுதிராகத்தலைசுற்றல்தியக்கமாகும்-தொந்தமாமகோதரத்தின்சூக்ஷம்பாரே. (கூகூரு)

சூட்சமாயிருமலோடுஇளைப்புமாகும் - சுருபந்தான்மஞ்சணிரமாகவிங்கும், மோட்சமாய்மேல்வயிறுகருக்கல்போல- மூரண்டியேமிகவீங்கும்அசனஞ்செல்லா, காட்சமாய்முகங்கருகிக்கண்டிப்பாகும்-கசடற்றுநரம்பெல்லாம்பசுமையாகும், திட்சமாய்ச்சலமலங்கள்சுருக்கிக்கொள்ளும்-செடம்வெளுக்குங்கல்மகோதரமாமென்னே. (ருகூகூ)

## வில்மகோதரம்.

ஆமென்றவருணனிடவில்லுபோல- அதட்டியேவளைந்தாற்போல்பிகுவுமுண்டாய், வேமென்றமேல்வயிறுதனில்வலித்து- மிடுக்காகஉப்பசமாய்விளையும்வீங்கி,வாமென்றமலசலமுஞ்சுருக்கிக்கொண்டு வாதையாய்க்கிடைகொடாமயக்கமாகித்,தாமென்றதண்ணீர்தான்மிகவும்வேண்டும் சஞ்சலிக்கும்வில்மகோதரந்தானென்னே. (ருகூள)

## வழுவைமகோதரம்.

தாமானதண்ணீரிற்சொரியைப்போலத்-தளதளத்து வயிறுதனில்வளர்ந்தயேறும், மாமானதரும்பால்த்திமிருண்டாகி மாமிசந்தான்சோறுபோல்வயிற்றிற்றுன்னி, பாமானதைநினைந்துபசியில்லாமல் படுக்கைக்குஇடமின்றிப்பாதவிக்கும், அரமானவன்னத்தைக்கட்டோட்டுது-ஆகாதவழுவையமகோதரந்தானுமே. (ருகூஅ)

## நழுவைமகோதரம்.

ஆமேதானடிவயிற்றிற்கட்டியாகும் - அழுத்தியேபார்த்தாக்கால்நழுப்போகும், வேமேதான்மேல்வயிற்றிற்வன்னிபோல- மிடுக்கானபெலங்குறைந்துமேல்மூச்சாகும், சாமேதான பிணம்போலநடக்கொட்டாதுதரிக்கொண்ணுத்தாபமுமாந்தளர்ச்சியாகும்.நாமேதானுவரண்டுநெஞ்சுபுண்ணும்-நழுவைமகோதரமென்றேநாட்டலாமே (கூகூ

## நீராம்பல்மகோதரம்.

நாட்டமாய்நாவரண்டுஇருமலுண்டாய்- நளிராகியடிவயிறுகதித்து விம்மிக் காட்டமாய்க்கடைக்கண்தான்மிகவெளுத்து-கதும்பலொடுபுறங்கால்கள்பதத்துவீங்கி, வாட்டமாய்மூச்சோடுமயக்கமாகி- மலந்தானுமிகத்தளர்ந்துவடிவபேரும், நீட்டமாய்க்கால்கையுமுடக்கொணுது-நீராம்பல்மகோதரத்தினேர்மைதானே (௬எ0)

## ஊறும்பல்மகோதரம்.

நேர்மையாய்மேல்வயிறுபொருமிக்கொண்டு-நெடிதுகதங்கேடியே மேனிசுண்ணும், வார்மையாய்மனத்துயரமிகுந்திருக்கும்- மயக்கமொடு தியக்கமாய்மாழ்கித்துஞ்சும், கார்மையாய்முகம்வியர்த்துவெளுத்துநொந்துகனகனத்துஉடம்பெல்லாமகடிதுவற்றி, சீர்மையாய்ச்சிரசதனிற்பாரங்காணும் சினத்தஊறும்பல்மகோதரமுமாமே, (௬எக)

## வெப்புப்பாவைமகோதரம்.

சினத்தவுப்பங்காற்றுமேமிகவுமுண்டாய்த்-தேக்கியே உடலதிராதுமிகவும்பற்றி, கனத்தகைப்புப்பிளிப்புமிகத்தெகிட்டலாகும்-கல்பேங்லச்சரீரமெங்குங்கனத்துக்காணும், வினத்தவயிர்தளிற்புண்டுவெதும்பல்செய்யும் - விலாப்பக்கந்தனில்வந்துகட்டிச்சேரும், நனத்தவுப்புநாவிலேமிகுதியாகும் நலியுவெப்புப்பாவைமகோதமாய்நாட்டே (௬எஉ)

## குலமுட்டிமகோதரம்.

நாட்டவேகுழவிபோலகுலையிற்சேர்ந்து- நலமாசுக்கிழ்மூடிப்பக்கம்வந்து, ஆட்டவேஅன்னத்தைபருந்தொட்டாமல்-அபானத்தை இறுக்கியேமலம்விடாது, தேட்டவேதேகமெங்குங்கருகிவற்றி- சிரசோடுமுகங்கால்கைவீக்கமுண்டாம். கூட்டவேமலமூச்சுக்குரலுங்கம்மும் - குலமுட்டிமகோதரத்தைக்கூறிடாயே. (௬எங)

## கீழ்க்கவிசைமகோதரம்.

கூறிடவேஅடிவயிற்றில்வில்லைபோலக் குறிப்பாகக்கட்டிகட்டிவற்றையிப்பும், ஈறிடவேமேல்வயிற்றில்வில்லுபோல- இசிவாகிச்சந்தெங்குங்குடைச்சலாகும், பீறிடவேமனசுநொந்துபெருமூச்சாகும்- பிதற்றலாய்மனதில்வந்தபடியேபேசும், மூறிடதேமலசலமுஞ்சுருக்கிக்கொள்ளும்மருவுகீழ்க்கவிசைமகோதரமுமாமே. (௬எச)

## மேற்கவிசைமகோதரம்.

விசையகனமேல்வயிற்றில்வில்லைபோல விளையுமேஊனெல்லாந்திரட்டிக்கொண்டு, நசையானநரம்புதோல்சுருங்கிக்காணும்- கூதணத்திலேபடபடப்புமூச்சுமாகும், குசையானமாரடைப்புக்குற்றலுண்டாம்-குமட்டியேவாய்நீருங்குதிகொண்டோடும், அசையானஅன்னந்தான்வேண்டாதாகும்- அருக்குமேமேற்கவிசைமகோதரந்தானே. (௬எ௫)

### பக்கக்கவிசைமகோதரம்

கவிசைபோல்பக்கத்திற்பற்றிக்கொண்டு- கனமாகவயிறுகல்லழுந்தலாகும், அவிசையாய்அடிவயற்றிற்குமரல்காணும்- அங்கதாகத்தோடெரிவுண்டாகும், புவிசைபோற்பொருமிவயிறுப்பிக்கொள்ளும்- புளித்தேக்காய்நெஞ்சிலேயெரிச்சலுண்டாம், பவிசையாய்மலசலமுஞ்சுருக்கமாகும்-பக்கமகோதரத்தினிடப்பரிசுதானே. (௫௭௬)

### பழுக்கவிசைமகோதரம்

பரிசாகப்பழுஎலும்பில்முளையைப்போலப்-பற்றியேவயிறெல்லாங்கனத்துவிம்மும், உரிசாகஉப்பசமுமேல்மூச்சாகும்-உழலையொடுதாபமுமாயுறக்கமாகும், அரிசாகஅன்னந்தானிறங்கொட்டாது அடிக்கடிக்குவாயுவுத்தானதட்டியாகும், செரிசாகவீங்கியேவற்றியூதும்-திணருமேபழுக்கவிசைமகோதரந்தானே. (௫௭௭)

### பெருவயிற்றுமகோதரம்.

திணருமேகாயந்தான்மிகவும்வற்றிச்-சீரணமாய்மந்தமுமாமுதரந்தானும், உணருமேகல்லழுத்தமாகவீங்கி- உறுதியாய்நரம்புமேபுடைத்துக்காணும், மணருமேமலத்தையேமிகப்பறிக்கும்-வாடாமலூதியேமயக்கிவிக்கும், இணருமேதூறெடுக்கஊறுமாப்போல்- கெட்டிக்கும்பெருவயிற்றுமகோதரந்தானே. (௫௭௮)

### சூலமகோதரம்

மகோதரம்போற்சூலானமங்கையர்க்கு-மாவருத்தமுண்டாகிமயக்கமாகும், அகோதரமாயங்கமெல்லாமழற்சியாகும் - அன்னந்தான்செல்லாதுதண்ணீர்வேண்டும், சகோதரமாங்கால்கையுஞ்சந்துவீங்கும்-தழலானகாச்சலொடுஅருசியாகும், உகோதரமாயுடம்பெல்லாமுளைச்சலாகும்-உற்றசூல்மகோதரத்திலுண்மைதானே. (௫௭௯)

### வல்லிமகோதரம்.

உண்மையாந்தொப்ளுக்குள்நடுமையத்தில்உள்ளங்கையகலந்தான்கட்டியாகத், தண்மையாய்த்தமர்கொண்டுஅடைத்தாற்போலச் - சாங்கமாய்க்கருங்கல்லாய்த்தானிருக்கும், பண்மையாயசனமதுமுண்டாய்ச்செல்லாப்-பருகிடுமேசுடுதண்ணீர்தன்மேலிச்சை, வெண்மையாய்க்கால்கையுமசதியாகும்-மிடுக்கானவல்லிமகோதரமுமாமே. (௫௮௰)

### விஷமகோதரம்.

மிடுக்காகமேனியொடுபொத்திபீசம்- வீங்கியேவெளுப்பாகமெலிவுமாகும், அடுக்காகச்சிறுத்துமேபருத்துக்காணும் - ஆணமையாய்பீசமதுதளர்ந்திருக்கும், துடுக்காகமனிதருடன்வார்த்தைபேசும்- துக்கமா

ய்மனக்கிலேசமெப்போதுந்தான், நடுக்காகஉடம்பெங்குந்திமிருமாகும் நலியும்விஷமகோதாந்தான்நாடிப்பாரே. (௫௮௧)

பாண்டுமகோதரம்.

நாடிப்பார்வாடியே ஊதிக்கொள்ளும்- நன்னுடிச்செம்மையிலுரட்க்கொட்டாது, வாடிப்பார்வகுத்தடியும்புறங்கால்வீங்கும்- வன்னமுகம் வேறுபட்டுமெயிலுறக்கம், தேடிப்பாரோமமெங்குஞ்செம்மையாகும்செயலானரத்தமில்லாதெலும்புமாகும், கூடிப்பார்மூச்சோடுகுளுப்பையாகும்-குணக்கேடாம்பாண்டுமகோதரத்தின்கூறே. (௫௮௨)

சோபைமகோதரம்.

கூறுனஅடிவயிறுகுழைந்துஉப்பிக் கூப்பிட்டுமேல்வயிற்றில்பிகுவுமாகும், தேறுனவண்டமொடுகால்கள்கைகள்- சிதைந்துமெத்தவீங்கியேசெழும்பலாகும், வீறுனமேல்மூச்சுஇருமல்தாகம் விக்கியேசரீரமெல்லாங்குளிர்ச்சியாகும, தூறுனமூத்ரமலஞ்சுருங்கிக்காணும்-சோபைமகோதரமென்றுசெப்பலாமே. (௫௮௩)

காமாலைமகோதரம்.

செப்பவேநடுக்கலொடுகுளிர்ச்சியாகும்சிறியதோர்மூக்குமுகம்மார்புவேர்க்கும், உப்பவேஉடம்புலரும்புறங்கால்வீங்கும்- உளைந்துமேஅடிவயிறுமிகச்சுருங்கும், துப்பவேகோழையொடுசுரமுமுண்டாம் சுகமில்லாநித்திரைதான்றலைவலிக்கும் தப்பவேமிகத்தாகஞ்சலிக்குஞ்சிந்தைதளருங்காமாலைமகோதரந்தானுமே. (௫௮௪)

குன்மமகோதரம்.

தானுகக்குலைதனையேமிகவலிக்கும்- சாப்பாடுசெரியாமல்வயிறுகுற்றும், வேனுகமேனுக்கிச்சத்தியாகும்-மிடுக்கானவசிரணமாய்ப்பேதிகும், பானுகப்பக்கம்விலாஇடுப்புகுக்ஷி - பணைத்துமேவீங்கியேகல்லுபோலாம், கோனுகக்கோமயம்போனீரிறங்கும்- குன்மமகோதரத்தினிடக்குணங்கள்தானே. (௫௮௫)

உதரமகோதரம்.

குணமாகவாண்டுகண்சிவந்துக்கொள்ளும்- கொடிதானவாயுவதுதிரட்சியாகும், பணமாகப்பகர்ந்நீர்போதவாங்கும்- பசியன்றிக்கனத்திருக்கும்மலம்விடாது, வணமாகவயிறெல்லாம்மெத்தஊதி- மார்பளவுங்கழுத்தளவுமறையவீங்கும், மணமாகவயிறுதான்மிகவேவீறும்- மகாஉதாமகோதாத்தின்வளப்பந்தானே. (௫௮௬)

கூர்மமகோதரம்.

வளப்பந்தான்வாண்டுமேகண்சிவந்து-வயிறுவிம்பிவாயுவுந்தான்திரட்சியாகும்-இளப்பந்தானிருகண்ணுஞ்சுருங்கிக்கொள்ளும்- இருமலோடிளைப்புநீர்போதவாங்கும் அளப்பந்தானுமைபோல் வயிற்றிற்கட்டி

அசனந்தான்செல்லாதுபெலனுங்குன்னும், குளப்பந்தானிளைச்சலொ டுகுமுறலாகுங் கூர்மமாமகோதரத்தின்குறிப்பிதாமே. (ருஅஎ)

பீலிகை மகோதரம்.

குறிப்பாகப்பரிசத்திற்கூர்மையாகும் -குணமாகமலமோடு சலமு முண்டாம், தெறிப்பாகவாயுவதுகீழோநோக்கு-செடமெல்லாம் வீங்கா மற் கொஞ்சம்வீங்கும், முறிப்பாகஅசனந்தான் மிகவேவேண்டும்-மூ த்திரந்தான் மிகுதியாம்மூர்ச்சையில்லை. பிறிப்பாகக்கண்களிலோத்தமா கும்-பீலிகைமகோதரமாய்ப்பேசலாமே- (ருஅஅ)

சுரமகோதரம்.

பேசவேகாலோடுவயிறுபோற்றிப்-பெருங்கணைக்காற்புறங்காலு மெத்தவீங்கி, வாசவேமார்பிடரிநரம்புதோன்றி- வயிறுதான்மிகப்பொ ருமிமெத்தவீங்கும், கூசவேசுரமோடுஅசதியாகும்- கொடியதோர்தாப முண்டாமெரிச்சலாகும், வீசவேமிகவேண்டுமெரிச்சல்தன்னால் வீங்கு ல்கண்சுரமகோதரம்விளம்பே. (ருஅகூ)

சலமகோதரம்.

விளம்பவேயங்கமெல்லாஞ்சலந்தான்கோர்க்கும்-மேனியுமோமஞ்ச ணிறம்மாகும்பாரு, உளமபவேவுப்பசமுமுழலையாகும்-உயர்இன்றலிங் கந் தான்தளர்ந்துபோகும் முளம்பவேமுதுகோடு வயிறுவீங்கும் மூல மாந்தாதுக்கள் திகைத்தேநிற்கும், புளம்பவேபொறியைந்துங்கலங்கிப் போகும்-பொருமுமெத்தசலமகோதரத்தின்போக்கே. (ருகூ0)

மாமிசமகோதரம்.

போக்கானமாமிசந்தான் வளர்ந்துமீறிப்-பொருமியேஅடிவயிற்றி கல்லைப்போலத், தாக்கானசடந்தானுமுலர்ந்துவற்றித்- தவிக்குமேயடி க்கடிதான்கண்ணீர்தேடி, வாக்கானமதுரமொழி குளறிப்பேசி-வாய்வுத் தானடிக்கடிக்குமேலேநோக்கும், நீக்கானமலசலத்தில்மாம்சங்காணும்- நேரானமாம்சமகோதரத்தினேரே, (ருகூக)

சாத்தியம்.

தேரானசாத்தியத்தைச்சொல்லக்கேளாய் - சேர்ப்பானவாதமகோ தரமும்பித்தம், வாரானவமுவையொடுகமுவைநீராமை-மகத்தானஊற் மைவெப்புப்பாவை,வேருனமேற்கவிசைசூலமகோதரமும்-விஷமகோ தரம்வல்லைப்பாண்டுவாகும, தூரானசோபைமகோதரங்காமலை- சூடிஉ தாமகோதரமாங்கூர்மந்தானே. (ருகூஉ)

அசாத்தியம்.

கூர்மமொடுபதினுறுஞ் சாத்தியமாகும்-குணமில்லாவசாத்தியத்தி யத்தைக்கூறக்கேளாய் திர்மமொடுசிலேட்டுமாம்வாதசிலேட்பம்-சீறிய பித்தசிலேட்பந்தரக்தமாகும், கார்மமொடுகல்மகோதரங்குல்மூட்டி-க

டியவில்மகோதரங்கிழக்கவிசையாகுர், பார்பக்கக்கவிசையோடு பழுக்க விசையாகும்-பாரமாம்பெருவயிறுதுன்மந்தானே. (ருகூங)

குன்மமோடுதாமகோதரப்பீலிகையும்- கொடியசலமகோதரந்தான் மாம்சமாகும்- பன்மமொடுபதினாறுசாத்யமாகும்- பாடினதோர்மூப்ப த்திரண்டுமாச்சு, வன்மமொடுவடமொழியினூல்சோதித்து-மகேசுரன் தான்சொன்னபடி உமையாள்கேட்டு, தன்மமொடுசகலருந்தானறியவெ ன்று-சாற்றினேன்பூகியென்றமுநியான்றானே. (ருகூச)

மகோதரரோகநிதானம்-முற்றிற்று.

விஷபாகரோகநிதானம்.

தானுமேவிஷபாகமெட்டதாகும்- சமரசமாய்ப்பேணாத்தான்காற் றக்கேளாய்,வானுமேவாகவிஷபாகமோடு- மார்க்கமாம்பித்தவிஷபாகமா கும், தேனுமேசேட்பவிஷபாகமோடு- திரிதோஷவிஷபாகஞ்சேர்ந்து நின்ற, ஊனுமேஅக்கிவிஷபாகமாகும்-அடங்காதஎரிவுவிஷபாகந்தானு ம்,கானுமேகத்தவிஷபாகஞ்சன்னி-கடியவிஷபாகந்தானெட்டுமாச்சே.()

ஆச்சென்றமீன்முள்ளுநெல்விவானு- ஊரந்தலாலாகாயத்தேற்றநீர் தான், போச்சென்றகாடியால்புணர்ச்சிதன்னால்-புழுக்களால்பூர்வத்திற் சமைபதார்த்தம், தீச்சென்றகருகலாற்செம்பினாறல் - சேர்ந்தத்திற்ச மைத்தவன்னங்கறிபோசித்தல்,வாச்சென்றஅழுகலாய்வெதும்லானமா மிசங்கள்புசித்தலால்மருவுந்தானே. (ருகூசு)

மருவவேநல்மடந்தைகர்ப்பழித்தல்வழக்கோரம்வஞ்சனைகள்வாது தர்க்கம், தருவவேஉடன்படிக்கைதப்பினோர்கள் தந்தைதாய்குருவின் மொழிதனைமறந்தோர், அருவவேஅன்னமிடையூறுசெய்தோர்-ஆஸ்தா னந்தன்னிற்போயாண்மைசொன்னோர், பருவவேபலபேருக்குபகாரத் தைப்-பறிக்கின்றோர்விஷபாகம்படுபாடாமே. (ருகூஎ)

வாதவிஷபாகம்.

படுகுமேஒருபக்கம்வீங்கிவற்றும் பக்கமாமேனியெங்கும்வாண்டு காணும், கடுகுமேகண்தூங்குஞ்சடம்வெளுக்கும் கனத்துமேதலைதா னுந்துயர்மிகுக்கும், மிடுகுமேமிகவீங்கும்பொசிக்கொட்டாது-மேனியு மோமிடுக்கெல்லாந்தளர்ச்சியாகும், விடுகுமேமூத்திரச்சலம்வற்றும்மே னிகண்ணும்வாதவிஷபாகமாமே- (ருகூஅ)

பித்தவிஷபாகம்

பாகமயுடம்பெங்குந்தினவுண்டாகும் - பாரமாந்தாபமொடுசுரமு முண்டாம், வேகமாயுடம்பெங்கும வெடிப்புமாகும்- வெடிநெருப்புப்ப ட்டாற்போற்பொரியும்பாரு ஊகமாயுடம்புவலிசவக்கேடாகும்-உறுதி

த்திரைவாராமல்மேல்மூச்சாகும், காகமாய்மயிலுறக்கங்கடியசித்தம்-கடும்பித்விஷபாகங்கணக்குத்தானே. (௫௯௯)

## சிலேட்பவிஷபாகம்.

தானுமேதேகமெங்குந்தினவுண்டாகிச் - சற்றிருமலாய்க்காய்மிகவெளுக்கும்;கோனுமேகோழையொடுமூச்சுமாகும்கொடியதாபச்சுரமெய்க்குளிருண்டாகும். வேனுமேமிகவிங்கிவெடிப்புண்டாகும்-மேனியெல்லாம்வெவ்வனல்போலழன்றுகாணும், தேனுமேபோலவேசிறுநீராகும்சேட்பவிஷபாகமென்றேசெப்பினரே. (௬௱)

## திரிதோஷவிஷபாகம்

செப்பவேசந்நியொடுமூர்ச்சைதாகம்- சிறுநீர்தானடிக்கடிக்குமேற்சுவாசம், வெப்பவேவிக்கல்நித்திரைமயக்கம்-வீக்கமொடுமேல்வெளுப்புமேனிகண்ணல், அப்பவேஅருசியொடுஅதிசாரந்தான்- அடிக்கடிக்குப்பிரமைபோலவுண்டாதல், திப்பவேவாய்நீருமிகவேஊறல் - திரிதோஷவிஷபாகஞ்செப்பினோமே. (௬௱௧)

## அக்கினிவிஷபாகம்.

ஓமென்றவாதபித்தங்கள்மிஞ்சல் - உறுதியாங்கோழையொடுசத்திமூர்ச்சை, வேமென்றவாய்தனிலேநீர்தான்வீழ்தல் - வீக்கமாய்க்கிடைகொடாதேபிரட்டல், வாமென்றஉடம்புவற்றிவயிறுஊதல்- மலசலமுஞ்சிக்கிசிக்கிவந்துவிழ்தல், பாமென்றபக்கத்தில்வலியுண்டாதல்-பாமமாமக்நிவிஷபாகந்தானே. (௬௱௨)

## எரிவுவிஷபாகம்.

பாரமாய்க்குறித்தவிடமிரத்தம்விழ்தல்-பழுப்பானகோழையொடுசுவாசங்காணல், மாறுமாய்மார்புகுறுக்கிட்டடைத்தல்-மகாவிரணங்கண்டுமேமாம்சந்தோற்றும்-கோரமாய்ச்சட்டதிலேகுற்றலுண்டாம் குணக்கேடாங்குன்மம்போற்குடல்பிரட்டும், ஆரமாயதிசாரமவீக்கமாகும்-அழலுமேயெரிவுவிஷபாகந்தானே. (௬௱௩)

## கத்தவிஷபாகம்.

எரிவுண்டாய்ச்சுரமோடுமயக்கஞ்சோம்பல்- எழிலுடம்புதான்கனத்தல்மூர்ச்சையாதல், தரிவுண்டாய்த்தலைவலியுஞ்செட்டுமந்தான்- தாகமேமிகுதியுமாய்ப்பலமாம்வார்த்தை, தெரிவுண்டாய்த்தேகத்திற்குளிருண்டாதல்சீதமாம்மயிறுவிட்டுக்கடுப்புகாணல், சரிவுண்டாய்ச்சவம்போலநாற்றமாகும்-தனித்ததோர்கத்தவிஷபாகந்தானே. (௬௱௪)

## சன்னிவிஷபாகம்.

சந்தமாய்ச்சேறுபோல்வயிறுபோகும்- கனவிரணங்கனிலரத்தமிகவேகாணும் சுந்தமாய்ச்சுவாசமொடுகாமயக்கம் ;குட்டிவந்தகொள்ளைவேமேனிநாறும், அந்தமாயந்தமுகவீக்கங்காணும் - அதிகமாய்வியர்

வையொடுஅசதியாகும், பித்தமாய்மயக்கமொடுசிதற்றலாகும் - பெருகு சன்னிவிஷபாகம்பேசலாமே. (௬௱௫)

சாத்தியம் அசாத்யம்.

பேசவேசாத்தியமாம்விஷபாகந்தான் - பேரானவாதபித்தசேட்பமாகும், ஏசவேயெரிவுவிஷபாகத்தோடு - இதுநாலுஞ்சாத்தியமாமசாத்தியந்தான், தேசவேதிரிதோஷசன்னிவாதம்- திகழுற்றவிஷபாகமக்கிதானும், நாசவேநாலுந்தானசாத்யமாகும் - நாதாக்கள்சொன்னபடிநாட்டினோமே (௬௱௬)

விஷபாகரோகநிதானம்-முற்றிற்று.

---

## கிராணிரோகநிதானம்

நாட்டவேகிராணிதானிருபத்தைந்தாம்நலமாகுமுற்பத்திபெயரைக்கேளாய், வாட்டவேவாதமாம்பித்தகிராணி - வகையானசேட்பமொடு தொந்தக்கிராணி, ஊட்டவேஊஷ்ணவாயுக்கிராணியோடு-உயர்கின்ற அற்றறுவாயுவுக்கிராணி, மூட்டவே மூலவாய்வுக்கிராணிமுதிர்குன்மக்கிராணிகெர்ப்பக்கிராணியாமே (௬௱௭)

ஆமெட்டுக்கிராணியொடு சங்கிரகக்கிராணி-அசதியாம்வாதாதிசாரமாகும், போம்பித்தவதிசாரஞ் சேட்பாதிசாரம் புணர்ச்சியாந்திரிதோஷவதிசாரந்தான், தாமேசுராதிசாரம்சன்னியாதிசாரம் - தர்க்கானதோஷாதிசாரமாகும், வேமேவியத்தூமமசிரணத்தூமம் விற்பட்டமோடுபிரதசேடந்தானே. (௬௱௮)

தமனென்றவாதமாம்விகூழிபாகும் - தனிப்பித்தவிகூழியொடுசேட்பமாகும், எமனென்றபேதியதுஇருபத்தைந்து எழிலானஉற்பத்தியம்பக்கேளாய்,மானென்றவயிற்றின்மந்தமிருக்கும்போது-மாப்பண்டமதுரங்கள்மங்கைகோஷ்டி, ஊனென்றமாமிசங்கள்வேகாப்பண்டம்-உண்டதாற்கிராணிவந்துற்பவிக்குங்கண்டாய். (௬௱௯)

கண்டாயோநார்செய்தபாவத்தாலும்-கரோமாஞ்சிவனடியார்தங்கள்வேள்வி, திண்டாயோசிவனோடுசுப்பிரமண்ணியர்- தேவியொடுமால்சாத்தன்சிங்கவாகி, விண்டாயோஇவர்பூசைவிடுத்தலாலும் மித்துருவாம்பந்துஜனஉறவின்பேணை, பண்டாயோபசிக்கவைத்துப்பொசிக்கையாலும்-பருகுமேகிராணியென்றபாழுநோயே. (௬௱௰)

வாதக்கிராணி.

நோவாகும்நடுவயிறுஉப்பசமாகும்-நுட்பமாம்பசியெடுக்குமுடம்புலர்த்தும்,தீவாகுஞ்சீதமாய்வயிறுபோகும் சிதறுமேமலந்தானும்வாய்வுதன்னால்,காவாகுங்கட்டியாய்வயிற்றிற்காணும்- காற்றுமேமிகக்கழியுங்க

றுப்புமாகும், பாவாகும்பழவெல்லம்போலேவிழும்- படுவாதக்கிராணி யிடப்பண்பிதாமே. (சூ௱௰௧)

பித்தக்கிராணி.

பண்பாகநடுவயிறுநோக்காடாகும்-பலிநாளுவிதமாகவயிறுபோகும், மண்பாகவயிற்கழியுமுறக்கமுண்டாம்-மாசற்றநரம்பெல்லாந்தளர்ந்துதொங்கும், உண்பாகவூனெல்லாங்கழிந்துபோகும் உள்கொடுக்கும்மருந்தழியுமுணர்ச்சிகேடாம், பெண்பாகப்பெண்தலைவிட்டேந்துபோகும் பித்தத்தின்கிராணியென்ப்பேசலாமே. (சூ௱௰௨)

சேட்பகிராணி.

பேசியேயழல்போலநாற்றமாகும்-பெருகவேவெளுப்பாகமலந்தான்போகும், காசியேகைகாலுந்தளர்ச்சிகேடாம்- கள்ளமாய்க்காய்ச்சல்வருங்கண்சிவக்கும், நாசியேநாவோடுவரட்சிகாணும்- நயந்துமேபாளையாய்க்குடல்போல்விழும், ஆசியேயறிவில்லாதசதியாகும்- அதட்டியேயிக்கல்வருஞ்சேட்பந்தானே. (சூ௱௰௩)

தொந்தகிராணி

வருகுமேதாபமுடன்காச்சல்தானும் மகத்தானவேலைபோல்வயிறிரைச்சல், தருகுமேதலைவலியுங்குளிர்நடுக்கல்- தனிப்பால்போல்மிகக்கழியுமடிக்கடிக்கு, பருக்குமேபகழியெனப்பாயும்வாய்வு பரிதாபமுழலையொடெரிவுமாகும், கருகுமேகால்கையும்புறங்கால்வீங்கும்-கசிதொந்தக்கிராணியெனக்கண்டுகொள்ளே- (சூ௱௰௪)

ஊஷ்ணவாயுக்கிராணி.

கண்டுகொள்ளுமலந்தனையேயிறுக்கிக்கொண்டு- சனமாகவயிறிரைந்துஉப்பசமதாகும், பண்டுகொண்டஅசனந்தான்செரித்திடாது- பாங்கானபுளித்தேக்கும்வாய்நீரூறும், விண்டுகொண்டகால்கையுமசதியாகும்-மேனியுமோமிகக்கருகிமெலிவுமாகும், உண்டுகொண்டநாள்மூன்றிற்பேதியாகும்-உணரூஷ்ணவாயுவென்றேயுரைக்கலாமே. (சூ௱௰௫)

அர்த்தராவாய்வுக்கிராணி.

உரைக்கவேபத்தியந்தான்கொண்டபோது-உறுதியாய்மலந்தள்ளிப்புளித்தேக்கிட்டுத்,தரைக்கவேசத்தியொடுஅருசியாகும்-தாகமுண்டாய்த்தானிருக்குந்தளர்ச்சியாகும், விரைக்கவேவிலாப்பக்கமிசிவமாகும் மேனியெல்லாம்வெளுப்பாகும்விக்கலுண்டாம், அரைக்கவேயசனந்தான்செரித்திடாது- அர்த்தராவாயுவிடவாண்மைதானே. (சூ௱௰௬)

மூலவாய்வுக்கிராணி.

ஆண்மையாய்வாய்வுதனில்மிகப்பிரண்டும் - அடிவயிற்றைப்பிரமியேமலம்வாண்டு, தாண்மையாய்சுடவற்றியந்திப்புண்டாய்ச் சதமாத

ய்ப் தணியாத இரைச்சலாகும், மேண்மையாயடித்துரையிற்குற்றமுண்டாம்-செட்டியாஞ்சரீரமதுகிழமுமாகும், மூண்மையாங்குதந்கண்ணின்முளைப்போல்தோணு மூலவாயுக்கிராணியெனமொழியலாமே (௬௱௰௭)

குன்மக்கிராணி.

மொழியமேசலைகாணுங்கனத்திருக்கும்- மொழிவுறக்கமுண்டாகும்பீளைசாரும் கழியவேவயிறெல்லாமுலாவிக்குற்றும்- சமரசமாய்த்தான்வியர்க்குந்தலைநடுக்கும், உழியவேஉடம்பெரிப்புமுழலையாகும்-உப்பியேவயிற்றுவுமிறைஞ்சிப்போகும், வழியவேவயிற்றிலேரூபுறத்திற்றூனா-வளைச்சுமொகைத்தோடுகுன்மக்கிராணியாமே. (௬௱௰௮)

கெர்ப்பக்கிராணி

வளைச்சுமேவயிற்கழியுங்கடுப்புமுண்டாம் - வாடியேகால்கையும்வெச்சென்றாகும், களைச்சுமேகண்தானுமஞ்சளாகும்-கழியுமேபலவிதமாய்க்கடினதாகும், உளைச்சுமேகெர்ப்பந்தானுயருங்காலம்- உறுவன்னம்வாந்தியாயுழலையாகும், முளைச்சுமேகெர்ப்பந்தான்கீழ்வீழில்முடுகாதுகெர்ப்பமாங்கிராணிதானே. (௬௱௰௯)

ஓட்டுக்கிராணி.

தானனபடுக்கையேஇதமாய்க்காணும்- வலிப்புமேயிளைப்பாகத்தானிருக்கும், வானனவயிறுவலிமெத்தவாகும்மார்போடுவிலாமுதுகுவலியுண்டாகும், ஓனனதட்டிடையாய்வயிறுபோகும்- ஒருமித்துப்போகாமல்மனமுஞ்சிக்கும், தோனனதொப்புள்தனில்வளையம்போலச்- சுட்டிடவேசுருக்கமாமொட்டுக்கிராணி. (௬௱௨௰)

சங்கிரகக்கிராணி.

சுருக்கமாய்த்தாமதுபொருமலாகிச்-சோறுசெரியாக்கழிச்சல்பானச்சூடாய், குருக்கமாய்க்குதந்தனிலேநனைத்தலாகிக் - குருவியர்வைச்சுரமோடுஅனலாய்க்காணும்,மருக்கமாய்வாந்தியாய்மனமறுக்கும் மார்பிலேகோழைகட்டுமயக்கமாகும், சருக்கமாய்க்கண்கள்மொண்டுங்கழற்சியாகும்-சங்கிரகக்கிராணியென்றேசாற்றலாமே. (௬௱௨௰௧)

வாதாதிசாரம்.

சாற்றவேவயிறுதனைப்பொருமிநொந்து தனிச்சூலைபோலவேவாய்வுதோன்றும், ஆற்றவேசீரிறங்கா அசனந்தானும்-அரைவாகிசீரணமாய்ப்பேதியாகும், மாற்றவேமஞ்சளித்துக்கருக்கும்பேதி-மகத்தானதுர்க்கந்தம்வெளுப்புமாகும், நீற்றவேநெஞ்சுதனிற்புளித்தேக்காகும்- நேரானவாதாதிசாரமாமே. (௬௱௨௰௨)

பித்தாதிசாரம்.

ஆமென்றமலந்தானுமஞ்சளித்து-அதிகமாய்வாண்டுமே நுரைதான்பாயும், வாமென்றவாய்வதுதான் மிகவுண்டாகும் - வற்றியேஉடம்

பெங்குங்கால்கைவீங்கும், காமென்றகலங்காச்சல்போலக்காயும்- கருதியேஉடம்பெங்கும்வெண்மையாகும் தாமென்றதலைவலித்துவாந்தியாகும்சமாசமாய்பித்தாதிசாரமாமே. (௯௨௩)

## சேட்பாதிசாரம்.

சுரமாய்நாற்றந்தான்மிகவுண்டாகித் - தவளம்போலேவெளுத்துநுரையுமாகி, வாரமாய்வயிர்வலித்துப்பேதியாகும்- மாமிசந்தான்சத்துசுத்தாய்விடுக்கும், ஆரமாயருசியொடுஇருமல்சுவாசம் அழுந்திமயிர்க்கூச்செறிந்தாசனங்கடுத்தல், தீரமாய்த்தேகமெங்குந்தினவுண்டாகும் - சேட்பாதிசாரமென்றேசெப்பலாமே. (௯௨௪)

## திரிதோஷஅதிசாரம்.

செப்பவேஉள்ளெரிவாய்ப்புறங்குளிர்ச்சி செழுமைவிக்கல்வாந்தியோடிருமல்சுவாசம், துப்பவேவயிறிரைந்துபொருமலாகிச்சுருட்டியேவயிறதுவும்வலித்துக்காணும், இப்பவேஇரத்தசீதக்கழிச்சல் - எழிலாணித்திரையுமுடல்கடுக்கும், உப்பவேஉடற்குற்று உணச்சிஇன்மை-உறுகுதிரிதோஷஅதிசாரமாமே. (௯௨௫)

## சுராதிசாரம்.

அதிசாரமூர்ச்சையொடுபிரலாபங்கான் அடித்துடைபுமசந்துமிகக்கடுப்புண்டாகும், சுதிசாரக்காச்சலொடுசத்திதாகம்-கடுப்புண்டாஞ்சரீரமெங்குங்காந்தலாகும், ஓதிசாரஞ்சிறுநீர்கன்னொடுகழிச்சல் - ஊஷ்ணமாய்ஓயாதஇருமலாகும், அதிசாரம்பலவர்ன்னமாகும்பேதி சூட்சமாஞ்சுராதியெனும்அதிசாரமாமே. (௯௨௬)

## சன்னிபாதாதிசாரம்.

சுரமாகிஉடம்பெல்லாமிகவேகாயும்- சுவாசமாயிருமலொடுவிக்கலாகும், அரமாகிநாவரண்டுஅழறசியாகி- அதிசாரமாய்க்கழிந்துஆலோபிக்கும், மரமாகிஉடம்பெல்லாந்திமிநண்டாகும் - வயிறுவலிஅடிக்கடிக்குமயக்கமாகும், உரமாகிஉடம்பெங்குங்குளுமையாகும்-உறுதிசன்னிவாதாதிசாரமாமே. (௯௨௭)

## தோஷாதிசாரம்.

உறுகின்றநீருந்திவழிதான்புக்கில்- உண்ணீர்தாரைப்புபுரைதனில் இழிந்து அறுகின்றவன்நரம்பைஅழுகப்பண்ணி- அபானவாய்வொடுகூடிமலப்பைக்குள்ளே, புறுகின்றதான்கிருத்துமூலாக்கினிக்கீழ்-பொருந்தியதோரசனத்தைச்செரிக்கொட்டாது, மறுகின்றவயிற்றிரைந்து கழிச்சலாகும்-மகாநாற்றமுண்டாந்தோஷாதிசாரம். (௯௨௮)

## விதூமஅசீரணம்.

உண்டதோரன்னமெல்லாம்வாந்தியாகும்- உறுதியாயமுகலாய்ப்புளித்தேக்காகும், வண்டதோர்வயிறுப்பும்பேதியாகும்-மகத்தானஇரைச்சலொடுபுளிப்புப்பேதி, முண்டதோர்புகைக்கறுக்குமுடலம்வாடும்மு

திர்மயக்காம்புத்தியதுமுன்பின்றேனு, விண்டதோர்மிகவாதைகிடைப்பிரட்டும்-மிகத்தண்ணீர்தவிப்பெய்தும்விதூமஅசீரணமாமே (௬௨௯)

தூமஅசீரணம்.

எய்தியதோர்பதார்த்தமதுவேதுந்தக்கா-தெடுக்குமேயடிக்கடிக்குவாந்திதானும், பெய்தியதோர்புளித்தேக்காம்வாயெரிக்கும்- பேரானவுதடோடுபிரட்டும்நாக்கு, கைதியதோர்கால்கையுமுடலெரிக்கும்-கண்டத்தில்வியர்வையுமாய்க்காயம்வற்றும், சைதியதோரல்லிபோற்றளர்ச்சியாகும்-சயித்தியமாந்தூமமென்றஅசீரணந்தானே. (௬௩௰)

விற்பட்டஅசீரணம்.

சயித்தியமாம்மிகவுழற்றுங்கோழையாகும் - சடமெங்கும்வெண்மையாய்க்கண்ணுந்தாழும், பயித்தியமாம்வாந்தியதுவெளுப்புமாகும்-பசிக்குமேயடிக்கடிக்குநுரையாம்பேதிஉயித்தியமாயிருமலுடன்சுவாசந்தோணும்-உறுகின்றதுயரமாய்த்தலைபிரட்டும், வயித்தியந்தான்செய்தாலும்வசப்படாமல்-மறுக்குமேவிற்பட்டவசீரணந்தானே. (௬௩௧)

மிர்தசேடஅசீரணம்.

மறுக்குமேமனமறுத்துவாந்தியாகும் மயக்கமாய்மூர்ச்சையாய்வசக்கேடாகும், கறுக்குமேநாக்கோடுகண்கள்மூக்கு காயந்தானுலர்ந்துமேகறுத்துப்போகும், வெறுக்குமேயன்னத்தைதத்தண்ணீர்தேடும்- வெளுப்போடுகறுப்பாமப்பேதியாகும், உறுக்குமேகண்கள்தனையுருட்டிப்பார்க்கும் உதறுமேமிர்தசேடவசீரணந்தானே. (௬௩௨)

சூழிவாதவிசூழி.

•தானானவிசூழியதுபிராதக்காலம் - தனிலுதித்துவாதநாடியுமிக்காகும், வானவயிறினாந்துஊதிக்கொள்ளும்-மாசிலாமேனியதுகறுப்புமாகும், கானகண்விழிதான்றிறந்தேநிற்கும் - கருத்தெல்லாங்கலக்கியேகாச்சலாகும், கோனகுடல்குமுறிப்பிரட்டலாகும் - கொடும்வாதவிசூழியிடகுணமதாமே. (௬௩௩)

பித்தவிசூழி.

குணமாகப்பகற்போதுகுதிகொண்டோங்கிக்கோபித்துப்பித்தநாடியுமேமீறி, நிணமானநேருந்தன்னுடலழுத்தும்- நோரானமூர்ச்சைவிக்கல்நிறங்குன்றுது, வணமானவாய்பிதற்றிவாந்தியாகி- மயங்கியேகடைகொடாதபிரட்டும், பிணமானதுபோலப்பிரலாபிக்கும்-பித்தமாம்விசூழியென்றேபேசலாமே. (௬௩௪)

சேட்பவிசூழி.

பேசவேநாடியதுஅடங்கிக்காணும் - பிறிந்திடுமேகங்குல்தனிலிரண்டாஞ்சாமம், நாசவேஉயிரதுவும்நாபிக்குள்ளாம் - நடைகொடாதபிரட்டுங்கொதுக்கைவாங்கும், மேசவேகண்விழிமேலாகித்தாழும்- மிடை

படாபேதிதண்ணீர்மோர்போற்சாய்க்கும்,தேசவேதேகமெங்குமிகவெளுக்கும்-சேட்டுமமாம்விகுழியென்றேசெப்புவீரே. (௬௰௫)

செப்பவேகிராணிதானிருபத்தைந்தின்- செய்தியெலாந்தெளிவாகத்திறந்திட்டேன்யான், ஒப்பவேசதாசிவன்றன்சொல்லக்கேட்டு-உகப்பானநாதாக்களுரைகள்கேட்டு, தப்பிலாதன்வந்திரிசொல்லக்கேட்டுத்-தாயானபராபரையாள்சொல்லக்கேட்டு, உப்பவேயூகியென்ற முநியாம்யானே-உலகத்தோர்தாம்பிழைக்கஉரைசெய்தேனே. (௬௰௬)

சாத்தியம்.

செய்திட்டசாத்தியத்தைசெப்பக்கேளாய்-சீரானவாதமொடுபித்தக்கிராணி, உய்திட்டஊஷ்ணவாய்வுக்கிராணியோடு- உயர்ந்தவற்றருவாய்வுமூலக்கிராணி, செய்திட்டகெர்ப்பமாங்கிராணியோடு-செடிவொட்டுக்கிராணிபித்தாதிசாரம், வெய்திட்டகராதிசாரத்தினோடு-விதூமமொடுதாமசிரணமுஞ்சாத்யம், (௬௰௭)

அசாத்தியம்.

அசாத்தியமாங்கிராணியையறியக்கேளாய் - அயமாம்சக்கிராணியொடுதொந்தக்கிராணி, தாத்தியமாஞ்சுங்கிரகக்கிராணியோடு- தனித்தவாதாதிசேட்பாதிசாரம், அசாத்தியமாந்திரிதோஷம்சன்னிபாதிசாரம்தோஷாதிசாரம்விற்பட்டவசிரணம், மிசாத்யமாமிர்தசேடவாதபித்தவிகுழிமெலிசேட்பவிகுழியுமேஅசாத்தியந்தானே (௬௰௮)

கிராணிரோகநிதாநம்-முற்றிற்று.

---

## மூலரோகநிதாநம்

தானனமூலமது இருபத்தொன்றும்- சதாசிவன்றன்பராபரியாட்கருளிச்செய்ய பானனபராபரியாள்நந்திதேவர்க்குப்- பாஷிக்கநந்திதன்வந்திரிக்குச்சொல்ல, கோனனதன்வந்திரிஅசுவினிக்குச்சொல்லக் -குணமானஅசுவினியும் அகஸ்தியருக்குச்சொல்ல ஆனனஅகஸ்தியரும்புலஸ்தியர்க்குச்சொல்ல அவர்தானேதேரையருக்கருள்செய்தாரே. (௫௰௧)

அருள்செய்தார்புலஸ்தியர்தான்தேரையர்க்கு- ஆண்மையாந்தேரையமாமுநிவன்றனும், பொருள்செய்தார்யூகி முனியாமெனக்குப்-போக்கெல்லாம் வகைவகையாய்ப்பிரித்துச்சேர்த்து, தெருள்செய்தஉலகத்தோர்பிழைக்கவென்று- சிவமானசித்தர்களைந்தொழுதுசேட்டு நருள்செய்துகலிபாமற்பிழைக்கவென்று - நாட்டினேனுயுருவேதத்தைத்தானே. (௬௰)

தத்தையாமதிகமாங்குளிரினாலுந் தரியாதவழற்சியாற் சிரந்தியாலும், புத்தையாம்பொருந்தாதவுணவுண்டதாலும்-புணர்ச்சியாய்க்கோபக்காற்சலிப்பினாலும், கத்தையாமவெகுகாலந்தேவண்டலாலும்- கடினமாமூப்பாலுங்காததாலும், மொத்தையாம் வெகுதனங்கள்போனதாலும் மூலம்வந்துற்பத்திமுனையுந்தானே. (௩௪௧)

முனையாகமுக்தோதானவைதலாலும் - மோசங்கள்பண்ணிமேகற்பழித்தும், நினையாதநினைவிலொன்றுவாக்கியொன்றும்-நேர்க்கபடிசொல்லின்றவிட்டோர்க்கும், பனையாகப்பசிதேகிபந்துவாறேனர் - பசித்திருக்கவுண்டதோர்பாதகர்க்கும், தனையாகச்சமாதானங்கவிர்த்தின்றோர்க்கும் - சண்டாளமூலம்வந்துசனிக்குந்தானே. (௩௪௨)

## மூலப்பெயர்கள்.

சனிப்பானமூலத்தின்பெயரைச்சொன்னால் சமசமாம்சீர்மூலந்தெவ்வண்டுமூலம், முனிப்பானமுளைமூலஞ்சிற்றுமூலம்- மூர்க்கமாம்ரத்தமூலம்ரத்தமூலம், தினிப்பானசீழ்மூலமாழிமூலம்- தினியானதமரகமாமூலத்தோடு, வனிப்பானவாதமொடுபித்தமூலம்-வகையானசேட்டுமத்தின்மூலமாமே. (௩௪௩)

வகையாகுந்தெரந்தமாமூலத்தோடு-வளர்கின்றவினைமூலம்மேகமூலம், பகையாகும்பவுத்திரமாமூலத்தோடு- படர்கின்றமூலமொடுகுதைதபாமூலம், புகையாகும்புறமூலங்கருங்குமூலம்பொருகின்றசவ்வாகுமூலத்தோடு, வனிப்பானவாதமொடுபித்தமூலம்- வகையானசேட்டுமத்தின்மூலமாமே. (௩௪௪)

## சீர்மூலம்.

அருபங்கேள்தொப்புளின்மேலிகவலித்துச் - அருண்டுமேகிழ்வயிற்றைப்பொருமிக்கொண்டு, வருபங்கேள்மலம்வறண்டுவாய்நீருறும்-வாய்வுவுதாஷ்டமிகையிலேநுனைபோற்காணும், அருபங்கேள்பிடவைகவிற்றேவுமாகும்-அருக்காகமலம்வருதல்போவிருக்கும், திருபங்கேளுடல்நோய்ப்போகும்-நிலையானசீர்மூலநிலைவாய்ப்பாமே, (௩௪௫)

## செண்டுமூலம்.

நினைவாகக்கருணையிடமுனையேயப்பால்- நிமிர்ந்தெழுந்துகுளன்மூலம், றாசிற்பமாகி, கனைவாகக்கனறியேயமிகவலிக்கு - காரங்காணபோட்டவுடமைகளையாய்விழும், இனைவாகஇரத்தமொடுதண்ணீர்காணும்- இறுகியேமடலந்தியும்பின்னச்சலாகும், இனைவாகவாசனைதகைத்தருக்கக்கொள்ளும்-செயசெண்டுமூலத்தின்றிறமைதானே. (௩௪௬)

## முளைமூலம்

திறமாகவாசனத்திற்கடுப்புமுண்டாய - சிமட்டிப்பாய்த்தகடுக்கொசிவுசெய்துங்கானும், அழுபாகவயிறுவயிறுபுகல்லும்படமைம- அசைவுடுகவலியும்

கருங்கத்தினதமுண்டாம், குறமாகக்குதிகொள்ளத்தப்பிறங்கும்- கூ
சாதஇளாச்சல்மிகவெப்பமுண்டாம், மறமாகமஞ்சள்முளைபோலெழும்
பும்மலத்தியுமுளைமூலவண்மைதானே. (௯௬௭)

### இரத்தமூலம்

வண்மையாயுடம்பெரியும்மயக்கமாகும் வயிறுநாளம்பளபளென்று
ம்வனுவாய்க்குற்றும், இன்மையாய்க்குருகுறென்றேஇளைச்சலாகும்இ
சிவுடனேபெருமலாயினைப்புமாகும், தின்மையாய்ச்சித்துமுளை பலவு
ண்டாகும்-தேகமெங்கும்வெளுப்பாகுஞ்செயலுங்காணும், வெண்மை
யாய்வெளுத்துமேபசியிராது- மேனிகளுஞ்சிற்றுமுளையிருக்குந்தா
னே (௯௬௮)

### வாதமூலம்

பிடிக்காகமலத்தைதயேபிழக்கிக்கொள்ளும்-பிருவாகத்தமதுனி
யாய்வீழும், அடுக்காகச்சடமுலைத்தியநலைகழிக்கும்- ஆண்மைதான்மிக
ப்பேசிச்சண்டைகொள்ளும், உடுக்காகவுடலிருக்குமுளைகள்தானும் மு
ருவருக்குக்தெரியாதுஓடுக்கிவைக்கும், இடிக்கககனந்தணிந்தபொன்று
றைக்கும்செயலழிக்கும்வாதமூலச்சேதிதானே. (௯௬௯)

### இரத்தமூலம்.

சேதியாய்த்தொப்புள்தனில்வலித்துநொந்து- சிறுநீர்போற்பிரி
ட்டுரத்தம்வீழும், மேதியாய்மேனிவற்றிவெளுத்துப்போகும்-மிகக்கை
காலசந்துமேசோகையாகும், மாதியாய்மார்பிலக்குந்தலைநோவுண்டாம்
மயக்கந்தான்மிகுதியாய்த்தன்னிப்போகும், காதியாய்க்கண்ணிரண்டுமஞ்
சள்போலாம் கவியுமாத்தமூலத்தினெண்புதானே. (௯௭௦)

### சீமூலம்.

தண்டாகக்குதங்கடுத்துளைப்பதோன்றும்-நாற்றமே சீயொடுகண்
ணீர்காணும், மண்டமாயிசங்கரகளைத்துக்கொண்டு- வடிவமெல்லாம்
வெளுத்துமேமஞ்சளாகும் மென்பாகமேவும்மயிர்தாகும்- மிடுக்கா
னநடைகுறையுமெலியுமாகும் திண்டியர்கச்சிறுநீர்தானுமஞ்சளிக்கும் சீ
மூலந்தன்னுடையசேதியாமே. (௯௭௧)

### ஆழிமூலம்.

சேதியாய்வீண்டலைவலிருக்கும்போல-இயிர்த்துமேமேயகமூளையா
கக்காணும, சீதமாய்சீதொடுஞ்சீபுபிரக்கும்- நிணநிறமாய்த்தொய்யக்கீ
ழேயவயலுமுகுக்கும், வாதியாய்கைகால்கள்ற்றிட அசடியபலவீனமாக
தெருக்தாணு, ஆதியாய்முசத்துடனேயாழுதக்கைகால்ளும்-ஆழிமூலந்
தினிடத்துணைதானே. (௯௭௨)

## தமரகமூலம்.

மூலபவமாம்மனத்திலுலக்கைப்பூண்போல் - முதிர்ந்ததாமரைப்பூப் போலலர்ந்திருக்கும், நூலமாம்நொறுக்காகமலமுங்காணும்- நுனுக்கேறி யிரத்தமொடுதினவுமுண்டாம், வாலமாய்வயிரிரைந்துநீராய்ப்போகும்· வயிறூதிப்பசியில்லாமந்தங்காணும், தாலமாமேல்மூச்சாய் அசதியுண் டாம்-தமரகமாமூலத்தின்றண்மைதானே. (௬௫௩)

## வாதமூலம்.

தண்மைகோவைப்பழம்போற்குகஞ்சிவப்புத்- தனிலடப்பம்பூப் போலமுளைவளர்ந்து, கண்மைகறுப்பாய்மிருதுவாயிருக்கும்- கடுப்போ டுதினவுகுற்றல்திமிர்த்தலாகும், வண்மைமயிர்தான்முளைத்துமலஞ்சிக் கென்று, மகத்தாகக்கறுத்துமெத்ததிரண்டுகாணும்- வெண்மைவயிற்வி ட்டுமேகுடலுள்வலியாகும்-மிக்கதலைவலிவாதமூலமாமே. (௬௫௪)

## பித்தமூலம்.

தலைவலிதான்மிகவுண்டாம்பருத்திக்கொட்டை- தன்போலுநெற் போலுமுளையுண்டாகும், மலைவலியாய்மலஞ்சிக்கிஉருண்டுருண்டு மாவு ண்டைத்திரித்திரியாய்ரத்தஞ்சீயாய், குலவலியாய்க்குதங்கடுத்துஎரிவு மாகிக்·கூச்சமாய்தாகமொடுவியர்வையாகும், துலைவலியாயத்துயக்கமு மாய்க்கோபமாகும்சொற்பலவீனமும்பித்தமூலமாமே (௬௫௫)

## சிலேட்பமூலம்

ஈனமாங்குதத்தில்முளைவெள்ளையாகும் - எந்நேரந்தினவதிகமெரி வுமாகும், கானமாங்கடுப்புடனேசீயுந்தண்ணீர்- கனமானவலியாகிமலந் தானேறுங்கும், தூனமாமூத்திரந்தான்சூடுண்டாகும்- செ:ர்குணபேதக மாகுந்தாதுநஷ்டம், பானமாம்பாண்டுவொடுஅருசியாகும்-பாவுசேட்டு மமூலப்பாங்குந்தானே. (௬௫௬)

## தொந்தமூலம்.

பாங்கானகுதமிறுகிக்கோழிச்சூடு- பதித்ததுபோற்முளிருக்கும்ந டக்கவொட்டா, வாங்கானவயிறுமெத்தப்பொருமலாகும்- வருத்தமொ டுவியர்த்துமேமிகநடுக்கும்,தாங்கானதவித்துமேதாசமாகும்- தரியாமல் வயிறதுவும்பேதியாகும்,தீங்கானசெடமட்டைபோற்சுருக்கும்திடுக்கு மேதொந்தமென்றமூலந்தானே. (௬௫௭)

## வினைமூலம்.

திடுக்கிட்டுச்சோறுசெரியாமையாகும்- தீபனந்தானில்லைமற்பிளி த்தேக்காகும்,அடுக்கிட்டஅடிவயிற்றிற்குற்றலுண்டாம் ஆங்காரக்கோ பமொடுமலமுங்கட்டும், கடுக்கிட்டகைகாலுமோச்சலாகும் -கனமாகவ

யிறிரைந்துகாந்தலுண்டாம், வெடுக்கிட்டுநரம்பெல்லாமிசிவுமாகும்-மிக க்கடுக்கும்வினைமூலவிபரந்தானே (௬௫அ)

மேகமூலம்.

வினையாகலிங்கத்தில்வெள்ளையூற்றும்-மெத்தவாய்க்குதந்தன்னிலு திரஞ்சாயக்கும், சனையாகச்சத்தமதாய்க்கழிச்சலாகும் தாக்கானசிறுநீரு மெரிச்சலாகும், பனையாகப்பருக்குங்கால்தனைவலிக்கும் - மாரமாயுடம் பெங்குந்திமிருண்டாகும், முனையாகமூத்திரந்தான்மதூரமாகும்-மூர்க்க யாமேகமென்றேமூலந்தானே. (௬௫௯)

பவுத்திரமூலம்.

மூர்க்கமாய்ப்பவுத்திரத்திற்கட்டியாகி-மூத்திரந்தானடிக்கடிக்கு அ ருவலாகும், கார்த்தமாங்கால்கையுங்கனப்புமாகும்- கனகனக்குங்குதங் குய்யஞ்சாவற்கூடு, பூர்க்கமாம்பூப்போலமுளைகள்காணும்-பொருங்கோ வைப்பழம்போலச்சிவப்புமாகும், பார்க்கமாங்காரந்தான்போடத்திரும் பவுத்திரமூலத்தின்பண்புதானே. ௬௬௰)

கிரந்திமூலம்.

பண்புதான்லிங்கத்திற்புண்ணுமாகும் பாரமாய்க்கால்கையுங்கடுப் புமுண்டாம், குண்பாதக்குதத்துக்குள்விரணமாகிக்-கொடிக்கொடியாய் முளையுண்டாய்ச்சீயுமரத்தம், தண்புதான்தண்ணீரும்பெருகவுண்டாம்- தணல்போலஎரிவோடுகடுப்புமாகும், தெண்புதான்கெட்டியாய்மலம்வர ண்டு-கீற்றுகவெடித்திரங்குங்கிரந்திமூலம். (௬௬௧)

குதமூலம்.

இறங்குமேமூங்கிலிடக்குருத்துபோல- இமுத்துமேதள்ளிடிலோ வுள்ளேபோகும், பிறங்குமேசீயோடுரத்தம்பாயும்பெருகியேவயிறுமெ த்தக்கனத்துக்கொள்ளும், அறங்குமேகால்கையுமதப்புமாகும்-அடிக்க டிக்குநாவரண்டுதண்ணீர்தேடும், குறங்குமேமிகவலிக்குங்கோபமுண் டாம்கொடியகுதமூலத்தின்குணமதாமே. (௬௬௨)

புறமூலம்.

குணமதாயெண்ணெய்போற்றண்ணீர்போலும்கூற்றனகடுப்போ டுசீயுமுண்டாம், திணமதாய்த்தினவெடுக்குந்திமிர்ப்புண்டாகும்-சிறுசி ரங்காய்மேலெல்லாஞ்சொறியுமாகும்,பணமதாயாசனத்திற்பகுப்புபோ லப்- பாங்காகவிதனமாய்ப்படுக்கக்கூடா, பிணமதாய்முகமெல்லாம்வா ட்டமுண்டாம்-போனபுறமூலப்புதுமைதானே. (௬௬௩)

சுருக்குமூலம்.

புதுமையாயாசனத்தைச்சுருக்கிக்கொண்டு- பொருங்குடலில்வலி யோடுபொருமலாகும், கதுமையாய்க்குதந்தன்னிற்றடிப்புண்டாகும்-க

மூலமேதண்ணீரும்ரத்தந்தானும், வெதுமையாய்வெவ்வனல்போலழன்றாகானும்-வேற்றுடம்பாய்த்தான்வெளுத்துவெறிப்புண்டாகும், பதுமைபோல்தேகமெங்குமசவுகூடாப்பண்பானசருக்கென்றமூலந்தானே

சவ்வுமூலம்.

சுருக்கியேமுதுகுதண்டிலுறபவித்துந் - தோப்புனிலேதாமரைப்பூப்போல்மலர்ந்து, அருக்கியேகுற்றிலாகாரமாக்கி- அடிவயிற்றிலேலாங்குமேமூலரோகம், சொருக்கியேசவ்வுபோலாசனத்தில்-சுற்றியேநின்றுதான்சியுந்தண்ணீர், பருக்கியேகசிவாகுமெங்நோந்தான்பண்பானசவ்வாதுமூலந்தானே. (௬௰௬)

சாத்தியம்.

தானென்றமூலத்திலசாத்தியந்தான் சாதகமாய்நீர்மூலமுளைமூலந்தான், வானென்வோண்மூலம்ரத்தமூலப்- வாதமாமூலந்தான்பித்தமூலம், வேனென்றமேகமாமூலத்தோடு-விளைபவுத்ரமூலமாங்கிரந்திமூலம், பேரென்றபுறமூலஞ்சுருக்குமூலம்பெருகுசவ்வுமூலமதுமசாத்யமாமே

அசாத்தியம்.

ஆமென்றவசாத்தியத்தைச்சொல்லக்கேளாய்- அழிவுசெண்டுமூலமாஞ்சிற்றுமூலம், தேமென்றசீமூலமாழிமூலம்- திணிவானதமரகமாமூலத்தோடு, வேமென்றவினைமூலஞ்சேட்பமூலம்- மிளிர்கின்றகுதைமூலந்தொந்தமூலம், ஓமென்றவென்பதுமசாத்தியந்தான்- உறுதியாய்மூலத்திறுண்மைதானே. (௬௰௭)

உண்மையாமூலத்திறுறுதிதன்னை-உகந்துமேசிவனுமையாட்குபதேசிக்கத், தண்மையாயுமைநந்திதனக்குச்சொல்லத்- தயாநிதியாம்நந்திதன்வந்திரிக்குச்சொல்ல, விண்மையாய்த்தன்வந்திரிஅசுவனிக்குச்சொல்ல விசுவநியுமசுவனிக்குவிபாங்கூற, அண்மையாயசுவிநிஅகஸ்தியர்க்குஅருள்செய்யவகஸ்தியருமடக்கினரோ. (௬௰௮)

அடக்கியேபுலஸ்தியருக்கருக்ரகிக்க-அன்புடனேபுலஸ்தியருந்தேரையமாமுநிக்கு, மடக்கியேபோதிக்கத்தேரையமாமுனியும் மகத்தானயூகியாம்எனக்குரைக்க, உடக்கியேஉள்ளபடிமுழுதுமாய்ந்து உபகாரமாகவேஉலகத்தோர்க்கு, வடக்கியேவடமொழியினுரையைத்தேர்ந்து-மகத்தானகவிதைசெய்தேன்தமிழிற்றானே. (௬௰௯)

மூலரோகநிதானம்-முற்றிற்று

## க்ஷயரோகநிதானம்.

தானானக்ஷயமதுதான்பனிரொண்டாகும் - தாக்கானபிர்மமென்று க்ஷயந்தானென்று, வானானராஜக்ஷயம்வைசியக்ஷயந்தான் - மருவுசூத்திரக்ஷயந்தான்வாதக்ஷயமாகும், பூனானபித்தக்ஷயம்சேட்பத்தோடு - பிரண்டதோர்வாதபித்தக்ஷயமுமாகும், கானானவாதசேட்டுமக்ஷயந்தான் - கரும்பித்தசேட்டுமத்தின்க்ஷயமுமாமே. (கூஎ0)

ஆகின்றவிகாரக்ஷயந்தொந்தக்ஷயந்தான் - அடங்கலுமேபனிரண்டு விதமுமாகும், வேகின்றகஞ்சாவல்மிகுந்தவுப்பால் மீறியதோர்காரத்தால்மிகமயக்கால், தோகின்றமருந்திட்டாற்சுனையிநீரால் - சுசியில்லாப்பதார்த்தங்கள்சுக்கான்றண்ணீர், வாகின்றவக்கினியால்மிகுந்தவெய்யில் - வருத்தத்தில்க்ஷயரோகமருவுங்காணே. (கூஎக)

காணவேகர்ப்பழித்தல்பொய்யேசொல்லல் - களவாடல்பிறர்பொருளைக்கண்டாசித்தல், ஆனவேயடுத்தோரைக் கெடநினைத்தல் - அகதிபரதேசியரையகந்தைசொல்லல், ஊனவேபந்துவைவஞ்சித்தேயுண்ணல் - உதாசினமாஇகழ்ந்தோரைஇகழ்ச்சிபேசல், வெணவேகாதினிற்கேளாத சொல்லை - மிகச்சொன்னோர்க்ஷயத்தில்வந்துமெலிவாரே. (கூஎஉ)

### பிர்மக்ஷயம்.

மெலிவாகிஇருமலொடுபுண்கலக்கல் - மிகத்தண்ணீர்போலவேசேட்பங்கானல், நலிவாகிக்கோழையொடுஇரத்தமுண்டாய் - நலமான அக்கினிதான்மிகவேதாழும், கலிவாகிக்கண்ணிமொடுஉடிாமாழ்கிக் - காச்சலதுஎந்நேரங்கலக்கமாகும், மலியாகியருசியொடுசத்தியாகல் - மறையவனும்க்ஷயமென்றுமதித்திடாயே. (கூஎங)

### இராஜக்ஷயம்.

மதித்திட்டவெதுப்பினொடுதலைநோவுண்டாய் - மார்நெஞ்சில்நோவுண்டாய்சிலேட்டுமந்தோன்றும், குதித்திட்டமஞ்சள்போற்கோழைகாணும்கொடிதானமிண்டமுன்றெரிந்துநோவாம், அதித்திட்டவரிகுரலாய்த்திரிகைசெய்தல் - அங்கமெல்லாமிகநொந்துஅனலாய்க்காணல், சதித்திட்டஇருமலொடுசத்தியுண்டாம் - க்ஷத்திரியக்ஷயமென்றுசாற்றலாமே. ()

### வைசியக்ஷயம்

சாற்றவேகையோடுகாலுமோய்ந்து - தாக்கானவெயில்காணிகடுவிஷம்போல், வேர்த்துமேவெதும்பலாய்க்காச்சல்காணும் - மிக்கானஇரும

லொடுகோழையுண்டாம்,பாத்தவேபருத்திபோலுடல்வெளுத்துப்-பருகியதோசனமிகத்தானுஞ்செல்லா, ஆற்றவேயாறுண்டிலதிகமாகும்-அறிந்துரைத்தவைசியனும்க்ஷயந்தானுமே. (௬௭௫)

ருத்திரக்ஷயம்.

ஆமேதான்கண்ணழன்றுநீர்குளிர்ந்துபாய்ந்து-அடிக்கடிதானிருமியேமிடறுபுண்ணும்,வேமேதான்மிகவழன்றுவெதுப்புண்டாகும்-விடிகிறநேரந்தன்னில்நளிருஞ்சற்றே, வாமேதான்மயிர்க்கூச்சமயக்கமாகும்-மகத்தானவலியுண்டாயுடல்தான்வேர்க்கும், தாமேநல்லோராண்டிலீராண்டிற்கொல்லும்-வலிருத்ரட்சயமென்றேநாட்டலாமே. (௬௭௬)

வாதக்ஷயம்.

நாட்டமாய்த்தலைவலியும்விலாவுஞ்சந்தும்-நடுமுதுகுங்கடுத்துமேசத்தியுண்டாம், தூட்டமாய்ச்சுரமோடுதாகங்காணும்-துடிப்பாகுந்தோளோடுகைகாலெல்லாம்,ஈகாட்டமாய்க்கழித்ததுவுநீண்டுகாணும் கனமானஅதிசாரமிருமல்கோழைதேட்டமாய்ச்சிறுதிடங்கள்குளிர்ந்துகாணும்-சீறுமேவாதத்தின்க்ஷயந்தானென்றே. (௬௭௭)

பித்தக்ஷயம்.

என்றதோர்விலாக்கமுத்துமிகச்சுருங்கி- இளைக்குமேஇருமலொடுகோழையுண்டாம்,குன்றதோர்குளுமையுண்டாயிரத்தவாந்தி-கொடிதானமூர்ச்சைகுரல்கம்மலாகும், தின்றதோர்தீபனந்தான்செரிகெடாதுதேகமெங்கும்வெளுத்துமேமஞ்சளாகும், மென்றதோர்மூத்திரமுமஞ்சள்காணும்-மீறுபித்தக்ஷயமென்றேமொழியலாமே. (௬௭௮)

சேத்மக்ஷயம்,

மொழியவேஇருமலொடுகோழைசத்தி மூச்சோடுஅருசியாமதிசாரந்தான்,அழியவேதொனிபேதமுடல்வெளுப்புஅசதியொடுசந்தாபமாலோபந்தான், துழியவேமூக்குநீர்பாய்தல்சோம்பு-சொற்றவால்சுரமோடுதூயதாபம், தெழியவேதேகமெங்குஞ்சொறியுண்டாதல்- சேட்டுமத்தின்க்ஷயரோகச்செயலிதாமே. (௬௭௯)

வாதபித்தக்ஷயம்.

செயலாகத்தேகமெங்கும்மிகக்கடுப்பு-தீதானசுரதாகங்கோழைசத்தி, அயலாகஅருசியொடுஇருமல்சுவாசம்-மதிகமாயுடம்பெரிவு ஆலோலபந்தான், மயலாகமயக்கமொடுவாய்நீரூறல் -மார்க்கமாய்மலம்விடுத்தல்நீருக்கல், நயலாகநாக்குதடுமிகக்கறுத்த- நாகமாம்வாதபித்தக்ஷயந்தானுமே. (௬௮௰)

## வாதசேட்பக்ஷயம்.

தானனதொனிபேதந்தொண்டைக்கம்மல்- சாங்கமாஞ்சுரமோடுசு வாசஞ்சத்தி, கானனஇருமல்சரீரங்கடுப்புக்- கடுங்கோழைவெகுபலவி னமுமேயாகும், ஆனனஅக்கினிமந்தத்திறேடு - அரோசிகமாஞ்சரீரம துவெளுப்புண்டாகும், வானனகால்கையும்வற்றலாகும்-வாதசேட்டும க்ஷயத்தின்வாறதாமே. (௬௧)

## பித்தசேட்பக்ஷயம்.

வாறுனநித்திரையுஞ்சோம்பலோடு வடிவெல்லாநிறைந்துசுரம்வா ந்திகோழை, ஏறுனஇருமலொடுவயிறுபேதி-எடுக்கின்றரத்தம்வெகுநா ற்றமாகும், தாறுனதலைசுற்றல்பிரமைதாகம்- சாறுசத்தாயிருமல்சாருந் தண்ணீர், பேறுன்னீரதுவும்ரத்தம்போலாம்-பித்தசேட்பக்ஷயத்தின்பே ரதாமே. (௬௨)

## விகாரக்ஷயம்.

ஆமென்றநாதிலேதொனியுண்டாகும்அழகானக்கண்ணிரண்டுமெவ ளுப்புமாகும், வாமென்றவடிவுபெலன்றுனிந்தல்மகாவிரணம்பிரமே கம்மூச்சுண்டாதல், வேமென்றவிலாப்பக்கம்வலியுண்டாதல்- மிகஇரத் தம்சத்தியுமேவெகுவிக்காணல், மூமென்றமூச்சோடுவாய்நாறும்-மூ ர்க்கனும்விகாரத்தின்க்ஷயமுமாமே. (௬௩)

## தொந்தக்ஷயம்.

விகாரமாந்தொனிபேதஞ்சுரமுண்டாதல் - மிடுக்கானவிருமலொடு இரத்தங்கோழை, நகாரமாம்நாத்தமுடனடுக்கல்பேதி-நலியாகமயக்கநடு காக்குக்குள்ளே, வகாரமாம்வட்டம்போல்கறுப்புண்டாதல்-வடிவமெல் லாங்கற்றுழைநாற்றங்காணல், அகாரமாம்பேச்சுத்தான்மிகவுண்டாகு ம்-தொந்தமாய்க்ஷயத்தினிடருக்ஷந்தானே. (௬௪)

## சாத்தியம்.

ஆகிியாய்ச்சாத்தியத்தைச்சொல்லக்கேளாய்-சுற்றமாம்பிரமமென் றக்ஷயத்திறேடு, சாட்சியாய்க்ஷத்திரியக்ஷயத்தோடோக்கச்சாந்தமை சியக்ஷயமாம்பித்தத்தோடு, தீட்சிசேட்டுமட்சயந்தானைந்துசாத்யம்-தி ட்டமாமருந்துதன்னிற்றீர்க்கலாகும், காட்சியாய்க்கனமானசெந்தூரத் தில்-காரணமாம்வயித்தியர்முன்றீருந்தானே. (௬௫)

## அசாத்தியம்.

தீரதவசாத்தியத்தைச்செப்பக்கேளாய் - சீர்கேடாஞ்சுத்தக்ஷயம் வாதக்ஷயந்தான், வாரதவாதசேட்டுமக்ஷயந்தான், மன்னியதோர்புத்த சேட்டுமக்ஷயந்தான், வேரதவிகாரக்ஷயம்வாதபித்தம்- மிடுக்கானதொ ந்தமாம்க்ஷயத்திறேடு, ஏரதநிலவேழுமசாத்தியந்தான்-எந்தமருந்தி ட்டாலுமபிசைவாகாதே. (௬௬)

இசைவாகக்ஷயத்தினிடகுணங்கள்தன்னை- எந்தாயார்நந்திக்குளவி திற்சொல்ல, நசைவாகநந்திதன்வந்திரிக்குச்சொல்ல- நன்மையாந்தன்வ ந்திரியசுவினிக்குசொல்ல, அசைவாகவசுவினியும்விசுவினிக்குக்கூற- அட க்கமாய்விசுவினியும்மகஸ்தியர்க்குரைக்க, பிசைவாகவகஸ்தியரும்புலத்தி யர்க்குரைக்கப்புலத்தியருந்தேரையர்க்குச்சாற்றினரே. (௯௮௭)

சாற்றினர்தேரையமாமுனிவன்றனும்- சாங்கமாயூகிமுனியாம்எனக் கு, போற்றினர்மானிடர்கள் பிழைக்கவென்றுபொறுக்கியேயாயுருவே தத்தையெல்லாம், வீட்டினர்முத்துப்போல்பொறுக்கிக்கோர்த்து-விரி தமிழைச்சுருக்கியேவெளியாய்த்தானும், தேற்றினர்சீவசெந்துக்குபகா ரமாகச்-செப்பினர்செகமெல்லாந்தெரியத்தானே. (௯௮௮)

க்ஷயரோகநிதானம்-முற்றிற்று.

## காசரோகநிதானம்.

தானானகாசமதுபனிரண்டாகும்-தாக்கானமந்தாரகாசத்தோடு, பா னானபக்கமந்தாரகாசம் - பாங்கானசுடர்காசம்வாதகாசம், பேனானபித் தமாங்காசத்தோடு-பேர்பெரியசுவாசகாசத்தோடொக்க, ஏனானஇயற்ற மாங்காசத்தோடு-இறைப்பானசேட்டுமகாசந்தானமே. (௯௮௯)

ஆகின்றபீனிசத்தின்சுவாசகாசம்- அழிவாதபித்தத்தின்காசமாகு ம், போகின்றபித்தசேட்டுமகாசந்தான்- புகழ்பெரியதொந்தமாங்காசத் தோடு, தேகின்றகாசமதுபனிரண்டாகும்-தெளிவாகஇதினுடையசெய லைக்கேளாய், வேகின்றவதிகமாம்புகையினாலும்-மீறுகின்றபாணத்தால் மிருக்குந்தானே. (௯௯௰)

பாணத்தால்பாமாக்னிமிருக்கையாலும் - பாரமாமாமிசங்கள்புசிக் கையாலும், தாணத்தாற்சஞ்சாரந்தவிர்க்கையாலும்-சரிப்படாப்பதார்த் தங்கள்புசித்தலாலும், தீணத்தாற்பொசியாமலிருக்கையாலும்-சேயிழை யார்மேலின்பஞ்சிதைவதாலும், மானத்தால்மாதுக்கமடைதலாலும்-ம தத்தாலுஞ்சுவாசமதுமருவுங்காணே. (௯௯௧)

காணவேதேவதைக்குப்பிரித்தபண்டம்- களவாடிதின்றாலுங்கண வன்றன்னைத், தோணவேநிந்தாட்சைசொன்னதாலும்- சுசியானபதார்த் தமெச்சில்பண்ணினாலும், வேணவேஒருவர்செய்தநன்றிதன்னை- மிகம றந்துகொடுமைகடான்விளம்புவோர்க்கும், பேணவேசபைதனிலேசொ ன்னபேச்சு-பிரண்டோர்க்குங்காசம்வந்துபிறக்குந்தானே. (௯௯௨)

### மந்தாரகாசம்.

தானைதூயதோர்நாசிதன்னில் - சலநோய்நீர்தான்விழுந்து தும்மலுண்டாம், மானைமார்புநெஞ்சடைத்துமூச்சு- வலுவாகப்பாம்புபோல்சீறலாகும், கானைகண்டமொடுமுகமுங்காதும் - காயமதுங்கசிவாகிவியர்வையாகும், ஏனைஇருமலொடுகோழைகம்மல்- இளைப்பாகுமந்தாரக்காசமாமே. (௬௯௩)

### பக்கமந்தாரகாசம்.

காசமாயிருமலொடுஇளைப்புமுண்டாய்- கட்டியேநெஞ்சதனிற்கம்மலாகும், வாசமாய்வயிறதுவும்பொருமிக்கொள்ளும்- மகத்தானமூக்குநீர்பாய்ச்சலாகும், ஆசமாயமாபக்ஷம்பூர்வபக்ஷத்-தருகாமையானவுடனசுவாசமீறும் ஈசமாயிளைப்போடெரிமூச்சாகும்- இக்குணந்தான்பக்கமந்தாரகாசம். (௬௯௪)

### சுடர்காசம்.

பக்கமாய்ப்பிரசவிச்சமாதருக்குபாரமாய்த்தலைநோயும் சுரமுண்டாகும், உக்கமாயுழலையொடுதவனமுண்டாம்-உறுகழிச்சல்பொருமலொடுஉப்புமாகும், மிக்கமாயுள்மூச்சுமிடுக்காகும்- மிரளாமல்விழியிரண்டுந்தெளிவுமாகும், துக்கமாய்த்துடிதுடிக்குமகப்பெற்றோர்க்குச் சுடர்காசந்தன்னுடையசுரூபந்தானே. (௬௯௫)

### வாதகாசம்.

சுரூபமாய்நெஞ்சுதனிற்றினவுமுண்டாம்செவிதனிலேஇரைச்சலுமாமயோசிகந்தான், மருபமன்னிக்கீழ்மூச்சிமார்பளவாகி- மன்னியேநெஞ்சளவாயுழலுஞ்சுவாசம், நிருபநேர்படும்பிசமாந்திரந்தன்னில்- நெய்யுந்துதுன்மாமிசங்கள்மிகவளர்ந்து, துருபமாய்மூச்சுதிகமிருமல்கோழை-தூய்தான்வாதகாசத்தின்சீரே. (௬௯௬)

### பித்தகாசம்.

சீராகஇருமல்மிகப்பிரட்டலாகித்-தித்தித்து உப்புரைக்குஞ்சத்தியுண்டாம், தாராகத்தலையுடம்புதான்வலிக்கும்-தாகித்துக்குரல்கம்மும்ரத்தம்வீழும், பூராகவங்கந்தான்மிகவிளைக்கும்- அன்னந்தான்செல்லாமற்பிளித்தேக்காகும், மாராகமயிர்க்கூச்சுச்சுரமுண்டாம்- மதிமயங்கும்பித்தகாசத்தின்வண்மை. (௬௯௭)

### சுவாசகாசம்.

வண்மையாய்க்கோழைகட்டிஇருமிவீழும் மாநாகம்போலவேவாங்குஞ்சுவாசம், திண்மையாய்ச்செருமலுண்டாமடிக்கடிக்குச் சீரணமில்லாமலேவயிறுஊதும், நண்மையாய்நாசியதுதணல்போலாகும்- நலுந்தடம்புவற்றிவருங்குரலுங்கம்மும், உண்மையாயுண்ணாக்கிலுறுங்கோளைஉபூறுமேசுவாசகாசத்தினெட்பம். (௬௯௮)

இரத்தகாசம்.

ஒப்பானகுரல்கம்மிஉதிரந்தானும்உருட்சியாய்க்கட்டிபோலுருண் டுவிழும், விப்பானவிலாவிலேமிகநோவாகி மிளமிளெனவயிற்கடித்து உளைச்சலாகும், கப்பானகால்கையுமோச்சலாகும்- கடுமூத்திரமெரிந்து மெத்தமஞ்சள்போலாம், தப்பானசரீரமதுவெளுத்துக்காணும்சமிக்கு ம்ரத்தக்காசமென்றேசாற்றலாமே. (௬௯)

சிலேட்பகாசம்.

சாற்றவேஇருமலொடுஇளைப்புமுண்டாய்- சார்ந்தபீனையுமூச்சுமி குந்துவாங்கும், ஆற்றவேஅடிவயிறுமரந்தம்பற்றி-அழகாகுமுருவழிந் துஉடம்புவற்றும், சேற்றவேசுரமோடுதியக்கமுண்டாய்- சித்தமேமி கக்கலங்கிவாந்தியாகி தித்தவேசிறுகடுப்பாந்தேகமெங்கும்- சேட்டுமத் தின்காசமென்றேசெப்பலாமே (௭௰)

பீனிசகாசம்.

செப்பமாயிருமலொடுகோழைவிழும்- சேட்டுமமாயிளைப்போடுஇ ளைப்புண்டாகும், உப்பமாய்வயிறதுவுமூதிக்கொள்ளும்- ஊணுறக்கமி ல்லாமலுலருந்தேகம்,குப்பமாய்சலசலமுங்கறுகிவிழும்-கோழையிடகு ணந்தான்மீண்கவிச்சடிக்கும், துப்பமாய்ச்சுருண்டுவயிற்வலியுமாகும்க வாசபீனிசமென்றேசூட்டிடாயே. (௭௧)

வாதபித்தகாசம்.

சூட்டிட்டுக்காறையிலேதுளிக்கும்ரத்தம் சூட்சமாய்க்காதுதனிலி ரைச்சலுண்டு, ஆட்டிட்டஇருமலொடுஅசதியாகும்- அடிக்கடிக்குவாய் வதுதான்மிகவேமீறும், மூட்டிட்டமுதுகுகண்டுகுடைச்சலுண்டாம்- மூச்சோடுசுந்தாபமொழிமாரட்டம், வாட்டிட்டதேகந்தான்ஊதிக்கொ ள்ளும்-வாதபித்தகாசத்தின்மார்க்கந்தானே. (௭௨)

பித்தசேட்பகாசம்.

மார்க்கமாய்நெஞ்சுதனிற்றினவுண்டாகும்- வடிவமெலாந்தான்வலி க்குமிருமலுண்டாம், தார்க்கமாங்குரல்கம்முஞ்சடமிளைக்கும் சஞ்சலிக் கும்பூருவத்திற்சதியைநாடி, பீர்க்கமாய்ப்பூமியெல்லாஞ்சுழற்றல்போ லாம்-பெண்பார்வைபார்த்தவுடன்புளகமுண்டாம் பீர்க்கம்பூப்போலுட ம்புமஞ்சளிக்கும்-பித்தசேட்டுமகாசப்புதுமைதானே. (௭௩)

தொந்தகாசம்

புதுமையாய்ப்புரண்டுமேஇருமல்குற்றிப்-பூங்கமுகினிறமாகஇரத் தம்விழும், வெதுமையாய்வெதும்பலொடெரிவுதாகம்- மிக்கதோஷசி யொடுவயிறுபேதி, பதுமையாய்ச்சரீரமெங்கும்படுக்கைகூடாப்-பருத் துமேஉடம்பூதிப்பாண்டுவாகும், கதுமையாசச்சரீரமெங்குங்கடுப்புண் டாகும்-கடிதுமிதொகாதசந்தினைகாட்சிதானே. (௭௪)

### சாத்தியம்.

காணவேசாத்தியத்தைக்கருதக்கேளாய் கனத்ததோர்மந்தாரகாசத்தோடு, பூணவேபக்கமந்தாரகாசம் - பொலிவானசுடர்காசம்பித்தகாசம், தோணவேசுவாசகாசத்திஞேடு- சுழியிரத்தக்காசமாம்பீனிசகாசம், தாணவேஇதுவேழுஞ்சாத்யமாகும்-சாதகமாய்பரிகாரம்பார்த்துச்சாற்றே.

### அசாத்தியம்

சாத்தியதோரசாத்தியந்தான்வாதகாசம் - சஞ்சலமாஞ்சேட்பத்திவ்காசத்தோடு, தோத்தியதோர்தொந்தமாங்காசத்தோடு-சுருக்கானவிம்மூன்றுமசாத்தியந்தான், நேத்தியதோர்மற்றுமுள்ளகாசமெல்லாம் -நேரானசாத்தியமாய்நிகழ்த்தலாகும் போற்றியதோர்சிவனூலுமிந்நூலும்-போக்கொன்றுதப்பாதுபொய்போகாதே. (௭௱௬)

பொய்போகாச்சாஸ்திரத்தைநித்தர்பூசிப்- புகழாகவவ்வுயிருந்தம்முயிர்போலெண்ணு-மெய்யாகத்தாயோடுசிவனைப்போற்று மிகுந்தவுபசாரத்தால்விருப்பமாக, மைபோகமருத்துவர்கள் அசுவினிதேவர், மாசற்றகுருமுநிக்கும்வணக்கம்பண்ணுமெய்போக நன்னூலைவிருப்பமாக-வினையமெலாஞ்சோதித்துவிரித்துச்சாற்றே. (௭௱௭)

காசரோகநிதானம்-முற்றிற்று.

---

## உளைமாந்தைரோகநிதானம்.

சாற்றவேதானியத்தைக்குறைத்தபேர்க்கும்-சடுதிலேசிவவதைபண்ணினோர்க்கும், கோற்றவேகுலமடந்தைகற்பழித்துக்- கொடுமையாம்புலைகளவுகட்காமந்தான், போற்றவேபூசைக்குஇடறுநாணல் - புருடனிடஸ்திரீதனையேபிறிக்கின்றோர்க்கும், ஊற்றவேஉளைமாந்தைரோகம்வந்து-உற்பவிக்குமுறுதியென்றேஉரைக்கலாமே. (௭௱௮)

உரைக்கவேஊழித்தீய்க்கிரைகொடாமல்-உட்காந்து அக்கினிதான்மந்தித்தப்போ, பரைக்கவேஅசனத்தைப்பருகினோர்க்கும் பகலுறங்கிஇரவுதனில்விழித்தலாலும், புரைக்கவேபுலால்தனையேபோசித்தலாலும் புணர்ச்சியினின்மயக்கத்திற்பொருந்தலாலும் இரைக்கவே கடுவோட்டமோடினாலும்-எய்திடுமென்றுளைமாந்தையிசைக்கலாமே. (௭௱௯)

இசைக்கவேஉளைமாந்தைநாலதாகும்-இதினுடையநாமத்தைஇயம்பக்கேளாய், வசைக்கவேவாதஉளைமாந்தையோடு- மருவுகின்றபித்தவுளைமாந்தையாகும், திசைக்கவேசேட்பஉளைமாந்தையோடு - செயலானதொந்தஉளைமாந்தையாகும், அசைக்கவேநாவினிடஆண்மைதன்னை அசாத்தியசாத்தியமென்றேயறிந்துஉன்னே. (௭௱௰)

வாதஉளைமாந்தை.

உன்னவேஉறுநெஞ்சுபமுங்கள்பக்கம்- உருமிசினைவழிந்திருமிஉச்சக்கநொந்து, சின்னவேபஞ்சுபோற்சுரமுந்தோன்றி- சீய்க்கட்டியாய்ப்பழுத்துச்சிதறிவீழும், தின்னவேசிலேட்டுமந்தான்மீறிக்காணும்- செறிக்காமல்அசனந்தான்திருப்பிவீழும், கன்னவேகாலுகையில்கசப்புகாணும்-கருகுமேவாதஉளைமாந்தைகாணே. (௪௱௰௧)

பித்தஉளைமாந்தை.

